REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 22 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன் 92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 71 | Friday 22, March, 2024 | 24 பக்கங்கள் | 50/-




## IMF இன் அங்கீகாரம் கிடைத்ததும்

# 337 மில் டொலர் நிதி இலங்கைக்கு கிடைக்கும்

### பொருளாதார கொள்கைகள் தொடர்பில் இரு தரப்புக்கும் இணக்கப்பாடு



சர்வதேச நாணய நிதியத்தின் 02 ஆவது மீளாய்வுக் கூட்டத்தை நிறைவு செய்யும் வகையில், இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் பொருளாதார கொள்கைகள் தொடர்பிலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும்

இலங்கையின் பணவீக்கம் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக குறைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், அதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் பாராட்டு தெரிவித்தனர்.

இலங்கை அமுல்படுத்தியிருக்கும் பொருளாதார மறுசீரமைப்புக்கான வேலைத்திட்டத்தின் பிரதிபலன்கள் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளதாகவும், அதனூடாக சாதகமான முன்னேற்றத்தை அடைந்து வருவதாகவும் நேற்று மத்திய வங்கியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூயர் (Peter Breuer) தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

06

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

# 42 மேலதிக வாக்குகளால் சபையில் தோற்கடிப்பு

### எதிராக 117 வாக்குகள், ஆதரவாக 75 வாக்குகள் மட்டுமே



### மூன்று நாள் விவாதத்துக்கு 4.5 கோடி ரூபா செலவு

சபாநாயகர் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்க்கட்சிகளினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேலதிக வாக்குகளினால் நேற்று சபையில் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும் அதற்கு எதிராக 117 வாக்குகளும் அளிக்கப்பட்டது. இதனையடுத்து 42 மேலதிக வாக்குகளினால் பிரேரணை நேற்று தோற்கடிக்கப்பட்டது.

அண்மையில் அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி சபாநாயகரினால் நிறைவேற்றப்பட்டமை , பொலிஸ் மாஅதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறி சபாநாயகர் செயற்பட்டமை ஆகிய இரு பிரதான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த

06

## ஜனாதிபதி ரணில் இன்று யாழ். விஜயம்

# பலாலி காணி விடுவிப்புடன் 04 பிரதான நிகழ்வுகளில் பங்கேற்பு

**யாழ். விசேட, நாகர்கோவில் விஷேட நிருபர்கள்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (22) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார். காணி விடுவிப்பு, 'உறுமய காணி' உறுதிப்பத்திரம் வழங்கல், விவசாயிகளின் உற்பத்திக்கு நேரடி சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய Farm to Gate என்ற வர்த்தக இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தல் போன்ற நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இதனையடுத்து பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் புதிய கட்டடமொன்றையும் அவர் திறந்து வைக்கவுள்ளார்.

06

# பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி அத்தியாவசிய உணவு பொருட்கள்



பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை நியாயமான விலையில் தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாக கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் தெரிவித்தார். விவசாயி மற்றும் நுகர்வோர் ஆகிய இருவரையும்

06

# நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் முயற்சிகளை எதிர்க்கட்சி சீர்குலைக்கிறது

### சஜித், அனுரவுக்கு பொதுத்தேர்தல் அழகானதல்ல

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற

06

## ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 21-24 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.44 |
| ஸுபஹ் | 04.59 |
| சூரிய உதயம் | 06.14 |
| ழுஹர் | 12.19 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.31 |

# காஸா சிறுவர் நிதியத்துக்கு பெரிய பள்ளிவாசல் நன்கொடை



கொழும்பு, ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் நேற்று நடைபெற்ற விசேட இப்தார் நிகழ்வில் புத்தசாசன மதவிவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவும் கலந்துகொண்டார். இதன்போது, பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர் காஸா சிறுவர் நிதியத்துக்கான நிதியை அமைச்சரிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். (படம்: நிஸ்சங்க விஜேரத்ன)

# நாடு அராஜக நிலைக்கு செல்வதை தடுக்க பணியாற்றியவர் சபாநாயகர்

### நன்றி தெரிவிக்கவே அவசரமாக நாடு திரும்பி ஆதரவளித்தேன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போராட்டத்தின் போது நாடு அராஜக நிலைக்கு செல்வதை தடுப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன துணிவுடன் மேற்கொண்ட செயற்பாடுகள் நன்றியுடன் நினைவு கூரத்தக்கதென, அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கு வெளிநாட்டு விஜயத்தையும் கைவிட்டு தாம், நாடு திரும்பியதாக அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

சர்வதேச நிதி மாநாட்டுக்காக வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டிருந்ததாகவும் அந்த மாநாடு நிறைவு

06

# IMF: இரண்டாவது மீளாய்வு குறித்து அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு



சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான இரண்டாவது மீளாய்வு குறித்து, அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நிதி ஒருங்கிணைப்பு, நிதிக் கொள்கை, நிதித்துறை ஸ்திரத்தன்மை மற்றும் கட்டுப்பாடு உள்ளிட்ட முக்கிய

06



## 03

### நெடுந்தீவு, மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் 32 பேர் கைது

05 இழுவைப் படகுகளும் பறிமுதல்

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை காலம், நேரங்களை வீணடிக்கும் செயல்

### தமிழ் எம்.பிக்கள், விமர்சிப்பதை விடுத்து நலன்சார் திட்டங்களை பேச வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் எதையும் மேற்கொள்ளப் போவதில்லையென, இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கங்களை விமர்சித்து அரசாங்கத்துக்கு எதிராக பேசுவதிலேயே, அவர்கள் காலம்

06

# தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு Higher Education Degree வழங்க தீர்மானம்

### சபையில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு செல்வோரின் நன்மை கருதி எச்.என்.டி., சிலியட், அத்துடன் இரத்மலானை நைட்டா நிறுவனத்தின் கீழ் வரும் மூன்று வருட டிப்ளோமா பாடநெறி ஆகிய மூன்றையும் சேர்த்து மாணவர்களுக்கு உயர் தேசிய Higher Education Degree பட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி

06

# ISIS அமைப்பின் இந்திய தலைவர் உட்பட இருவர் அஸாமில் கைது





ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் இந்தியாவுக்கான தலைவர் ஹரிஸ்ஃ பரூக்கி மற்றும் அவரது நண்பர் ரெஹான் ஆகியோர் அசாமில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பங்களாதேஷில் பதுங்கியிருந்து, ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு ஆட் சேர்த்தல், நிதி திரட்டுதல் மற்றும் இந்தியாவில் பல்வேறுப்பட்ட நாசகார வேலைகளில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட திட்டமிட்டிருந்ததாக

06

# மலையக பாடசாலைகளின் ஆளணி பௌதீக பற்றாக்குறைகளுக்குத் தீர்வு

### புதிய திட்டமூடாக கல்வியமைச்சு கவனம்



மலையக பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க புதிய திட்டம் வகுக்கப்படவுள்ளதாக, மலையக ஒன்றியத்தின் தலைவர் வேலு குமார் எம்.பி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மலையக ஒன்றியத்தின், முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர்

06

# தலைமுடி, தாடியால் வாகனத்தை இழுக்கும் திருச்செல்வமின் சாதனை

### காலிமுகத்திடலில் 24 இல் நிகழ்வு


சாவகச்சேரியைச் சேர்ந்த 60 வயதான செல்லையா திருச்செல்வம், கொழும்பு காலிமுகத்திடலில் தலைமுடியாலும், தாடியாலும் வாகனத்தை இழுத்துச் சாதனை படைக்கவுள்ளார்.

மெய்சிலிர்க்க வைக்கும் இந்த உலக சாதனை நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிறன்று முற்பகல் 10.00 மணி முதல் 11.00 மணி வரை காலிமுகத்திடல் (தாஜ்சமுத்திரா ஹோட்டல் முன்பாக) நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

செல்லையா திருச்செல்வம் (60) கடந்த பத்தாண்டுகளாக தனது தலைமுடியாலும், தாடியாலும் வாகனங்களை இழுப்பது, தனது உடலின்மீது வாகனத்தை

06

# இந்திய முட்டைகளை விடவும் உள்ளூர் முட்டை விலை வீழ்ச்சி



சந்தையில் இந்திய முட்டையின் விலையுடன் ஒப்பிடுகையில் உள்ளூர் முட்டைகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும், உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 40 ரூபாவாகவும் உள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இன்னிலையில் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நகர்வலம்



# அரசுக்கு வாக்குறுதி வழங்கியது போல் இ.போ.சவை இலாபமீட்ட வைத்தோம்

## கடந்த ஆண்டு ரூ. 1098 மில்லியன் இலாபம் - அமைச்சர் பந்துல

இலங்கை போக்குவரத்து சபையில் நிலவிய வெற்றிடங்களுக்கு புதிய ஆளணியினர் நியமிக்கப்பட்டனர்.

சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கே இந்நியமனங்கள் வழங்கப்பட்டதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் மேற்படி நியமனங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் இங்கு அமைச்சர் உரையாற்றுகையில்,

இலங்கை போக்குவரத்துச் சபை கடந்த காலங்களில் மூடப்படும் அளவுக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டது. இதை,தனியார்மயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலவி வந்த வேளையில், மாற்றங்களின் ஊடாக 2025ஆம் ஆண்டுக்குள். இ.போ.சபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவோம் என ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் வாக்குறுதியளித்தோம். ஆனால்,2023இன் இறுதிக்குள் இ.போ.ச நிறுவனம் 1098 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டியதாக கணக்கு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



அத்துடன் இலங்கை போக்குவரத்து சபையானது இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் மிகவும் கடினமான சேவைகளில் ஈடுபடுகிறது. இலங்கை போக்குவரத்து சபையூடாக நாட்டின் எதிர்காலத்திற்கான முக்கிய சேவை வழங்கப்படுகிறது. சலுகை கட்டணத்தில் சீசன் டிக்கெட் வழங்குவதற்கு மட்டும் இ.போ.ச ஊடாக ஆண்டுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாவை அரசாங்கம் மானியமாக வழங்குவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



அநுராதபுரம் மாவட்டத்தில் பால் உற்பத்தியை விருத்தி செய்யும் நோக்கில் விலங்குகளை வெற்றிகரமாக நிர்வகிக்கும் பண்ணையாளர்களுக்கு பால் கறக்கும் இயந்திரம் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவினால் அண்மையில் வழங்கி வைத்த போது பிடித்த படம். (படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## 'முத்துக்கள் வட்ஸப்' குழும ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு

பேருவளை சீனன்கோட்டை 'முத்துக்கள் வட்ஸப்' குழுமத்தின் ஏற்பாட்டிலான இப்தார் நிகழ்வும் பலஸ்தீன மக்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பேருவளை, பங்களாவத்த வரவேற்பு மண்டபத்தில் நடைபெறும். குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தை தாஜுல் மபாஹிரிய்யா ஸாவியா மஸ்ஜிதின் பிரதம இமாம் மௌலவி முகத்த முஷ்ஷாதுலி முஹம்மத் அஸ்லம் (முஅய்யதி) கலந்துகொள்வார்.

## ஆடைகள் சேகரிக்கும் பணிகள் ஆரம்பம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் நகர மக்களால் புத்தளம் மக்களுக்கு பெருநாளை சிறப்பாக கொண்டாட ஒவ்வொரு பெருநாள் நேரங்களிலும் அன்பளிப்பு செய்யப்படும் ஆடைகளை சேகரிக்கும் பணி, தசாப்தத்தை கடந்து இவ்வருடமும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நோன்பு பெருநாளை கொண்டாட ஆசைப்படும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஒன்றாக காத்திருக்கும் போது, ஒரு சிலர் ஒரு சில காரணங்களால் அவர்களுக்கு அணிவதற்கான அழகான, சுத்தமான ஆடைகள் இல்லாமல் ஏங்குகிறார்கள்.

ஆகவே அவரவர் வீடுகளில் இருக்கும் பாவனைக்கு தகுந்த மேலதிக ஆடைகள் இருந்தால், அதனை இல்லாதோருக்கு கொடுத்துதவ விரும்பினால் ஏற்பாட்டு தொண்டர்களுக்கு தொலைபேசி 075 615 2122, 078 909 9992 என்ற அழைப்பு மூலம் அறியப்படுத்தினால் வீடு வந்து பெற்றுக் கொள்ளதொண்டர்கள்தயாராகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இராணுவ படையணிகளுக்கிடையிலான

## 59ஆவது தடகள போட்டி நிகழ்வு இன்று ஆரம்பம்



இலங்கை இராணுவ படையணிகளுக்கு இடையிலான 59 ஆவது தடகள விளையாட்டுப் போட்டி இன்று (22) தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இராணுவ பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் ஹரேந்திர பீரிஸ் தலைமையில் ஆரம்ப விழா நடைபெறவுள்ளது.

59ஆவது இலங்கை இராணுவ படையணிகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் 21 படையணிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 575 வீர வீராங்கனைகள் 26 நிகழ்வுகளில் போட்டியிடவுள்ளனர். அண்மையில் நடைபெற்ற 58ஆவது இலங்கை இராணுவ படையணிகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில், கோலூன்றிப் பாய்தல் ஆண்கள், முப்பாய்ச்சல் ஆண்கள், பெண்கள் மற்றும் ஆண்களுக்கான 10,000 மீற்றர் நடை போட்டி மற்றும் 200 மீற்றர் தொடர் அஞ்சல் ஓட்டம் ஆகியவற்றில் இராணுவ விளையாட்டு வீர வீராங்கனைகள் ஐந்து புதிய தேசிய சாதனைகளைப் படைத்தனர் என்பது குறிப்பிடதக்கது.

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் இன்று நீர் தின நிகழ்வுகள்

உலக நீர் தினம் இன்று (மார்ச் மாதம்) 22ஆம் திகதி உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.1993 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் உலக நீர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் மார்ச் 22 ஆம் திகதி உலகம் பூராகவும் கடந்த 30 வருடங்களாக பல்வேறு நிகழ்ச்சிகளுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

2024ஆம் ஆண்டு உலக நீர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தொனிப் பொருள் "சமாதானத்துக்காக நீர்" என்பதாகும். நீரின் தேவையும் அத்தியாவசியமும் கருதி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கில் இந்நாள் உலகளாவிய ரீதியில் பல்வேறு வேலைத் திட்டங்களோடு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஏற்பாடு செய்துள்ள உலக நீர் தின விழா 2024 இன்று 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 8 மணிக்கு சபையின் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு மையத்தில் (cewas) கேட்போர் கூட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்சவின் பங்குபற்றலுடன் நடைபெறும். இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். டி. தர்மரத்ன விசேட சொற்பொழிவாற்றுவார்.

2024 உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே "சமாதானத்துக்காக நீர்" என்ற தலைப்பில் நடாத்திய சித்திர மற்றும் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன் போது பரிசில்களும் வழங்கப்படும். அத்தோடு சபையில் 25 வருடம் தொடர்ந்து சேவையாற்றிய ஊழியர்கள் கௌரவிப்பு, க.பொ.த.உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்ற சபை ஊழியர்களது பிள்ளைகளுக்கும் நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மத்திய வங்கி சம்பள விவகாரத்தை அரசியலாக்கி

# குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க எவரும் முயற்சிக்க வேண்டாம்

## எதிர்க்கட்சிக்கு நிதி இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

லோரன்ஸ் செல்வநாயகம்

மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என்றும் அந்த நிலைப்பாடு சரி செய்யப்பட வேண்டும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எனினும், இந்த விவகாரத்தை அரசியலாக்கி குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சிக்க வேண்டாம் என எதிர்க்கட்சியை கேட்டுக் கொள்வதாகவும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள உயர்வு பிரச்சினை அரசாங்கத்தாலோ அல்லது நிதியமைச்சாலோ உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. அதனை அரசியலாக்கி லக்ஷ்மன் கிரியெல்ல குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கின்றார். சபையில் தவறான அர்த்தத்தை வழங்க வேண்டாம் என நான் அவரிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

மத்திய வங்கி சட்டம் தொடர்பில் எதிர்க்கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அது தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் கருத்து வித்தியாசமானது.

நாம் அரசாங்கம் என்ற வகையில் நிதி கொள்கையை செயற்படுத்துவதற்கு மத்திய வங்கிக்கு சுயாதீனம் வழங்கியுள்ளோம். அந்த வகையில் எதிர்க்கட்சியில் சிலர் இந்த சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என கேட்கின்றனர். அந்த வகையில் இந்த விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிக்கு முழுமையான தெளிவு இல்லை என்பதையே எம்மால் குறிப்பிட முடியும்.

அரச நிதியை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு மத்திய வங்கியிடம் கிடையாது. அது நிதி கொள்கையை முகாமைத்துவம் செய்கிறது. அது தொடர்பான எதிர்க்கட்சியின் தவறான கருத்து திருத்திக் கொள்ளப்பட வேண்டும். நிதி கொள்கை முகாமைத்துவம் தொடர்பில் முழுமையான அதிகாரம் மத்திய வங்கிக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.ஏ கரீம் காலமானார்



தினகரன் பத்திரிகையின் கொழும்பு கோட்டை முன்னாள் நிருபரும் புகைப்படப்பிடிப்பாளருமான எஸ். ஏ கரீம் நேற்று (21) கொழும்பில் காலமானார். அவர் மரணிக்கும் போது வயது 77. நீண்ட காலமாக ஊடகத்துறையில் பணியாற்றி வந்த அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சிரேஷ்ட உறுப்பினராவார்.

இலக்கம் E U 2/5, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர இல்லத்தில் இருந்து அன்னாரின் ஜனாஸா நேற்று பிற்பகல் வியாழக்கிழமை 3.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## மக்கொனை அஹதியாவின் இப்தார் நிகழ்வு நாளை

மக்கொனை அஹதியா பாடசாலை பன்னிரண்டாவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள விசேட இப்தார் நிகழ்வு நாளை (23) சனிக்கிழமை மக்கொனை, இந்திரிலிகொடை, அல்ஹஸனியா மஹா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அஹதியாப் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். உவைஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக உலக உணவுத் திட்ட கூட்டு செயலகத்தின் பணிப்பாளர் நாயகமும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளருமான எம். எச்.ஏ.எம். ரிப்லான் கலந்து கொள்வதோடு விசேட பேச்சாளராக மௌலவி எம்.எஸ். எம். ரிபாய் (தீனி) கலந்து சிறப்பிக்க இருப்பதாக அஹதியா பாடசாலை செயலாளர் ஜிப்ரியா இப்றாஹிம் தெரிவித்தார்.

இந்நிகழ்வினை வெளிநாட்டு வாழ் மக்கொனை அஹதிய்யாப் பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் மற்றும் ஊர் மக்கள் வழங்குகின்ற நிதியிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அஹதிய்யாப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களினது ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம் பெறுகின்றது.

இந்நிகழ்விற்கு அஹதிய்யாப் பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக சபை அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## அக்கர தாஅட்ட பள்ளிவாசல் 2ஆம் மாடி வக்பு செய்யும் நிகழ்வு

சீனன்கோட்டை அக்கர தாஅட்ட பள்ளிவாசல் 2ஆம் மாடி திறப்பும் வக்பு செய்யும் நிகழ்வும் அண்மையில் சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது.

அஸர் தொழுகையைத் தொடர்ந்து திறப்பு விழாவும் வக்பு செய்யும் நிகழ்வும் வெகுவிமர்சையாக இடம் பெற்றது. இந்நிகழ்வில் சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் தலைமையிலான நிர்வாக சபை உறுப்பினர்கள், உலமாக்கள் உட்பட ஊர் பிரமுகர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் விசேட பேச்சாளராக வெலிகம கபுவத்த ரிபாயிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.எஸ்.எம்.அப்துல்லா (ரௌலி) கலந்துகொண்டார்.



கலீபத்துஷ் சாதுலி மௌலவி எம். எம்.செய்னுல் ஆப்தீன் பஹ்ஜியினால் வக்பு நிகழ்வு இடம்பெற்றது. ஹிகம் ஹாஜியாரால் கொள்முதல் செய்யப்பட்ட சுமார் 12 1/2 பேச் நிலப் பகுதியிலே கடந்த 2023319 இல் பள்ளி நிர்மாணம் பெற்று வக்பு செய்யப்பட்டது. ஒரு வருடத்தில் அதன் இரண்டாம் மாடியும் நிறைவு பெற்று திறப்பு நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 92ஆவது அகவையில் காலடிவைத்துள்ள தினகரன் பத்திரிகையின் பணி சிறக்கட்டும்

### சீனன்கோட்டை சர்பான் முஸம்மில் வாழ்த்து



92ஆவது அகவையில் கால்பதித்துள்ள இலங்கையின் தேசிய நாளிதழான தினகரன் பத்திரிகையின் பணி மென்மேலும் சிறக்க தான் வாழ்த்துவதாக சீனன்கோட்டை இளம் மாணிக்க வியாபாரியும் சமூக சேவையாளருமான சர்பான் முஸம்மில் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தினகரன் பத்திரிகையின் 92ஆவது பிறந்த தினத்தையிட்டு அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எனது வாசிப்புத்துறையின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றிய ஒரு பத்திரிகையாக தினகரன் பத்திரிகையை நான் இன்றும் பார்க்கிறேன், படிக்கிறேன். இது எனது அபிமான பத்திரிகை. பாடசாலையில் படிக்கின்ற காலம் முதல் இற்றை வரை அதிகம் பார்க்கும், வாசிக்கும் பத்திரிகையாக தினகரன் பத்திரிகை காணப்படுவதோடு தினகரன் குடும்பத்துடனும் நெருங்கிய தொடர்பையும் பேணியும் வருகின்றேன். எனது ஊரின் செய்திகளையும் தாங்கி வரும் இப்பத்திரிகை எவ்வித பக்கச்சார்புமின்றி 100வீத ஊடக தர்மத்தையும் பேணி வருவதனால் எமது ஊரிலும் அனைவர் மத்தியிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு பத்திரிகையாக தினகரன் காணப்படுகிறது.

ஏனைய தமிழ் பேசும் பத்திரிகைகள் தான் வந்தபாதையை, நோக்கத்தை மறந்து வெளிவருகின்ற நிலையில் தினகரன் பத்திரிகை மாத்திரம் தனது நடுநிலைத்தன்மையை பேணி வருவதையிட்டு அதன் பிரதம ஆசிரியர் உட்பட ஆசிரியர் குழாத்தினருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதாகவும் சர்பான் முஸம்மில் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

மனித நேய மக்கள் கூட்டணி

# தேர்தலை இலக்காக கொண்டு உருவாகியுள்ள கட்சி அல்ல

பிரபா கணேசன்

மனித நேய மக்கள் கூட்டணி தேர்தலை இலக்காகக் கொண்டதல்ல. தேர்தல் காலங்களில் மாத்திரம் தோன்றி பின்னர் காணாமல் போய்விடும் கூட்டணிகளைப் போன்றல்லாமல், பாரிய அரசியல் சக்தியாக எமது கூட்டணி உருவெடுக்குமென ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் மனித நேய மக்கள் கூட்டணியின் செயலாளருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

மனிதநேய மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு புதன்கிழமை (20) கொழும்பில் நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மனித நேய மக்கள் கூட்டணி தேர்தலை இலக்காகக் கொண்டதல்ல. ஊழல், மோசடியற்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

தேர்தல் காலத்தில் பல கூட்டணிகள் உருவாக்கப்படுவதும், பின்னர் அவை பிளவுபட்டுச் செல்வதும் வழமையாகக் காணப்படுகிறது.

தேர்தல் காலங்களில் மாத்திரம் நானும் அரசியல்வாதிதான் எனக் கூறிக் கொண்டு சிலர் வருவதும், பின்னர் அவர்கள் காணாமல் போய் விடுவதுமே தற்போதுள்ள உண்மை நிலவரமாகும். ஆனால் எமது கூட்டணி தேர்தல் காலங்களிலும் ஒன்று பட்டு செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

பல முரண்பாடுகளை கடந்து இந்த கூட்டணியை நாம் உருவாக்கியிருக்கின்றோம். இக்கூட்டணி எதிர்காலத்தில் பலம் மிக்க அரசியல் சக்தியாக உருவெடுக்கும். பல முக்கிய தரப்பினர் எம்முடன் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்றார்.

## தவக்கால சிந்தனை



# இயேசுவின் வாழ்வு தரும் வார்த்தைகள்

இன்றைய நற்செய்தியில் மக்களில் சிலர் மிகப்பெரிய இறைவாக்கினராகிய இயேசு இறைவனுக்கு விரோதமான கருத்துக்களை போதித்தார் என்பதற்காக கல்லெறிவதற்காக கற்களை எடுக்கின்றனர்.

எவ்வாறு ஒரு மனிதன் கடவுளின் மகனாக முடியும்? இது முடியவே முடியாது என இயேசுவின் செய்தியும் செயல்களும் யூதத் தலைமைகளையும் அவர்களது அதிகார நிலைகளையும் சவாலுக்குட்படுத்தியது. அவர்களால் இயேசுவின் செயல்களில்

கடவுளின் செயலாற்றலைக் காண முடியவில்லை. அவரை ஓர் ஆபத்தாக நோக்கி அவரைமுடித்துவிட கங்கணம் கட்டினர்.

அவ்வாறே நாமும் நமது கிறிஸ்தவ நம்பிக்கையினை உண்மையாக வாழ்கின்றபோது நமது கருத்துக்களுடன் இணங்கிச் செல்லாதோரைச் சந்திக்க முடியும். அத்தகையோர் நம்மைத் தரக்குறைவாக நடத்தி நமது விழுமியங்களை சவாலுக்குட்படுத்த முடியும். நாம் கடவுளை மறுதலிக்கும் மதிக்கத் தவறும் உலகத்தில் வாழ்கின்றோம். நாமும் மற்றவர்களை துஷ்பிரயோகம் செய்யும், அவமானத்திற்குள்ளாக்கும், மரணத்திற்குள் தள்ளும் சமூகத்தில் வாழ்கின்றோம்

சிலரது எதிர்ப்புக்கும் பலரது புறக்கணித்தலுக்கும் மத்தியில் நாம் எவ்வாறு வாழ வேண்டுமென்கிற உயர்ந்த மாதிரியை இயேசு நமக்குத் தருகின்றார்.

எவ்வாறு இயேசு எல்லா மனிதரையும் இரக்கத்துடனும் மன்னிப்புடனும் நடத்தினாரோ அவ்வாறே நாமும் அடுத்தவரை நடத்த வேண்டும்.

அவரது வார்த்தைகள் நமக்கு வாழ்வு தருவதாக அமைகிறது. அவரது துணையுடன் நாம்

விடாமுயற்சியுடன் முன்னேறி ஒரு நாள் அவரது நிலைவாழ்வில் கலந்துகொள்ள முடியும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)




# பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படும் நேரங்கள்

நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேர காலங்கள் தொடர்பில் அறிவித்துள்ளார்கள். அந்த வகையில்

'அதானுக்கும் இகாமத்திற்கும் மத்தியில் கேட்கப்படும் பிரார்த்தனை நிராகரிக்கப்பட மாட்டாது' என அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் திர்மிதி: 212).

அதேபோன்று, ஒவ்வொரு இரவிலும், இரவின் மூன்றில் ஒரு பகுதி எஞ்சி இருக்கும் போது அல்லாஹ் கீழ் வானத்திற்கு இறங்குகின்றான், 'என்னிடத்தில் யாரும் பிரார்த்திப்பவர் இருக்கின்றாரா? அவரது பிரார்த்தனையை நான் ஏற்றுக்கொள்கின்றேன், என்னிடத்தில் யாரும் கேட்கக்கூடியவர்கள் இருக்கின்றார்களா? அதை நான் அவருக்குக் கொடுத்து விடுகின்றேன், என்னிடத்தில் பாவமன்னிப்புத் தேடுபவர்கள் இருக்கின்றார்களா? அவர்களது பாவங்களை நான் மன்னித்து விடுகின்றேன். பஃஜ்ரு உதயமாகும் வரை இது நிகழ்ந்து கொண்டிருக்கும்' எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்).

ஒரு அடியான் அல்லாஹ்விற்கு மிக சமீபமாக இருக்கும் சந்தர்ப்பம் அவன் ஸுஜூதில் இருக்கும் சந்தர்ப்பமாகும். எனவே அந்த நேரத்தில் அதிகம் பிரார்த்தனை செய்யுங்கள். பிரார்த்தனையில் ஆர்வம் காட்டுங்கள். உங்கள் பிரார்த்தனையை அவன் ஏற்றுக்கொள்வான்' எனவும் அன்னார் கூறியுள்ளார்கள். (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்).

இதேபோன்று பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் இன்னும் பல சந்தர்ப்பங்கள் இருப்பதையும் நபி (ஸல்) அவர்கள் எடுத்துக்கூறியுள்ளார்கள். அவற்றில் நோன்பாளி நோன்பு துறக்கும் நேர காலத்தில் கேட்கும் பிரார்த்தனையும் அடங்கும். ஆகவே பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேர காலங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதில் ஒவ்வொருவரும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றில் தற்போதைய நோன்பு துறக்கும் வரையான நேரகாலம் குறிப்பிடத்தக்கதாகும்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# மகாவலி திட்டத்தில் கைவிடப்பட்டிருந்த 'A', 'B' வலயங்களில் துரித அபிவிருத்தி

அமரர் காமினியின் ஜனன நிகழ்வில் ஜனாதிபதி



நாட்டை நவீன விவசாயப் பொருளாதாரத்தை நோக்கி நகர்த்தும் பயணத்தின் போது, மகாவலி திட்டத்தில் கைவிடப்பட்ட ஏ , பி வலயங்களை விரைவாக அபிவிருத்தி செய்து அதன் பலனை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

நாட்டின் நீர்ப்பாசன வரலாற்றில் தனித்துவமான மாற்றத்தை ஏற்படுத்திய மகாவலி திட்டத்தை, காமினி திசாநாயக்க செயற்படுத்தியிருக்காவிடின் இன்று நாடு அரிசியில் தன்னிறைவு அடைந்திருக்காதென வும்,அவசியமான மின்சாரத்தை பெற முடியாமல் போயிருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கவின் 82 ஆவது ஜனன தின நிகழ்வில் (20) கலந்து கொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள காமினி திசாநாயக்கவின் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

காமினி திசாநாயக்கவின் கடந்த கால நினைவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அன்னாரின் அர்ப்பணிப்பு அனைவருக்கும் முன்னுதாரணமாகும் என்றும் கூறினார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காமினி திசாநாயக்கவின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

சர்வமத வழிபாடுகளின் பின்னர் ஜனன தின நிகழ்வுகள் ஆரம்பமானதுடன், மல்வத்து பீடத்தின் களுத்துறை மாவட்ட பிரதம சங்கநாயக்கர், வாதுவ மொல்லிகொட தேகம்பத மகா விகாரை விகாராதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிக்குகள் முன்னணியின் தலைவருமான போபிட்டிய தம்மிஸ்ஸர நாயக்க தேரர் அனுசாசன உரை நிகழ்த்தினார்.

நாட்டுக்காக உயிர்நீத்த இராணுவ வீரர்கள், 1994 ஒக்டோபர் 23 ஆம் திகதி காமினி திசாநாயக்கவுடன் தொட்டலங்க குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்கள் மற்றும் தேசிய வீரர்கள், காமினி திசாநாயக்க மன்றத்தின் ஸ்தாபகர் மறைந்த சட்டத்தரணி ஶ்ரீமா திசாநாயக்க உள்ளிட்டவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் காமினி திசாநாயக்க மன்றத்தின் உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க வரவேற்புரை ஆற்றினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, காமினி திஸாநாயக்கவின் பாத்திரம் ஒரு அரசியல் முன்னுதாரணம் என்று குறிப்பிட்டார். மக்களுக்கு சேவை செய்வதன் மூலமே அவர் பிரபலமடைந்ததாக சுட்டிக்காட்டிய கரு ஜயசூரிய, அவரின் சரியான முகாமைத்துவம் இலங்கையை துரிதமாக அபிவிருத்தி செய்ய உதவியது என்றும் குறிப்பிட்டார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநரும் காமினி திஸாநாயக்க மன்றத்தின் தலைவருமான நவீன் திஸாநாயக்க உரையாற்றுகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர் என்ற ரீதியில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார முறை நாட்டுக்கு ஏற்றது என தனது தந்தை எப்போதும் கூறி வந்ததாக தெரிவித்தார். எதிர்காலத்திலும் நடுநிலையான வலதுசாரி இயக்கம் உருவாகும் என நம்புவதாக தெரிவித்த அவர், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறானதொரு தலைவர் மக்களால் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

# 2024:சர்வதேச கைத்தொழில் கண்காட்சி கொழும்பில் ஏற்பாடு

ஜூன் 19 முதல் 23 வரை BMICH இல்



நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட புதிய முயற்சியாக சர்வதேச கைத்தொழில் துறை கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஜூன் 19 முதல் 23 வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இக்கண்காட்சி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.தேசிய மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்கு இக்கண்காட்சி தொழில்துறையின் ஒரு நினைவுச்சின்னமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரனவின் ஆலோசனைப்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சி, கைத்தொழில் அமைச்சுக்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குமிடையிலான கூட்டு முயற்சியாகும்.

06




# நெடுந்தீவு, மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் 32 பேர் கைது

இலங்கை கடற்பரப்புக்குள்அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 32 தமிழக மீனவர்கள்,ஐந்து விசைப்படகுகளுடன் கைது செய்யப்பட்டனர். தமிழக மீன்பிடி துறைமுகங்களிலிருந்து மீன்பிடிக்க வந்த இவர்கள், நெடுந்தீவு கடற்பரப்பில் மூன்று படகுகளுடன் மீன் பிடித்துக் கொண்டிருந்த 25 மீனவர்களும் மன்னார் கடற்பரப்பில் இரண்டு விசைப்படகுகளுடன் மீன்பிடித்துக் கொண்டிருந்த 07 தமிழக மீனவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கும் மன்னார் கடற்படை முகாமுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் . கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை 05 படகுகளுடன் மன்னார் மற்றும் யாழ்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் நேற்று (21) ஒப்படைத்துள்ளனர்.

# விசேட குழுவின் ஆரம்ப நாளிலேயே அதிரடிக் கைதுகள்

பாதாள உலகக் கும்பலை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயல்பட்டுவரும் விசேட குழுவின் ஆரம்ப இரண்டு நாள் நடவடிக்கையில்,குழுவைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் அடங்கலாக மொத்தம் 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

06



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 09ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 11

### குறள் தரும் சிந்தனை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை

பெற்றோர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள் என இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாக இருப்பது இல்லறம் நடத்துவோர் கடமையாகும்.

## தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் உலக நீர் தினம்

ஐக்கிய நாடுகள் சபை சில தினங்களை விஷேட தினங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அந்தந்தத் தினங்களில் அந்தந்த விடயங்கள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் எதிர்பார்ப்பிலேயே இத்தினங்கள் பிரகடனப்பட்டு இருக்கின்றன.

அந்த வகையில் 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு குறித்த ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் மாநாட்டின் முடிவில் உலகம் முழுவதும் நீர் தினம் அனுஷ்டிப்பது பற்றிய யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி ஐ.நா பொதுச் சபை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாகப் பிரகடனப்படுத்தியது. அதற்கேற்ப 1993 முதல் உலக நீர் தினம் ஒவ்வொரு தொனிப்பொருளின் கீழும் வருடா வருடம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இன்றைய காலகட்டத்தில் தண்ணீரின் முக்கியத்துவம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

மனிதன் நீர்வளத்தை வீண்விரயமின்றி தன் தேவைகளுக்காகத் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டியவனாக உள்ளான். ஆழ்கடலில் வாழும் உயிரினங்களுக்கும் பாலைவனத்தில் வாழும் உயிரினங்களுக்கும் நீரின்றி வாழ்க்கை இல்லை. நீரே பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கிறது. பூமியின் மேற்பரப்பு 71 சதவீதம் நீரால் சூழப்பட்டிருக்கிறது. அதில் 0.001 சதவீத நீர் வளிமண்டலத்தில் மிதக்கிறது. 68 சதவீத நன்னீர் பனிக்கட்டியாக உறைந்திருக்கிறது. எஞ்சியுள்ள 30 சதவீத நீர் நிலக்கீழ் நீராகக் காணப்படுகிறது. எஞ்சிய 2 சதவீத நீர்தான் நன்னீர் ஏரி, ஆறு, ஓடை, நிலத்தடிநீராக இருக்கிறது.

இன்று மனிதனுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடத்திற்கு அடுத்தபடியாக சுத்தமான குடிநீரும் இடம்பிடித்துள்ளது. அந்தளவுக்கு நீரின் தேவை இன்று அதிகரித்துள்ளது.

உணவு உடை இல்லை என்றால் அவற்றை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் நீர் இல்லை என்றால் அதனை உற்பத்தி செய்யவே முடியாது. நீர் உயிரின் ஆதாரம். நீர் இல்லை என்றால் இந்த உலகில் உயிருள்ள ஜீவன்கள் இருக்காது.

நீரின் பங்களிப்பு இல்லாமல் உடலில் இயக்கம் இருக்காது. குருதிக் கலங்களுக்கு தேவையான உயிர்ச்சத்துகளைக் கொண்டு செல்கின்ற அதே வேளையில், உடலில் சேரும் கழிவுகளை நீர்தான் வெளியேற்றுகிறது. உடலின் வெப்பநிலையைச் சமநிலையில் வைத்திருப்பதும் மூளையும் முதுகெலும்பும் அதிர்ச்சியால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதும் நீரால்தான்.

அதனால்தான் திருவள்ளுவர், 'நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும், வானின்று அமையாது ஒழுக்கு' என்றுள்ளார். நீர் இல்லாமல் இந்த உலகத்தில் எந்த உயிரினமும் நிலை பெற்று வாழ முடியாது. அந்த நீரை உலகத்திற்கு வழங்குகின்ற மழை இல்லையென்றால் இவ்வுலகில் எந்த ஜீவராசிகளும் வாழ்ந்திட முடியாது. அதுதான் உண்மை.

இருந்த போதிலும் நீரின் முக்கியத்துவம் உணரப்படாத நிலைமையை மக்கள் மத்தியில் பரவலாகக் காண முடிகிறது. எவ்வித பற்றாக்குறையும் இன்றி தண்ணீர் கிடைக்கப்பெறுவதன் வெளிப்பாடே இது. இதன் விளைவாக கழிவுகள் கொட்டப்பட்டு தண்ணீர் அசுத்தப்படுத்தப்படுவதும் வீண்விரயம் செய்யப்படுவதும் பெரிதும் அதிகரித்துக் காணப்படுகிறது. அத்தோடு நீர் ஆதாரங்களும் மனித தேவைகளுக்காக அழிக்கப்பட்டு அவற்றில் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

அதேநேரம் நீரின் முக்கிய ஆதாரமாக விளங்கும் காடுகளையும் மனிதன் தன் தேவைகளுக்காக அழித்து வருகின்றான். இவற்றின் விளைவாக நீர் அருகிவிடக்கூடிய அபாயமும் நிலவுகின்றது.

மழைநீர் நிலத்தினுள் செல்வது அவசியம். அத்தோடு நீர்நிலைகளின் நீர்மட்டமும் உயர வேண்டும். அப்போதுதான் அப்பிரதேசத்திலுள்ள கிணறுகளின் நீர்மட்டம் உயரக்கூடியதாக இருக்கும். ஆனால் கொங்கிறீட் வீதிகளும், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் குப்பைகளும் நாடெங்கிலும் பரவலாக அதிகரித்துள்ளன. அவை மழைநீர் மண்ணுக்குள் செல்வதைத் தடுப்பவையாக அமைந்துள்ளன. அதனால் நீர்புக முடியாத தடுப்பான்கள் போன்று பரவியுள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை ஒழுங்குமுறையாக அப்புறப்படுத்துவதிலும் கவனம் வேண்டும்.

தற்போது எவ்வித தட்டுப்பாடுகளும் இன்றி தாராளமாக தண்ணீர் கிடைக்கப் பெறலாம். அதன் விளைவாக தண்ணீரின் முக்கியத்துவதை உணர்ந்து கொள்ள முடியாதிருக்கலாம். ஆனால் தண்ணீர் பற்றாக்குறைக்கு முகம்கொடுத்துள்ள நாடுகளும் பிரதேசங்களும் தண்ணீரின் முக்கியத்துவத்தைத் தெளிவாக உணர்ந்துள்ளன.

ஆகவே நீர் வளத்தைப் பேணிப் பாதுகாப்பதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# உலக தமிழ் ரசிகர்கள் கொண்டாடும் எடிசன் திரைவிருது விழா சென்னையில்


எடிசன் விருது குழுத் தலைவர் செல்வகுமார்

உலகத் தமிழர்களால் இணையம் மற்றும் சமூக வலைதளங்கள் மூலம் வாக்குகளைப் பெற்று நடைபெறும் எடிசன் திரைவிருதுகள் விழா சென்னை வர்த்தக மையத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை வெளியீடு கண்டு, திரைப்படங்கள் தியேட்டர் மற்றும் OTT தளங்களில் வெளியீடு கண்ட திரைத்துறை சார்ந்த நடிகர் நடிகைகள், இயக்குனர்கள், இசையமைப்பாளர்கள், பின்னணி பாடகர்கள், ஒளிப்பதிவாளர்கள், எடிட்டர்கள், கலை இயக்குனர்கள், சண்டைப் பயிற்சியாளர்கள் நடன இயக்குனர்கள் போன்றவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட உள்ளனர்.

இந்நிகழ்வில் கடந்த காலங்களில் எடிசன் திரை விருது பெற்றவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும், கனடா, அவுஸ்திரேலியா, லண்டன், இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளிலிருந்து திரைக்கலைஞர்களும், ஜான் பிரிட்டோ நடனக் குழுவுடன் இணைந்து கலைநிகழ்வு நடத்த உள்ளனர்.

இந்நிகழ்வில் பார்வையாளர்களாக எடிசன் விருதுக்கு வாக்களித்த ரசிகர்கள் ஆவணத்தைக் காட்டி பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள உள்ளனர் என எடிசன் விருது குழுத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.




# நீர்வளத்தை திட்டமிட்டுப் பயன்படுத்த தவறினால் உயிரின வாழ்வுக்கு ஆபத்து!

எமது உலகம் சந்தித்துள்ள ஒவ்வொரு யுத்தமும் இயற்கை வளமொன்றை மூலகாரணமாகக் கொண்டதாகும். அதை எம்மால் மறுக்க முடியாது. அதற்கு நீர் வளமும் விதி விலக்கல்ல.

இன்று உலக நீர் தினம். இந்தியாவின் பெங்களூர் போன்ற நகரங்கள் நீர்ப்பற்றாக்குறையால் தவிப்பதை இன்று நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்நிலையானது 'சமாதானத்துக்கான நீர்' என்ற உலக நீர்தினக் கருப்பொருளை மேன்மேலும் நியாயப்படுத்துகிறது. பெங்களூர் நகரம் எதிர்கொள்ளும் சவால்களை இலங்கையின் உலர்வலயம் மட்டுமன்றி முழுத்தீவும் ஏதேனுமொரு வகையில் எதிர்கொள்கிறது.

இந்த நெருக்கடி நிலைமை நீருக்கான ஒப்புரவுமிகு அணுகலின் அவசரத் தேவையை வலியுறுத்தி நிற்கிறது. காலநிலை மாற்றம், சனத்தொகை வளர்ச்சி, வளங்களின் முறையற்ற முகாமைத்துவம் போன்ற அச்சுறுத்தல்களின் மத்தியில் அது ஒரு மனித உரிமையாகப் பார்க்கப்படுகிறது.




முன்னொரு காலத்தில் ஏரிகளால் நிறைந்து காணப்பட்ட பெங்களூர் துரித நகரமயமாக்கலுக்கு ஆட்பட்டது. நிலங்களும் நீர்ப்பரப்புகளும் அத்துமீறிப் பிடிக்கப்பட்டன. எஞ்சியிருந்த கொஞ்சநஞ்ச நீர்நிலைகளும் மாசடைந்தன. கட்டடங்கள் பெருகி நகரின் வளங்கள் மீது பெரும் அழுத்தத்தைப் பிரயோகித்தன. நீண்ட தூரத்திலும் ஆழத்திலிருந்தும் கிடைக்கப்பெறும் நீருக்காக பெங்களூர் நகரம் ஏங்கி நிற்கிறது. அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட நீர் கிடைக்காமல் நகரவாசிகள் தவித்து நிற்கிறார்கள்.

## இன்று உலக நீர்தினம்

இலங்கையின் உலர்வலயம், வரலாற்றுரீதியாகப் பல வரட்சி நிலைமைகளைக் கடந்து வந்தது. காலநிலை மாற்றம் மழை பெய்யும் பாங்கைக் குலைத்ததால் உலர்வலய மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவை தனிப்பட்ட சம்பவங்களல்ல. மாறாக முரண்பாட்டுக்கான மையமாக நீர்ப்பற்றாக்குறை காணப்படுகிறது என்ற உலகளாவிய போக்கினை இவை நியாயப்படுத்துகின்றன.

2024 ஆம் ஆண்டுக்கான உலக நீர்தினம் ஒரு தெளிவான செய்தியைச் சொல்கிறது. நீர்ப்பாதுகாப்புக்கான திறவுகோல் கூட்டுறவேயன்றி போட்டியல்ல என்பதே அதுவாகும். நீர் என்பது அனைவருக்குமானது. எல்லைகளால் பிரிக்கப்பட முடியாதது. நீர்வள நாகரிகத்தின் அடியோடு வந்த சமூகம் எங்கள் சமூகம். அனைவருக்கும் நீருக்கான ஒப்புரவுமிகு அணுகலை வழங்க வேண்டியது எமது பொறுப்பல்லவா?

இந்த ஒப்புரவுமிகு அணுகல் என்பது நீரின் அளவுடன் மட்டும் நின்று விடாது. அது நீரின் தரத்தையும் உள்ளடக்கியது. கைத்தொழில் கழிவுகளும், மிகையான உரப்பாவனை, கிருமிநாசினிகளின் பாவனை காரணமாக நீரில் உள்ள இரசாயனங்கள் பெரும் அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருக்கின்றன.

நிலைபேறான நடவடிக்கைகள் இங்கு தவிர்க்க முடியாததாகின்றன. இன்றைய நீர் தினத்திலே நாம் அனைவரும் இணைந்து அரசாங்கம், தனிநபர்கள், சமூகங்கள் என்ற பாகுபாடின்றி நீர் முரண்பாட்டுக்கானதல்ல, சமாதானத்துக்கானது என்பதை உறுதி செய்வோம். நீருக்கான எங்கள் ஒவ்வொருவரது தவிப்புகளிலிருந்தும் மற்றவர்கள் கற்றுக் கொள்வோம்.

நீருக்கான ஒப்புரவுமிகு அணுகல் என்ற மனிதஉரிமையை அனைவரும் அனுபவிப்பதற்காக நாம் கரம் கோர்ப்போம்.

1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் செய்யப்பட்ட சிபாரிசையடுத்து மார்ச் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐ.நா.பொதுச்சபை பிரகடனம் செய்தது. அதைத் தொடர்ந்து இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. நீர்வளத்தை மனிதன் தன் தேவைக்குத் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்துவதற்காகவே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

நீரின்றி உலகமே இல்லை. எல்லா வளங்களுக்கும் மூலவளம் நீரே. உலக மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த உன்னத பொக்கிஷமே நீர். நீர்வளமானது சகல உயிரினங்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவையாகும். அதனைப் பயன்படுத்துவோர்களிடையே மேலும் மேலும் தேவைகள் அதிகரிப்பதனால் இன்று நீர் போட்டிப் பொருளாகவும், சந்தைப் பொருளாகவும் கூட மாறிவிட்டது.

நீர் உயிரின் ஆதாரம். உயிர்களனைத்துக்கும் அதுவே ஜீவாதாரம். நீர் இல்லை என்றால் இந்த உலகிலும் உயிருள்ள ஜீவன்கள் இருக்கமாட்டாது. உணவு இல்லை என்றால் அதனை உற்பத்தி செய்து கொள்ளலாம். உடை இல்லை என்றாலும் அதனையும் உற்பத்தி செய்து கொள்ளலாம். ஆனால் நீர் இல்லாது போய்விட்டால் அதனை எந்த ஒரு சக்தியாலும் உற்பத்தி செய்யவே முடியாது.

மனித சமுதாயத்துக்கு நீரின் பயன் அளப்பரியது. பிறப்பிலும், வாழ்விலும், இறப்பிலும் கூட இணை பிரியாத இன்றியமையாத சாதனமாக விளங்குவது தண்ணீர். நீரின்றி நிலமில்லை, நிலமின்றி நீரில்லை எனும் தத்துவத்தைப் போதிக்கும் மகத்துவம் நிறைந்த தண்ணீரின் பெருமைகளை மதங்களும் மகிமைப்படுத்துகின்றன.

ஒவ்வொரு வருடமும் உலக நீர்தினத்துக்கென ஒரு தொனிப்பொருள் பிரகடனம் செய்யப்படுகிறது. இந்த ஆண்டின் தொனிப்பொருள் 'சமாதானத்துக்கான நீர்' என்பதாகும்.

நீர்வளத்தின் முக்கியத்துவம் எல்லாக் காலங்களிலும் உணரப்பட்டு வந்துள்ளது. உலக வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும்போது புகழ்பெற்ற உலக நாகரிகங்கள் எல்லாம் நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்டே தோன்றியுள்ளன. எனவே நாகரிக எழுச்சியின் மூலமே நீர் என்பது புலனாகின்றது.

பூமியின் நிலப்பரப்பில் 75 சதவீதம் இருப்பது நீர் ஆகும். எனினும் உலக சனத்தொகையின் ஒவ்வொரு நான்கு பேரிலும் மூவர் அருந்துவதற்கு தூய நீரின்றி அவதிப்படுகின்றனர். 33 சதவீதமானவர்களுக்கு தூய குடிநீர் கிடைப்பதில்லை. உலக நீர்ப்பரப்பில் 97.5 சதவீதம் உப்பு நீராகவும், 2.5 சதவீதம் நன்னீராகவும் உள்ளது. நன்னீர்ப் பரப்பிலும் 69 சதவீதம் பனிக்கட்டியால் மூடப்பட்ட பிரதேசமாகும். 30 சதவீதம் நிலக்கீழ் நீர். 3 சதவீதம் நன்னீர் ஏரிகளும், நதிகளும் ஆகும். எஞ்சிய பகுதி ஈரலிப்பு தரைப் பிரதேசங்களாகும். உலகளாவிய ரீதியில் பார்க்கும்போது நீரை அதிகமாகப் பயன்படுத்தும் துறை விவசாயமாகும். 85 சதவீதம் நீர் விவசாயத்துக்காக பயன்படுத்தப்படுகின்றது. கைத்தொழில்துறை 10 சதவீதத்தைப் பயன்படுத்துகின்றது. எஞ்சிய 5 சதவீதமே வீட்டுப் பாவனைக்குரியது.

எனவே, அருமையாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையும்.

கலாபூஷணம் **பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# தரமான ஊடக தலைமுறையொன்றை உருவாக்கும் Kaleidoscope 2024 Screen media for Gen-Z திட்டம்

ஊடகங்களின் அனுபவத்தையும் நடைமுறை அறிவையும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் நோக்கில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு *'Kaledoscope 2024 Screen media for GenZ'* என்ற கற்கைநெறியை ஆரம்பித்துள்ளது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் இக்கற்கைநெறி நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு, ஜனாதிபதி ஊடகப் பிரிவு, அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள், கல்விமான்கள், ஊடகத்துறையிலுள்ள நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



ஊடகப் பிரிவுகள் செயற்பாட்டில் உள்ள 31 பாடசாலைகளில் இருந்து 158 மாணவர்கள் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, வாரத்திற்கு ஒரு நாள் என்ற அடிப்படையில் 16 வாரங்கள் இக்கற்கை நெறி முன்னெடுக்கப்படவுள்ளது.

யுனிலீவர் லங்கா நிறுவனம், SLIT கல்வி நிறுவனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் ஆகியன இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுசரணை வழங்குகின்றன.

நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கு ஊடகப் பின்னணி தொடர்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சுதீர நிலங்க விதான, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர்களான பொறியியல் நிபுணர் ஸ்டான்லி ஹெட்டியாராச்சி மற்றும் நதீரா மடுகல்ல ஆகியோர் விளக்கமளித்தனர்.

மூத்த ஊடகவியலாளர் உதம் சதரசிங்க, மூத்த கலைஞர் சுதத் தேவப்பிரிய, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் ஊடகப் பிரிவின் தலைவர் பந்துல பி. தயாரத்ன ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இக்கற்கை நெறியின் இரண்டாம் கட்டமாக, திறமையை வெளிக்காட்டும் மாணவர்களுக்கு 05 பிரிவுகளில் 06 நாட்கள் மேலதிக அறிவூட்டல்கள் வழங்கப்படவுள்ளன. நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் இந்த பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இலங்கையிலுள்ள அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் இந்த வேலைத்திட்டத்துடன் கைகோர்த்துள்ளதுடன், நிகழ்ச்சியில் பங்குபற்றும் மாணவர்கள், முன்னணி ஊடக நிறுவனங்களுக்குச் சென்று, இரண்டு நாள் நடைமுறை அறிவைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.





ஊடகவியலாளர்களுக்கு அவர்களின் வர்த்தக நாமம் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய புரிதல் இருக்க வேண்டும் என்பதால், தனியார் துறையில் அதிக அனுபவமுள்ள நிறுவனங்களில் அந்த அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இக்கற்கைநெறி மாணவர்களுக்கு எதிர்கால உலகுக்கு உகந்த வகையில் புதுமையுடன் கூடிய நடைமுறை அறிவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# பாவமன்னிப்பின் மாதம்

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



மனிதன் பலவீன மானவன், அவன் இயல்பாகவே பாவம் செய்யக்கூடிய இயல்பினைக் கொண்டவனாவான். அவனால் பாவங்களிலிருந்து முழுமையாக விடுபட்டு வாழ முடியாது. தான் செய்த பாவங்களை உணர்ந்து தன்னை மன்னித்து இரட்சிக்குமாறு அல்லாஹ்விடம் கேட்டு, மன்றாடும் போது அவனுக்கு மன்னிப்பை வழங்க அல்லாஹ் காத்திருக்கிறான்.

மனிதன் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோர வேண்டும். அது அவன் மீது கடமையாகும். அல் குர்ஆன் இதனைப் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளது.'விசுவாசிகளே.... நீங்கள் அல்லாஹ்விடம் மிகத் தூய்மையாகவும் உண்மையாகவும் பாவமன்னிப்புக் கோருங்கள்' (அல் குர்ஆன் 66:08)

'விசுவாசிகளே....! நீங்கள் அனைவரும் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள்'

(அல்குர்ஆன் 24:31)

இவை பாவமன்னிப்புக் கோரலை வலியுறுத்திக் கூறுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் 'ஆதமுடைய மக்கள் அனைவரும் பாவம் செய்யக் கூடியவர்கள். பாவம் செய்வோரில் மிகச் சிறந்தவர் பாவமன்னிப்புக் கோருவோராவர்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: சுனனுத் திர்மிதி)

இந்த நபிமொழியின் ஊடாக பாவமன்னிப்பு கோருவதன் முக்கியத்துவம் தெளிவாகிறது. அதாவது பாவமன்னிப்புக் கோருமாறு அல்லாஹ் எமக்குக் கட்டளையிட்டிருக்கிறான். நபிமார்கள், உத்தமர்களான நல்லடியார்களும், இறைநேசர்களும் கூட பாவமன்னிப்புக் கோரியுள்ளார்கள்.

பாவமன்னிப்புக் கோருவோரை அல்லாஹ் விரும்புகிறான். அதற்காக அவன் மகிழ்ச்சியடைகின்றான். 'நிச்சயமாக அதிகமதிகமாக பாவமன்னிப்புக் கேட்போரையும் சுத்தமாக இருப்போரையும் அல்லாஹ் விரும்புகின்றான்' (2:222) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

பாவங்களை மன்னிப்பது அல்லாஹ்வின் பண்பாகும். அல்லாஹ் அடியானை மன்னிப்பதில் அதிகம் விருப்பம் கொள்கிறான். பாவமன்னிப்புக் கோரி அவனிடம் மீள்வோரை அவன் நேசிக்கின்றான். 'எவன் கைவசம் எனது ஆத்மா இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக, வானம் பூமிக்கு இடைப்பட்ட பகுதியை நிரப்புமளவு நீங்கள் பாவம் செய்திருந்த போதிலும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டால் அவன் நிச்சயமாக உங்களை மன்னிக்கவே செய்வான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: அஹ்மத்)

அதேநேரம், பாவமன்னிப்பு கோருவதன் ஊடாக சுவனத்தை அடைந்து கொள்ளலாம். சுவனத்தைப் பெற்றுத்தரும் காரியமே பாவமன்னிப்பு கோருதலாகும்.

'நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதிலும் சுவனத்தைப் பெறுவதிலும் முந்திக் கொள்ளுங்கள். அந்த சுவனம் வானம் பூமியின் அளவு விசாலமானது (3:133) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

அந்த வகையில் தற்போது எம்மை வந்தடைந்துள்ள ரமழான் மாதம் அல்லாஹ்வின் அன்பையும், மன்னிப்பையும் சுமந்து வந்துள்ள மாதமாகும். குறிப்பாக இம்மாதத்தில் நோன்பு வைப்பதன் மூலமும், இரவு வணக்கங்களில் ஈடுபடுவதன் மூலமும் அல்லாஹுதஆலா முன் செய்த பாவங்களை மன்னிக்கிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'யார் ரமழானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றாரோ அவர் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன' என்றும் நபிகளார் கூறியதாக அபூ ஹுறைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்'. (ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)

அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்துள்ள சில பாவமன்னிப்பு துஆக்கள் வருமாறு,

'அல்லாஹும்ம அன்த்த ரப்பீ. லா இலாஹ இல்லா அன்த்த. கலக்த்தனீ. வ அன அப்துக்க. வ அன அலா அஹ்திக்க, வ வஃதிக்க மஸ்தத அத்து. அஊது பிக்க மின் ஷர்ரி மா ஸனஅத்து. அபூ உ லக்க பி நிஅமத்திக்க அலய்ய, வ அபூ உ லக்க பி தன்பீ. ஃபஃக்பிர்லீ. ஃபஇன்னஹு லா யஃக்பிருத் துனூப இல்லா அன்த்த' என்று ஒருவர் கூறுவதே தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும்.

பொருள்: அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன்.

நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட்கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக் கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.

அஸ்தஃபிருல்லாஹல் அளீம் பொருள்: மகத்துவமிக்க அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்கின்றேன்.

'றப்பிஃபிர்லீ' பொருள்: யாஅல்லாஹ் எனது பாவத்தை மன்னிப்பாயாக!

'லாஇலாஹ இல்லா அன்த்த சுப்ஹானக இன்னி குன்து மிலள்ளாலிமீன்'. பொருள்: யா அல்லாஹ் உன்னைத் தவிர வேறு வணங்கத் தகுதியானவன் வேறு யாருமில்லை. நிச்சயமாக நான் அநியாக்காரர்களில் ஆகிவிட்டேன்.

'றப்பனா ளலம்னா அன்புஸனா வஇல்லம் தஃபிர்லனா வதர்ஹம்னா லனகூனன்ன மினல் காஸிரீன்'. பொருள்: 'எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம் நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்'

இவ்வாறு பாவமன்னிப்பு கோருவதற்கான பல துஆக்களை நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். அதனால் அந்த பாவமன்னிப்பு துஆக்களை பயன்படுத்தி பாவமன்னிப்பு கோருவோம்.

மனிதன் என்ற அடிப்படையில் ஒருவர் சிறு பாவங்கள், பெரும் பாவங்கள் செய்திருக்கலாம். அவற்றை எண்ணி அவனது உள்ளம் நெகிழ வேண்டும். அதற்காகக் கண்ணீர் விட்டு அழ வேண்டும். பாவச் சுமைகளோடு எனது இரட்சகனை எவ்வாறு சந்திக்க முடியும் என வருந்த வேண்டும். பாவத்திலிருந்து அவன் நீங்கிவிட வேண்டும். குறித்த பாவத்தை மீண்டும் செய்ய மாட்டேன் என உறுதிகொள்ளல் வேண்டும். மனிதர்களுடன் தொடர்பான பாவமெனில் முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இவை பாவமன்னிப்புக்கான நிபந்தனைகளாக உள்ளன.

எனவே, நோன்பு நோற்று இதர வணக்கங்களில் ஈடுபடுவதோடு பாவ மன்னிப்பு கோருவதிலும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்வோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அன்பையும் கருணையையும் பெற்றுக்கொள்வோம்.

முப்தி ஏ.எச்.எம். மின்ஹாஜ்...
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# உடல், உள பயிற்சியின் களம்

உடல் இச்சையைக் கட்டுப்படுத்தி உளக் கட்டுப்பாட்டை உருவாக்குவதுதான் நோன்பின் நோக்கம். இரண்டில் ஒன்று விடுபட்டாலும் எதிர்பார்ப்பு வீணாகிவிடும்.

நோன்பு சில வணக்கங்களின் கூட்டுக்கலவை எனக் குறிப்பிடலாம். 'கியாமுல்லைல்' எனும் ரமழான் மாத இரவு வணக்கம், 'ஸதகா' எனும் தான தர்மம், 'இஃதிகாஃப்' எனும் பள்ளிவாசலில் இரவு தங்குதல், 'திலாவத்' எனும் திருமறைக் குர்ஆன் ஓதுதல், 'லைலதுல் கத்ர்' எனும் மாட்சிமை மிக்க ஓர் இரவை அடைவதற்காக நம்மைத் தயார் செய்தல், ஆகிய ஐந்தும் கலந்த கூட்டு வணக்கம்தான் நோன்பு ஆகும்.



மனிதனை உயர் ஒழுக்கம் கொண்டவனாகவும், பண்பாடு மிக்கவனாகவும் மனிதனை மாற்றுவதற்கான நல்லொழுக்கப் பயிற்சிதான் இது. இப்பயிற்சியை சரிவர நிறைவேற்றுபவன் நல்ல பிரஜையாகவும், சிறந்த மனிதனாகவும், சமூகத்திற்குப் பயன்மிக்கவனாகவும் திகழ்வான்.

இந்த அடிப்படையிலேயே 'தக்வா' எனும் இறையச்சத்தை உருவாக்குவதுதான் நோன்பின் அடிப்படை நோக்கம். இறையச்சம் உடைய மனிதன் பண்பாடு மிக்கவனாகப் பரிணாமம் பெறுகிறான். பண்பாடு மிக்கவன் நல்ல மனிதனாக இருப்பான். இப்பண்பாட்டுப் பயிற்சியை தொழுகை, நோன்பு போன்ற வணக்கங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொழுகை என்பது வெறும் இறை வணக்கத்திற்காக மட்டுமுரியதல்ல என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக நம்மில் நல்ல மாற்றம் ஏற்பட வேண்டும் என்பது அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஏனைய இறை வணக்கங்கள் அனைத்தும் தனியொரு வணக்கமாக இருக்கும்போது நோன்பு மட்டும் உடல், உளக்கட்டுப்பாடு இரண்டையும் ஒருசேர உள்ளடக்கியிருக்கிறது. ஏனெனில் நம்மில் இறையச்சம் உருவாக வேண்டும் என்பதுவே அதன் எதிர்பார்ப்பாகும். இதற்கு பக்க துணையாக இரவு வணக்கமும், அல் குர்ஆன் ஓதுதலும், தான தர்மமும் அமைந்திருக்கிறது.

நபி (ஸல்) அவர்களிடம் அபூ உமாமா (ரழி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரே...! எனக்கு ஒரு நற்செயலைச் சொல்லித்தாருங்கள்' என்று கேட்டபோது, நபி (ஸல்) அவர்கள், 'நோன்பைப் பற்றிப்பிடித்துக்கொள், அதற்கு நிகர் எதுவும் கிடையாது' என்றார்கள்.

(ஆதாரம்: நஸாயீ)

இது குறித்து ஹதீஸ் குத்ஸியில், 'ஆதத்தின் பிள்ளைகள் செய்யும் அனைத்துச் செயல்களும் அவர்களுக்குரியன, நோன்பைத் தவிர. நோன்பு எனக்கானது. நானே அதற்குக் கூலி வழங்குவேன் என்று அல்லாஹ்தஆலா குறிப்பிடுவதாகப் பதிவாகியுள்ளது.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

அனைத்து நற்செயல்களும் அல்லாஹ்வுக்காகவே புரியப்படுகின்றன. அதற்கான கூலியையும் அவனே வழங்குவான். அப்படியிருக்க.. நோன்புக்கு மட்டும் என்ன தனிச்சிறப்பு என்ற கேள்வி எழவே செய்கிறது. ஆனாலும் அதற்கான பதிலையும் அல்லாஹ்வே ஹதீஸுல் குத்ஸியின் வாயிலாகக் கூறுகின்றான்..

'அவன் எனக்காகவே உணவை விடுகின்றான். பானத்தையும் எனக்காகவே விடுகின்றான். மனோ இச்சையை எனக்காகவே விடுகின்றான்'

(ஆதாரம்: இப்னு குஸைமா)

இங்கு உடல், உளக் கட்டுப்பாடு இரண்டையும் ஒருசேர இறைவன் குறிப்பிடுகின்றான். எனவே நோன்பு நோற்பவருக்கு உண்மையிலேயே பசி ஏற்பட வேண்டும். அந்தப் பசியை இறைவனுக்காகத் தாங்கிக்கொள்ள வேண்டும். மேலும் நோன்பு நோற்பவருக்கு உண்மையிலேயே தாகம் ஏற்பட வேண்டும். அந்தத் தாகத்தை இறைவனுக்காக அவர் தாங்கிக் கொள்ள வேண்டும். மனோ இச்சைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். பசியும் தாகமும் இருந்தால் தான் உடலின் வீரியம் குறையும். உடலின் வீரியம் குறைந்தால் தான் பாவ காரியங்களைச் செய்யாமல் இருப்பதற்கான மனப்பக்குவம் வரும்.

நோன்பின் பகல் பொழுதுகளில் உணவு, பானம் ஆகியவை நமது உடலினுள் சென்றுவிடாமல் இருப்பதில் எவ்வாறு பேணுதலுடன் நடந்து கொள்கிறோமோ அவ்வாறு மனக்கட்டுப்பாட்டிலும் பேணுதலுடன் இருக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் நோன்பு குறித்துக் கூறும்போது, சாப்பிடுவதைக் குறித்து மட்டும் கூறவில்லை மாறாக மனக்கட்டுப்பாட்டையும் சேர்த்தே குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேநேரம், 'எத்தனையோ நோன்பாளிகள், நோன்பினால் அவர்கள் அடைந்த பலன், வெறும் பசியும் தாகமும் தான்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: நஸாயீ, இப்னு மாஜா)

இந்நபிமொழியின் ஊடாக, 'வெறும் பசியும் தாகமும் மட்டுமல்ல நோன்பு. மாறாக உடற்பயிற்சியும் மனக்கட்டுப்பாடும் சேர்ந்ததுதான் நோன்பு' என்பது தெளிவாகிறது. இதனை இன்னும் தெளிவாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள், 'எவர் (நோன்பு நோற்றிருந்தும்) பொய் சொல்வதையும், பொய்யான முறையில் செயல்படுவதையும் விட்டு விடவில்லையோ அவர் பசித்திருப்பதையும் தாகித்திருப்பதையும் பற்றி அல்லாஹ்வுக்கு எவ்வித அக்கறையுமில்லை. (ஆதாரம்: புஹாரி)

நோன்பாளி தவறான செயலில் ஈடுபட்டால் அவன் நோன்பே வைக்கவில்லை என்றுதான் பொருளாகும். எவ்வாறு தண்ணீர் குடிப்பது நோன்பை முறிக்குமோ அவ்வாறே பாவச்செயல்களில் ஈடுபடுவதும் நோன்பை முறிக்கக்கூடியதாகவே அமையும்.

நோன்பாளி பாவச்செயல்களில் ஈடுபட்டால் அந்த நோன்பு பயனற்றுப் போய்விடும். அதனால் நோன்பு என்பது இரு பகுதிகளை உள்ளடக்கியது என்பதை மறந்துவிடலாகாது. நோன்பின் நோக்கம் குறித்து பிரபலமான இறைவசனம், 'நீங்கள் இறையச்சமுள்ளவர்களாய்த் திகழக்கூடும்' (2:183) என்று குறிப்பிடுகிறது.

நோன்பில் உளப் பயிற்சியை அளிக்கும் நற்கருமங்களாக இரவுத்தொழுகையும், தானதர்மமும், திருக்குர்ஆன் ஓதுதலும், இஃதிகாஃப் எனும் பள்ளிவாசலில் தங்குதலும், லைலதுல் கத்ர் இரவுக்காகத் தயாராவதும் சிறப்பு வணக்கங்களாக ரமழானில் இணைக்கப்பட்டுள்ளன.


இவ்வாறு ஒருமாத காலம் உடல், உளப்பயிற்சியைப் பெற்றுக்கொண்ட ஒருவர் ரமழானுக்குப் பின்னரும் நிச்சயம் இதனைக் கடைப்பிடிப்பார். அதுதான் நோன்பின் நோக்கம். ரமழான் நோன்பு என்பது ரமழானுக்காக மட்டுமுரியதல்ல அது ரமழானையும் தாண்டி நிற்கும் பதினோரு மாதங்களுக்கான நல்லொழுக்கப் பயிற்சியாகும்.

ஆகவே, உடற்பயிற்சியோடு உளப்பயிற்சியும் சேரும்போதுதான் நோன்பின் உண்மையான பலனை அடைந்துகொள்ள முடியும் என உறுதிபடக்கூறலாம்.

மின்ஸார் இப்றாஹிம்...

# நோன்பின் மாண்பு

ஒரு நோன்பாளியை பசியும், தாகமும் வாட்டியெடுத்த போதிலும், தமக்கு எட்டிய தொலைவில் உணவும், பானமும், துணைவியும் இருந்த போதிலும் அவற்றை தொடாமல், அனுபவிக்காமல் விலகிச் செல்வதும் தவிர்ந்து கொள்வதும் அவரது மனஉறுதியை வெளிப்படுத்தக்கூடியதாகும்.



மனிதன் மனோ இச்சைகளுக்கு முன்பு பலவீனம் அடைந்து விடக்கூடியவனாவான். அதனால் அவற்றை எதிர்கொண்டு, தம்மை பலப்படுத்திக் கொள்ள இறை நம்பிக்கையில் உறுதி, மனவலிமை, உறுதியான எண்ணம், சாந்தம் என்பன மிகவும் அவசியம்.

சூரியன் உதயமானதிலிருந்து அது அஸ்தமனம் ஆகும் வரையும் ஒரு நோன்பாளி உண்ணாமல், பருகாமல் மற்றும் மனோ இச்சைகளை கட்டுப்படுத்தியபடி இருப்பது நோன்பாளியின் இறை நம்பிக்கையை பலப்படுத்தக்கூடியதாக அமையும்.

இது தொடர்பில் அல்லாஹ்த ஆலா தன் அருள்மறையில், 'ஈமான் கொண்டோர்களே...! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம். (2:183)

இவ்வசனத்தின் படி இறை வழிகாட்டல்களுக்கு அமைய நோன்பை நோற்கும் போது இறையச்சத்தை அடைந்து கொள்ளலாம். மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாததே இறையச்சமாகும்.

அந்த இறையச்சத்தை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட வேண்டும். அதேநேரம் நோன்பின் மூலம் பசியின் உணர்வை தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அது ஏழை எளிய மக்களின் பசியை செல்வச் செழிப்பு மிக்கவர்களுக்கும் உணர்த்தக்கூடியதாக அமைந்துள்ளது. அத்தோடு உணவளிக்கும் இறைவனுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றி செலுத்திட வேண்டும் என்ற எண்ணத்தை மனிதனுள் விதைக்கக்கூடியதாக அமைகிறது.

ரமழான் நோன்பானது அல்லாஹ்வின் கட்டளைக்கு அமைய அவனது திருப்தியை பெற்றுக்கொள்வதற்காக நோற்கப்பட வேண்டியதாகும். அதன் ஊடாக அவனது திருப்தி கிடைக்கப்பெறும். அத்தோடு உடல்சார்ந்த நலன்களும், உலகம் சார்ந்த பயன்களும் நோன்பின் ஊடாக கிடைக்கப்பெறவே செய்யும்.

குறிப்பாக 'ரமழானில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்பவர்களின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன' என நபி (ஸல்) கூறினார்கள்'.

(ஆதாரம்: புஹாரி)

ஆகவே இறையச்சம், இறையருள், பாவமன்னிப்பு, உடல் ஆரோக்கியம் உட்பட ஏராளமான நற்பாக்கியங்களைத்தரும் ரமழான் நோன்பை நபி (ஸல்) அவர்களின் போதனைகளின் அடிப்படையில் கடைப்பிடித்து நன்மைகள் பெறுவோம்.

அபூ அப்துல்லாஹ்...

# இறைவனின் அருட்கொடைகள்



இறைவன் மனிதர்களுக்கு தனது அருட்கொடைகளை வழங்கியுள்ளான். அவன் வகுத்தளித்துள்ள வழியில் நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் அள்ளிக்கொடுப்பதே கொடைத்தன்மை ஆகும். உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே கொடுக்கும் தன்மை மனிதனுள் வளர்ந்து வருகிறது. இதற்கு ஆரம்பம் ஏக இறைவன் தான். இறைவன் மனிதர்களுக்கு தனது அருட்கொடைகளை வழங்கினான். இதன் மூலம் மனிதனின் வாழ்வு செழித்தது.

மனித வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான தேவைகளாக உணவு, உடை, ஆரோக்கியம், வாழ்க்கைக்கு தேவையான வசதிகள், போதும் என்ற மனம் ஆகியவை கருதப்படுகிறது. மிக குறைவான வசதி வாய்ப்புகளிலேயே மனிதன் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியும். ஆனால் ஆசையால் தூண்டப்பட்ட மனிதன் பணத்தை தேடியும், உடல் சுகத்தை தேடியும், பதவி, புகழைத்தேடியும் அலைகிறான். இந்த தேடலில் இறைவனை மறந்து, அவன் வகுத்த வழியில் இருந்து தவறி நடக்கத்தொடங்குகின்றான். இதனால் நிம்மதி இழந்து விடுகின்றான்.

இறைவன் நமக்கு அளித்த அருட்கொடைகளே போதும் என்ற மனதுடன் வாழ்ந்தால் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும். இறைவன் வகுத்த வழியிலும், அவனது திருத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டிய வழியிலும் நடந்து வந்தால் போதும், எத்தனை சோதனைகள், வேதனைகள் வந்தாலும் அதை தாங்கி நிற்கும் வலிமையையும், நிம்மதியையும் இறைவன் நமக்குத்தருவான்.

இறைவன் நமக்கு வழங்கியுள்ள அருட்கொடைகள் குறித்து திருக்குர்ஆன் வசனங்களும், நபி மொழிகளும் ஏராளம் உள்ளன. இறைவன் தரும் அருட்கொடைகளை நாம் பரிபூரணமாக பெற என்ன செய்ய வேண்டும் என்பதும் திருக்குர்ஆனில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்வீர்களானால் அவன் உங்களுக்கு (நன்மை தீமையைப்) பிரித்தறிந்து நடக்கக்கூடிய நேர்வழி காட்டுவான். இன்னும் உங்களை விட்டும் உங்கள் பாவங்களைப் போக்கி உங்களை மன்னிப்பான்; ஏனெனில் அல்லாஹ் மகத்தான அருட்கொடையுடையவன்". (8:29).

முதல்கட்டமாக அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்தால் நமக்கு கிடைக்கும் முக்கியமான அருட்கொடை நன்மை, தீமைகளை பிரித்தறிந்து கொள்ளும் ஞானம், அதன் மூலம் கிடைக்கும் நேர்வழி ஆகும். அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொண்டால் தான் மனிதனின் செயல்கள் நன்மையை நோக்கி அமையும். அப்போது தான் இறைவனின் அருட்கொடையான பாவமன்னிப்பும் சொர்க்கமும் அவனுக்கு கிடைக்கும்.

இதை அல் குர்ஆன் வசனங்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றன.

"உண்மையில் எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு (அதாவது, இவ்வேதத்தில் எடுத்துரைக்கப்பட்ட சத்தியங்களை ஏற்றுக்கொண்டு) நற் செயல்கள் புரிந்து கொண்டிருந்தார்களோ அவர்களை, அவர்களின் (ஈமான்) நம்பிக்கையின் காரணத்தால் அவர்களுடைய இறைவன் நேர்வழியில் செலுத்துவான். அருட்கொடைகள் நிறைந்த சுவனங்களில், அவர்களுக்குக் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். (10:9).

"மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அறிவுரை உங்களிடம் திண்ணமாக வந்திருக்கிறது. இது இதயங்களில் உள்ள நோய்களைக் குணப்படுத்தக்கூடியதாகவும், தன்னை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களுக்கு வழி காட்டக் கூடியதாகவும், ஓர் அருட்கொடையாகவும் திகழ்கின்றது".

"(நபியே) நீர் கூறும்: "அல்லாஹ் தன்னுடைய கருணையைக் கொண்டும் அருளைக் கொண்டும் இதனை இறக்கியுள்ளான். இதனைக் குறித்து மக்கள் மகிழ்ச்சி அடையட்டும். அவர்கள் சேகரித்துக் கொண்டிருக்கும் எல்லாவற்றையும்விட இது சிறந்ததாகும்."

(10:5758)

இன்று வாழ்வில் நாம் அனுபவித்து மகிழும் அனைத்து சுகங்களும், வசதிகளும், கருவிகளும், வாகனங்களும் இறைவன் நமக்கு அளித்த அருட்கொடைகள் தான். அந்த அருட்கொடைகள் எண்ணில் அடங்காதவை. இதற்காக நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இறைவனின் கட்டளைகளை ஏற்று இறைவன் வகுத்த வழியில் நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். நம்மை படைத்து பரிபாலிக்கும் ஏக இறைவன் கருணை மிகுந்தவன், நமது பாவங்களையும், தவறுகளையும் மன்னிக்கும் பொறுமை மிக்கவன்.

இதை அல் குர்ஆனின் இந்த வசனங்கள் மூலம் இறைவன் எடுத்தியம்புகிறான்.

`அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் எண்ணிட முயன்றால் அவற்றை உங்களால் எண்ணவே முடியாது. திண்ணமாக அல்லாஹ் பெரிதும் மன்னிப்பவனாகவும், கருணை புரிபவனாகவும் இருக்கின்றான்'. (16:18)

"நம்பிக்கையாளர்களே! அல்லாஹ் உங்களுக்கு அளித்தவைகளில் ஆகுமான நல்லவைகளையே புசியுங்கள். நீங்கள் அல்லாஹ்வை வணங்குபவர்களாக இருந்தால், அவனுடைய அருட்கொடைகளுக்கு நீங்கள் நன்றி செலுத்தி வாருங்கள்". (16:114)

இறைவனின் அருட்கொடையான நேர்வழியில் நடந்து, நிம்மதியான வாழ்வைப் பெற வேண்டும் என்றால், முதலில் நாம் இறைவன் மீது முழு நம்பிக்கை கொள்ள வேண்டும். மனித வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்று இறைவன் காட்டியுள்ள வழியில் நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் நாம் நிம்மதியான வாழ்க்கையை இம்மையிலும், மறுமையில் சொர்க்கத்தையும் பெற முடியும்.

அப்துல் ரஹ்மான்...

# பேராதனை பல்கலையின் பழைய மாணவர் சங்க கூட்டம்

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தினுடைய கொழும்புக் கிளையின் 33ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கும் ஆரம்பமாகி மதியம் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

கொழும்பு 07 இல் மலலசேகர மாவத்தையில் இல. 28/10 அமைந்துள்ள அபிவிருத்தி இலங்கை நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) பிரதான மண்டபத்தில் (Sanhinda) இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இது தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ள www.aaupcc.org எனும் இணையத்தளத்தினூடாகவோ அல்லது பொதுச் செயலாளர் பாலித சியம்பலபிட்டியவுடன் 0777741616 எனும் கையடக்கத் தொலைபேசிஇலக்கத்தினூடாகவோ தொடர்புகொள்ள முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## 42 மேலதிக வாக்குகளால்...

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் மார்ச் ஐந்தாம் திகதியன்று கையளித்தது.

சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே .வி. பி. ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 44 எம்.பி.க்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

அதனையடுத்து ஒழுங்குப் பத்திரத்தில் சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உள்வாங்கப்பட்டதுடன் மார்ச் 19, 20 ஆம் திகதிகளில் விவாதத்தை நடத்துவதென கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு கடந்த 19 ஆம் திகதி அது விவாதத்துக்கு எடுக்கப்பட்டதையடுத்து மீண்டும் கூடிய கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் மேலும் ஒரு நாளை நீடித்து 21 ஆம் திகதியும் விவாதத்தை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய 19,20 ஆம் திகதிகளிலும் நேற்று 21ஆம் திகதியும் விவாதம் நடத்தப்பட்டது. நேற்று நடந்த இறுதிநாள் விவாதத்தின் முடிவில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.யினால் வாக்கெடுப்பு கோரப்பட்டதையடுத்து மாலை 4.35 மணிக்கு இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பின் போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக எதிர்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி,தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே .வி. பி.. தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றை சேர்ந்த 75 எம்.பி.க்கள் வாக்களித்தனர்.

அதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக ஆளும் கட்சியுடன் இணைந்து எதிரணியில் சுயாதீனமாக செயற்படும் அங்கஜன் இராமநாதன், வடிவேல் சுரேஷ், ஏ.எச். எம்.பௌசி, அதாவுல்லா, நிமல் லான்ஸா, ஜோன் செனவிரத்ன,,ஜகத் சமரவிக்கிரம, பிரியங்கர ஜயரட்ண உள்ளிட்ட117 எம்.பிக்கள் வாக்களித்தனர்

இந்நிலையிலேயே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேலதிக வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் ஜே .வி. பி.தலைவரான அநுர குமார திசாநாயக்க, தமிழ் தேசிய மக்கள்முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி தலைவரான சி.வி. விக்கினேஸ்வரன் உள்ளிட்ட 33 எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன போட்டியிட்டு சபாநாயகராக தெரிவாகவில்லை. மாறாக அரசு மற்றும் எதிர்கட்சிகளினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட சபாநாயகராவார்.

## நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின்...

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூன்றாம் நாள் விவாதத்தில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மக்களுக்கு சேவை வழங்கும் பொறிமுறையை சீர்குலைப்பதற்கே எதிர்க்கட்சியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கலர், கலரான பொத்தான்களை அழுத்துவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றார். சபாநாயகரினால் சரியான பொத்தானை அழுத்த முடியாமல் போனதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

அரசியலமைப்பு பேரவையில் அழுத்துவதற்கு பொத்தான் கிடையாது. தீர்மானங்களை வழங்குவதற்கு அரசியலமைப்பு பேரவை உள்ளது.

அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகாரிகள் அதன் மூலமே நியமிக்கப்படுகின்றார்கள்.

அவ்வாறில்லையானால் அரச பொறிமுறை சீர்குலைந்து விடும். அந்த வகையில் அரசியலமைப்பு பேரவையில் உள்ள தமது உறுப்பினர்களை வைத்து, அரச பொறிமுறையை சீர்குலைப்பதற்கு எதிர்க்கட்சியினர் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர்.

சஜித் பிரேமதாசவுக்கும் அனுர குமார திசாநாயக்கவுக்கும் பாராளுமன்ற தேர்தல் அழகானதல்ல. அரசியலமைப்பு பேரவையே பொருத்தமானது. இதனை ஏற்றுக் கொள்ளுமாறு நாம் சவால் விடுப்பதகாவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## IMF: இரண்டாவது மீளாய்வு குறித்து...

சீர்திருத்தங்கள் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள வலுவான முன்னேற்றம் நன்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாகவும் அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

அடுத்த இரண்டு மாதங்களில், நாணய நிதியத்தின் அடுத்த தவணை நிதியைப் பெறுவதற்காக, அதன் நிறைவேற்று சபையின் அனுமதியைப் பெறுவதற்கு திட்டமிட்டு, கடன் மறுசீரமைப்பில் மேலும் முன்னேற்றத்தை அடைய இலங்கை தயாராக இருப்பதாகவும் அமைச்சர் சேமசிங்க குறிப்பிட்டார்.

2023, நான்காம் காலாண்டில் இலங்கை 4.5வீத பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளதாகவும், இது பொருளாதார ஸ்திரத்தன்மையிலிருந்து அபிவிருத்தி மாற்றத்தின் முன்னேற்றத்திற்கான அடையாளமாக அமைந்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 02 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் இது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால், இந்த சீர்திருத்தங்களுக்கு அப்பால் செயல்படுவது அல்லது பின்நோக்கி செல்வது இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு மீண்டும் ஒரு காரணமாக அமையக்கூடுமென தெரிவித்த அமைச்சர், இதன் விளைவாக, அனைத்து இலங்கையர்களின் நல்வாழ்வு, குறிப்பாக வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள், பாரிய சவால்களுக்கு உள்ளாகலாம் என்றும் கூறினார்.

## தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு...

இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

எமது மாணவர்கள் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகள் செல்லும் போது உயர் தேசிய டிப்ளோமாவுடன் சென்றாலும் அங்கு அவர்களுக்கு உரிய தொழில், சம்பளம் கிடைப்பதில்லை.எனினும் வேறு நாட்டவர்கள் இரண்டு வருடத்தில் எடுத்துக்கொண்ட பட்டப்படிப்பு சான்றிதழுடன் அங்கு வருகின்றனர். அவர்களுக்கு சிறந்த சம்பளம் வழங்கப்படுகிறது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சிவில், மெக்கேனிக்கல் போன்ற துறைகளுக்கு செல்லும் போது என்ஜினியருக்குஉள்ளதிறமை, ஆற்றல் நம்மவர்களுக்கு உள்ள போதும் பட்டப்படிப்பு அதற்கு தடையாக உள்ளது. இவற்றை கவனத்திற் கொண்டே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பொறியியலாளர் மட்ட ஆற்றல் அவர்களுக்கு உள்ளது. எனினும் அவர்களுக்கு குறைந்த சம்பளமே கிடைக்கிறது. இதற்கு காரணம் அவர்களிடம் பட்டம் இல்லாமையே.

இதனால், இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நாம் ஐ.எஸ்.எல். மற்றும் தொழில் நுட்பவியலாளர் நிறுவனம் உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி இறுதித் தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எதிர்காலத்தில் இந்த பாடங்களுக்கு இணைத்துக் கொள்வோருக்கு பட்டப்படிப்பு வரை செல்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

சிட்னி எக்கோட் மட்டத்தில் இதனை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கரீமின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பு

தொழில்நுட்ப வசதிகள் இல்லாத காலத்தில் எமது நிகழ்வுகளில் கலந்து அவற்றின் செய்தி, புகைப்படங்களை பத்திரிகைகளில் வெளியிட்டு கட்சியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிய, கொழும்பு குணசேகர புரயை சேர்ந்த தினகரன் நிருபர் எஸ். ஏ. கரீம் அவர்களின் மறைவு கவலை தருவதாக முபாறக் அப்துல் மஜீத் கவலை தெரிவித்துள்ளார்.அன்னாரின் இழப்புக்குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் முபாரக் அப்பதுல் மஜீத் தெரிவித்துள்ளதா வது: ஊடகவியலாளர் எஸ்.ஏ.கரீம் அமைதியாகச் செயலாற்றிய ஊடகவியலாளர்.அன்னாரின் பங்களிப்புக்கள் எமது கட்சியின் வளர்ச்சிக்கு பங்களித்தன. எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு அருள் பாலித்து கிருபை செய்ய பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு, ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

## பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி...

பாதுகாக்கும் முறைமையின் ஊடாக, இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்தை விவசாயிகள் மத்தியில் பிரசித்தப்படுத்தி பயிர் சேதத்தைக் குறைப்பதற்கும், வரவிருக்கும் உலகளாவிய உணவு நெருக்கடிக்கு நாட்டை தயார்படுத்துவதற்கும் அரசாங்கம் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத்,

“விவசாய அமைச்சின் ஊடாக நெல் கொள்வனவு செய்வதற்கான சூழல் தற்போது தயாராகியுள்ளது. நுகர்வோரையும் உற்பத்தியாளரையும் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல ஒரு முறைமை தயாராகி வருகிறது. அண்மைய காலமாக காய்கறிகள், பழங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளன. விவசாய அமைச்சு என்ற வகையில், காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி, சந்தையில் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலையை பழைய நிலைக்கு கொண்டுவர முடிந்தது.

அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி பயிர் சேதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களின் புரதத் தேவைக்காக இறைச்சி மற்றும் முட்டைகளை உற்பத்தி செய்து நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்தை விவசாய அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. கால்நடை உற்பத்தியை அதிகரிக்க சுகாதார திணைக்களம் மற்றும் 09 மாகாண சபைகள் இணைந்து கால்நடை வளர்ப்பின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் திரவ பால் உற்பத்தியை அதிகரிக்க 06 தொழிற்சாலைகளைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில் இதுவரை 03 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. வீழ்ச்சியடைந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார். அந்த நாடு இன்று மக்கள் வாழக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடு இன்றி நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளும் சூழலை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## நாடு அராஜக நிலைக்கு செல்வதை...

பெறாத போதும், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்காக பாராளுமன்றத்துக்கு வருகை தந்ததாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் சபாநாயகர் எந்த வகையிலும் குற்றவாளியல்ல என்றும்அனைவரும் அவருக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரணையின் மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நாட்டின் சிறந்த பாராளுமன்ற ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற முறைமைகள் மிக மோசமான நெருக்கடிக்குள்ளாகும் நிலையில், இதற்கு நாம் பங்களிப்பு வழங்குவதா என கேட்க விரும்புகிறேன். 1980 இல்,இந்த பாராளுமன்றத்திற்கு நான், தெரிவு செய்யப்பட்டு வரும்போது இங்கு இருந்த நிலைமை முற்றிலும் வித்தியாசமானது. அந்த காலம் தொடர்பில் புரிதல் இல்லாத சிலர் இக்காலம் தான் மிக மோசமானது எனக்கூறுவர். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் அனைவரும் திருட்டுப் பாராளுமன்றம் என்றும் அதற்கு எதிராக போராட்டம் செய்ய வேண்டும் என்றும் கூறிய காலம் அது. சபாநாயகருக்கு எதிராக குற்றச்சாட்டை முன் வைக்காமல் வன்முறையற்ற ஜனநாயக நாடாக இலங்கையை கட்டி யெழுப்ப வேண்டும். தற்போதைய சபாநாயகரை போன்று எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் வழங்கிய வேறு சபாநாயகர்கள் வரலாற்றில் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சாபாநாயகருக்கு எதிரான பிரேரணை...

கடத்துவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார். சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை காலத்தையும், நிதியையும் வீணடிக்கும் செயல் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையின் மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் இந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கென, மூன்று நாட்கள் செலவழிப்பது என்பது கவலைக்குரியது.

இது அரச சொத்துக்கள் மற்றும் அரச நேரத்தை வீணடிப்பதாகவே குறிப்பிட முடியும்.

சபாநாயகரைப் பொறுத்தவரையில் இந்த சபையில் ஆளும் கட்சியை விட எதிர்க் கட்சியினருக்கே அதிக நேரத்தையும் வாய்ப்பையும் வழங்கி வருகின்றார்.

இதனை நான் அரசியல் ரீதியாகவே பார்க்கிறேன். 2019 1923 க்கும் இடைப்பட்ட காலம் நாட்டில் மிக மோசமான நெருக்கடியான காலமாகவே காணப்பட்டது. பல மாற்றங்கள் இடம் பெற்றன.மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி விலகி னார்.

அந்த காலம் முதல் இன்று வரை தற்போதைய சபாநாயகர் இருந்து வந்துள்ளார். அவரையும் நம்பிக்கை இழந்த ஒரு மனிதராக காட்ட வேண்டும் என்பதே எதிர்க்கட்சியின் இந்த முயற்சியாகும். ஆளும் கட்சியை பலவீனப்படுத்தி எதிர்க் கட்சி ஆட்சியைப் பிடிப்பதற்கு எதிர் வரும் தேர்தலில் தமது அதிகாரத்தை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களது நோக்கம்.

அதற்கான பல போலியான செயல்பாடுகளை அவர்கள் மேற்கொண்டு வருவதை பார்க்க முடிகிறது. இவ்வாறான செயற்பாடுகள் நாட்டின் எதிர் காலத்திற்கு எந்த பலனையும் அளிக்கப்போவதில்லை.

கடந்த வருடங்களில் எதிர்க்கட்சியினர் செயல்பட்டமைக்கும் தற்போது செயல்படும் விதத்துக்குமிடையில் பாரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

## பலாலி காணி விடுவிப்புடன் 04...

இன்று காலை யாழ். நகர் செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாலாலி விமானப் படைத்தளத்தில் ஏற்பாடு செய்துள்ள பிரதான நிகழ்விலும் அவர் பங்கேற்பார்.

பலாலியில் இராணுவ கட்டுப்பாட்டில் கடந்த 33 வருடங்களாக காணப்பட்ட 278 ஏக்கர் விவசாய காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளது.

பலாலி விமானப்படைத் தளத்தில் நடைபெறும் மற்றுமொரு நிகழ்வில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி, யாழ்ப்பாணம் , கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அரச காணிகளில் குடியிருப்போருக்கு ‘உறுமய’ காணி உறுதிப் பத்திரங்களையும் வழங்கவுள்ளார்.

அதேவேளை விமானப்படைத் தளத்தில் மூன்றாவது நிகழ்வாக யாழ் மாவட்ட விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு தேசிய சர்வதேச மட்டத்தில் சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலான விவசாய திணைக்களத்தால் , உருவாக்கப்பட்ட Farm to Gate செயலி (App) இணையத் தளமும் அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

அதனைத் தொடர்ந்து பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நெதர்லாந்து அரசாங்கத்தின் இலகு கடன் திட்டத்தின் கீழ்,விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. இப்புதிய கட்டடமே இன்று வெள்ளிக்கிழமை திறக்கப்படவுள்ளது.

# இன்றைய பலன்கள்

(22.03.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :** சொந்தத் தொழில் செய்பவர்கள் செய்து கொடுத்த பணியில் உள்ள குறைகளை மீண்டும் செய்து கொடுக்க நேரலாம். கூட்டு தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்தபடி நல்ல லாபம் வந்து சேரும்.

**ரிஷபம் :** கூட்டுத் தொழிலில் வழக்கமான லாபம் குறையாது. பணியாளர்களின் ஒத்துழைப்பால் வியாபார அபிவிருத்தி ஏற்படும்.

**மிதுனம் :** கூட்டுத் தொழில் முயற்சி எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும். நிலுவையில் உள்ள பணத்தை வசூலிக்கும் முறையில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம் :** கூட்டுத் தொழில் வியாபாரத்தில் மூலம் மூலப் பொருட்களின் தட்டுப்பாடும் விலைவாசி உயர்வும் பாதிப்பை உண்டாக்க கூடும்.

**சிம்மம் :** சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி அளிக்கும். சொந்த தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களுக்கு நவீன கருவிகளின் உதவியுடன் பணிகளை விரைவாக செய்து கொடுப்பார்கள்.

**கன்னி :** வாடிக்கையாளர்களை தக்க வைத்துக்கொள்ள கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கும். கூட்டுத் தொழிலில் முன்னேற்றமான போக்கு காணப்படும்.

**துலாம் :** சொந்தத் தொழில் செய்பவர்கள் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். தொழில் மேன்மையாக புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம் :** தொழில்நுட்பம் அறிந்த உதவியாளர்களை பணியில் அமர்த்திக் கொள்ள திட்டமிடுவீர்கள். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் பணியாளர்களை அவ்வப்போது கணிப்பது அவசியம்.

**தனுசு :** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் பணியை முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.

**மகரம் :** காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணிகளை கவனிப்பீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் வங்கிகளில் எதிர்பார்த்த பண வரவு கிடைக்கலாம்.

**கும்பம் :** கூட்டுத் தொழில் சுமாராக நடைபெறும். ஆயினும் வழக்கமான லாபம் குறையாது. பணியாளர்களின் ஒத்துழைப்பு வியாபாரம் முன்னேற்றத்துக்கு பயன் தரும்.

**மீனம் :** பண வரவுகளில் திருப்தியான போக்கு காணப்படும். கூட்ட தொழில் வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கலாம்.

## 2024:சர்வதேச... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இக்கண்காட்சி நாட்டின் தொழில் துறையை மேம்படுத்தி ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்லும் பாதையாக வெளிப்படுகிறது. சுமார் 1,000 உள்ளூர் மற்றும் சர்வதேச கைத்தொழில் முனைவோர் இதில் பங்கு பெறவுள்ளனர்.

## விசேட குழுவின் ஆரம்ப... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட ஏனைய 10 பேரும் “பாதாள உலக குழு உறுப்பினர்களுடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டவர்களில் முக்கிய பாதாள குழுத் தலைவர்களின் நெருங்கிய உறுப்பினர்கள் பலர் இருப்பதாக , இவர்கள் தொடர்பான விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

## ISIS அமைப்பின் இந்திய தலைவர்...

குறிப்பிடப்படுகிறது. இவ்விருவரும் அசாமின் துப்ரு பகுதிக்கு வந்திருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் இருவரையும்அதிரடியாக கைதுசெய்துள்ளனர்.

ஹரிஸ்ஃபருக்கி மற்றும் அவரது நண்பர் ரெஹான், தேடப்படும் நபர்களின் பட்டியலில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளனர்.இதனால், இவ்விருவரையும் என்.ஐஏ.யிடம் ஒப்படைக்க உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையக பாடசாலைகளின் ஆளணி...

இவ்வாறு தெரிவித்துள்ளார். இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், சுஜித் சஞ்சய் பெரேரா மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோரும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும், கொழும்பு, கண்டி, பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள தேசிய தமிழ் பாடசாலைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இம் மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய தமிழ் பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆசிரிய பற்றாக்குறைகள் மற்றும் பௌதீக வளக் குறைபாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அவற்றுக்கான தீர்வுகளை கல்வி அமைச்சின் அதிகாரிகள் முன்வைத்தனர். இக்கலந்துரையாடலின் உயர்தர வகுப்பிற்கான ஆசிரிய பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டது.

குறிப்பாக கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் இந்நிலைமை மிக மோசமாக உள்ளமை வெளிக்கொணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தலைமுடி, தாடியால் வாகனத்தை...

ஓடவிடுவது போன்ற சாதனைகளைச் செய்து வருகிறார். உலகச்சாதனை கனவை நிறைவேற்றுவதற்காக வாகனத்தை இழுக்கும் நிகழ்ச்சியை கொழும்பில் நடத்தவுள்ளார்.

இது, இவருக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

காலிமுகத்திடலுக்கு மக்கள் திரண்டு வந்து ஏகோபித்த ஆதரவை வழங்கி அவரை உற்சாகப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாக ஏற்பாட்டுக்குழுவினர் மேலும் தெரிவித்துள்ளனர். 60 வயதான சாதனை நாயகன் அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையமருகில் 1,550 கிலோ எடையுள்ள வாகனத்தை 45 நிமிடங்களில் 1,500 மீற்றர் தூரத்துக்கு இழுத்து சாதனை படைத்துள்ளார். இந்நிகழ்வு வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இச்சாதனை மூலம் தமிழகத்தின் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் செல்லையா திருச்செல்வமின் பெயரும் இடம்பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

## 337 மில் டொலர் நிதி...

இலங்கையின் சீர்திருத்த வேலைத்திட்டத்தில் வெற்றிகரமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளதுடன் நாட்டின் பணவீக்கத்தைக் குறைக்க இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கும் சர்வதேச நாணய நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.

அரச நிதிச் சீர்திருத்தங்களுக்குப் பின்னர் அரச நிதி வலுப்பெற்றுள்ளதாகவும் 2024 பிப்ரவரி மாதமளவில் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகாரப்பூர்வ கையிருப்பு அதிகரித்துள்ளதாகவும் தொடர் முன்னேற்றம் அடைய வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அதிகாரி பீட்டர் ப்ரூயர் நேற்று தெரிவித்தார்.

# அருள் நிறைந்த ரமழானில் உலகெங்கும் மன்னர் சல்மானின் மனிதாபிமான உதவிகள்

## இலங்கைக்கும் பேரீச்சம் பழம், உலர் உணவுப் பொதிகள், இப்தார் நிகழ்ச்சிகள்

வருடா வருடம் பூத்துக் குழுங்கும் புனித ரமழான் மாதம் வரும் போதெல்லாம் சவூதி அரேபியாவின் கருணையும் பரோபகாரமும் உலகமெங்கும் வியாபித்து நிற்கும். அதில் இலங்கையும் அடங்கும். இதை நாம் சிறு பராயம் முதல் அறிகிறோம்.



அந்த வகையில் இப்புனித ரமழானில் 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சவூதி அரேபியாவின் கருணையும் பரோபகாரமும் சென்றடைந்துள்ளது. இது பெரிதும் பாராட்டி வரவேற்கத் தக்கதாகும். சவூதி அரேபியாவின் இந்த பரோபகாரத்தால் உலகில் பல இலட்சம் மக்கள் பலனடைந்துள்ளனர்.

குறிப்பாக சவூதி அரேபியாவின் பேரீச்சம் பழங்கள் எப்போது கிடைக்கப்பெறும் என எதிர்பார்த்த வண்ணம் மக்கள் இருப்பர். சவூதி அரேபிய பேரீச்சம் பழத்தால் நோன்பு திறப்பதில் தனியொரு விருப்பம் அனைவரது மனதிலும் உண்டு. முஸ்லிமல்லாதவர்கள் கூட



## சவூதி அரேபிய பிரதிநிதிகள் கொழும்பு வருகை

சவூதி அரேபியாவின் பேரீச்சம் பழங்கள் கிடைக்காதா எனத் தேடிப் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு அதற்கு பெரும் மவுசு உள்ளது. அதனால் உலக மக்களது எதிர்பார்ப்பை சவூதி வருடா வருடம் நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில் இவ்வருடமும் சவூதி பல்லாயிரம் தொன் பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக உலக முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளது. அவற்றின் ஒரு தொகுதி பேரீச்சம் பழம் இலங்கை முஸ்லிம்களுக்கும் இவ்வருடமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை முஸ்லிம்களை கௌரவிக்கும் முகமாக இம்முறையும் சவூதி அரேபியா 50 தொன்கள் பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இப்பழங்களை இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் வைத்து புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் மன்னர் ஸல்மான் மனிதாபிமான மையத்தின் பிரதிநிதிகள் முன்னிலையில் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இம்முறை ஏனைய அரபு முஸ்லிம் நாடுகளில் இருந்து இலங்கைக்கு பேரீச்சம் பழங்கள் கிடைக்காததால் சவூதி அரேபியா வழங்கியுள்ள 50 தொன் பேரீச்சம் பழமும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் மூலம் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

அதேநேரம் இலங்கையில் செயற்படும் சில தொண்டு நிறுவனங்களும் சவூதியில் இருந்து இலவசமாக பல தொன்கள் பேரீச்சம் பழங்களைப் பெற்று தேவையான மக்களுக்கு விநியோகித்து வருவதும் இங்கு குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும்.

மேலும் சவூதி அரேபியா பல நாடுகளிலும் நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து நடாத்தி வருகிறது. உலகில் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் அந்தந்த நாடுகளில் உள்ள சவூதி அரேபியாவின் தூதரகங்கள் மூலமும் தூதரகங்களின் சமய விவகாரப் பிரிவுகள் மூலமும் இலட்சக்கணக்கான மக்களுக்கென இப்தார்கள் நடாத்தப்படுகின்றன.

சவூதி அரேபிய மன்னரும் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஆகியோரின் பெயரில் அவர்களது செலவில் இந்த இப்தார் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் இலங்கையிலும் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் கொழும்பு ஷங்கிரில்லா நட்சத்திர ஹோட்டலில் மாபெரும் இப்தார் ஒன்று (18) நடாத்தப்பட்டது. அந்த இப்தார் நிகழ்ச்சியில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌஸி, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், ரிஷாத் பதியுத்தீன், முஷர்ரப் முதுன்நபியின் உட்பட இலங்கையில் உள்ள அரபு மற்றும் முஸ்லிம் நாட்டு தூதுவர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி உட்பட உலமாக்கள், தொண்டர் நிறுவனங்களின் பணிப்பாளர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் என முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதே சமயம், சவூதி அரேபியாவின் இஸ்லாமிய அழைப்பு மற்றும் கலாசார அமைச்சர் கலாநிதி அஷ்ஷைக் அப்துல் லத்தீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக்கினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற விஷேட இப்தார்களும் உலகின் பல நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்காக நடாத்தப்படுகின்றன.

அந்த வகையில் இலங்கையிலும் உலமாக்கள், தாஈகள், அரபிக் கல்லூரி அதிபர்கள், உஸ்தாதுமார்கள், புத்திஜீவிகள் என பலரையும் ஒன்றிணைத்த விஷேட இப்தார் நிகழ்வொன்று கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் (19) அன்று வெகு விமர்சையாக நடாத்தப்பட்டது. சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சவூதி அரேபியாவின் இஸ்லாமிய



அழைப்பு மற்றும் கலாசார அமைச்சர் கலாநிதி அஷ்ஷைக் அப்துல் லத்தீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக்கின் விஷேட பிரதிநிதிகளாக அஷ்ஷைக் பத்ர் அல் அனஸி, அப்துல் லத்தீப் அப்துஸ் ஸமத் அல் காத்திப், ஜலால் அல் மாலிகி, சவூதி அரேபியாவுக்கு இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர் அமீர் அஜ்வத், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைஸல் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சவூதி அரேபியாவின் இஸ்லாமிய அழைப்பு மற்றும் கலாசார அமைச்சர் கலாநிதி அஷ்ஷைக் அப்துல் லத்தீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக்கின் விஷேட ஏற்பாட்டில் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் கடந்தாண்டு (2023) ஜூனில் இலங்கையில் தேசிய ரீதியில் மாபெரும் குர்ஆன் மனனப் போட்டி நடாத்தப்பட்டு பல சுற்றுப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஹாபிழ்கள் ஹாபிழாக்களுக்கு கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உட்பட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள் முன்னிலையில் பிரமாண்டமான விழாவுடன் சுமார் ஒன்றரை கோடி ரூபாவுக்கும் அதிகமான பணப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை அனைவரும் அறிந்த விடயமே.

அப்போட்டியில் வெற்றி பெற்ற அனைத்து ஹாபிழ் வெற்றியாளர்களையும் மீண்டும் ஒரு முறை கௌரவிக்கும் வகையில் கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்ற சவூதி அரேபியாவின் இஸ்லாமிய அழைப்பு மற்றும் கலாசார அமைச்சின் விஷேட இப்தாருக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குர்ஆன் மனனப் போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு இம்மாபெரும் இப்தாரில் கலந்து கொள்ளும் வாய்ப்பை வழங்கிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானிக்கு அவர்கள் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவூதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தின் பெயரில் இலங்கையிலுள்ள 15 பள்ளிவாசல்களில் விஷேட இப்தார் நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. இதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இதேவேளை சவூதி அரேபியாவின் இஸ்லாமிய அழைப்பு மற்றும் கலாசார அமைச்சும் இந்தோனேசியாவில் உள்ள சவூதி அரேபிய தூதரகமும் இணைந்து இரண்டரை கிலோ மீற்றர் தூர அளவில் மிக நீண்ட சுப்ரா விரித்து இந்தோனேசியாவில் மாபெரும் இப்தார் ஒன்றை இவ்வருடம் நடாத்தி உலக சாதனை படைத்துள்ளது. இந்த இப்தார் நிகழ்ச்சி உலக அளவில் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதனால் இந்தோனேசியா அரசாங்கம் இந்தோனேசியாவின் அதி உயர் விருதான "மூரி" விருதை சவூதி அரேபியாவின் இஸ்லாமிய அழைப்பு மற்றும் கலாசார அமைச்சுக்கு வழங்கியுள்ளமை விஷேட அம்சமாகும்.



மேலும் உலகில் ஏழை முஸ்லிம்களின் துயர் துடைக்க சவூதி அரசாங்கம் எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதாபிமான உதவிகளை வழங்கி வருவது நாம் அனைவரும் அறிந்த விடயமே. அந்த வகையில் சவூதி இலங்கையின் நேச நாடு என்ற வகையில் இலங்கைக்கும் சவூதி அரேபியா எண்ணிலடங்கா மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகிறது. குறிப்பாக புனித ரமழானில் உலகின் பல நாடுகளிலும் உள்ள ஏழை மக்களுக்கென உலர் உணவுப் பொதிகளை வழங்கி சவூதி தனது மனிதாபிமானத்தை வெளிப்படுத்தி வருவது வழமை.

அந்த அடிப்படையில் இம்முறையும் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழைகளுக்கு உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளது. இத்திட்டத்திற்கு சவூதி அரேபிய அரச நிவாரண நிறுவனமான மன்னர் சல்மான் மனிதாபிமான நிவாரண மையம் முக்கிய பங்களிப்பை நல்கி முன்னின்று உணவுப் பொதிகளைப் பகிர்ந்தளித்துள்ளது.



இவ்வாறு உலகின் ஏழை நாடுகளுக்கும் ஏழைகளுக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதாபிமான உதவிகளை சவூதி தொடர்ந்தும் வழங்கி வந்தாலும் குறிப்பாக புனித ரமழானில் விஷேடமாக மனிதாபிமான உதவிகளும் பரோபகாரங்களும் பேரீச்சம் பழங்கள், இப்தார் நிகழ்ச்சிகள், உலர் உணவுப் பொதிகள் போன்றவற்றை வழங்கி ஏழை முஸ்லிம்களின் துயரில் சவூதி பங்கெடுக்கிறது. இது உலகளாவிய பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

அந்த வகையில் இவ்வருடம் சவூதி அரேபியா மூலம் இலங்கை, இந்தோனேசியா, மாலைதீவு, இந்தியா, நேபாளம், பங்களாதேசம், பிலிபைன்ஸ் கொசோவா, பொஸ்னியா, பாகிஸ்தான், கொரியா, மலேசியா, தாய்லாந்து, கஸகிஸ்தான், நைரோபி, சிரேக்கம், ஆர்ஜென்டினா, மலேசியா, அவுஸ்திரேலியா, போலாந்து போன்ற இன்னும் பல நாடுகள் உட்பட அனைத்து ஆபிரிக்க நாடுகளுக்கும் பேரீச்சம் பழங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதோடு, இப்தார் நிகழ்ச்சிகளும் நடாத்தப்படுகின்றன. உணவுப் பொதிகளும் விநியோகிக்கப்படுகின்றன.



இவ்வாறு அந்தந்த நாடுகளது முஸ்லிம்களை சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் இஸ்லாமிய அழைப்பு மற்றும் சமய விவகார அமைச்சரான அஷ்ஷைக் அப்துல் லத்தீப் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக், மன்னர் சல்மான் மனிதாபிமான நிவாரண அமைப்பு, சவூதி அரேபிய தூதரகங்களும் தூதரகத்தின் மத விவகாரப் பிரிவுகளும் வழமை போன்று இம்முறையும் கண்ணியப்படுத்தியுள்ளனர் எனலாம்.



எனவே இம்மாபெரும் நற்பணிகளை முன்னெடுக்கின்ற இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவூதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான், இஸ்லாமிய அழைப்பு மற்றும் சமய விவகார அமைச்சரான அஷ்ஷைக் அப்துல் லத்தீப் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக் மற்றும் மன்னர் ஸல்மான் மனிதாபிமான நிவாரண அமைப்புக்கும் சவூதி அரேபிய தூதுவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.





அஷ்ஷைக் எம்.எச். ஷேஹுத்தீன் மதனி
பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம்,
கொழும்பு

## கனடா அனுப்புவதாக கூறி பண மோசடி செய்த பெண் கைது

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாண இளைஞர் ஒருவரை கனடா அனுப்புவதாக கூறி அவ்விளைஞரிடம் 60 இலட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதான ஹிங்குராங்கொடையைச் சேர்ந்த பெண் ஒருவரை தலா 6 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப்பிணைகளில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (20) அனுமதித்துள்ளது.

இந்த இளைஞரை கனடா அனுப்புவதாகக் கூறி கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் மேற்படி பணத்தை இப்பெண் பெற்ற நிலையில், பயண ஏற்பாடுகள் நடைபெறாமையால், யாழ். பொலிஸாரிடம் இளைஞர் முறைப்பாடு செய்தார்

இந்நிலையில் விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், இப்பெண்ணை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். இதன்போது தான் பெற்ற பணத்தை அவ்விளைஞரிடம் மீளக் கையளிப்பதாகக் கூறிய சந்தேகநபர், முதற்கட்டமாக 4 இலட்சம் ரூபாவை கையளித்தார். இதனை அடுத்தே சந்தேகநபருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது.

# புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை வரவேற்கிறோம்

### நியூஸிலாந்து துணை உயர்ஸ்தானிகரிடம் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்



புலம்பெயர் தேசத்திலுள்ள உறவுகளின் முதலீடுகளை தாம் வரவேற்பதாக நியூஸிலாந்து துணை உயர்ஸ்தானிகர் அன்ரூ ட்ரவெல்லருக்கு (Andrew Traveller) வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நியூஸிலாந்து துணை உயர்ஸ்தானிகருக்கும் வடமாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு, யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை (21) நடைபெற்றது. வடமாகாண ஆளுநரை சந்தித்த நியூஸிலாந்து துணை உயர்ஸ்தானிகரிடம் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் பரிமாறப்பட்டன.

வடமாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆளுநரிடம் நியூஸிலாந்து துணை உயர்ஸ்தானிகர் கேட்டறிந்தார்.

வடமாகாணத்தின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, முதலீட்டு வலயங்களை ஸ்தாபித்தல், கல்வி, பொருளாதாரம், வாழ்வியல் நிலை, காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம் ஆகியவை தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

# வடக்கின் உதயம்

## மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் கொடியேற்றம் இன்று



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். மானிப்பாய் மருதடி விநாயகர் கோயிலின் வருடாந்த மகோற்சவத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை (22) நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 25 நாட்களுக்கு திருவிழா நடைபெற்று, சித்திரை புத்தாண்டு தினமான எதிர்வரும் 14ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

மகோற்சவ காலத்தில் காவடி எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், அள்ளு காசும் தென்னம் பிள்ளையும் வழங்குதல், பிள்ளை விற்று வாங்குதல், மடிப்பிச்சை எடுத்தல், பட்டு சார்த்தல் முதலான நேர்த்திக் கடன்களை அடியார்கள் நிறைவேற்ற முடியும். அத்துடன் தேவாரம் ஓதுதல், தேர் வடம் பிடித்தல் முதலான சமயத் திருப்பணிகளையும் அடியார்கள் மேற்கொள்ள முடியுமென, கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி, வவுனியாவில் பொலிஸ் வீரர்கள் தினம்

பரந்தன் குறூப், வவுனியா விசேட நிருபர்கள்



இலங்கை பொலிஸ் வீரர்கள் தினமான 160ஆவது ஆண்டை நினைவுகூரும் பொலிஸ் வீரர்கள் ஞாபகார்த்த தினம் நேற்று வியாழக்கிழமை (21) கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் அனுஷ்டிக்கப்பட்டன.

தமது உயிரை நீத்த பொலிஸ் வீரர்களை நினைவுகூர்ந்து இத்தினம் நாடளாவிய ரீதியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டதுடன், நாட்டின் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வில் அங்குள்ள அனைத்து பொலிஸ் நிலைய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை வவுனியா கண்டி வீதியை அண்டி அமைந்துள்ள பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலக வளாகத்திலுள்ள பொலிஸ் நினைவுத் தூபிக்கு முன்பாக நிகழ்வு நடைபெற்றது.

'யுக்திய' சுற்றிவளைப்பு

## குற்றச்செயல்களை கட்டுப்படுத்த வடக்கில் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

மன்னார் குறூப் நிருபர்



'யுக்திய' சுற்றிவளைப்பின் வடமாகாணத்துக்குக்கான அவசர தொலைபேசி இலக்கமான 107 எனும் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்தை பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் அறிமுகப்படுத்தியதை தொடர்ந்து மன்னார் நகரிலுள்ள வாகனங்களில் அத்தொலைபேசி இலக்கம் கொண்ட ஸ்டிக்கர்கள் ஒட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் புதன்கிழமை (20) முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபால ஹேரத் இந்த அவசர தொலைபேசி இலக்கம் கொண்ட ஸ்டிக்கர்களை முச்சக்கரவண்டிகளில் ஒட்டி ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகள், வாடகை வாகனங்களில் இந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றன.

சட்டத்தை மதித்து நாட்டை உருவாக்கும் செயன்முறையின் கீழ் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள யுக்திய சுற்றி வளைப்பின் போது, வடமாகாணத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள், போதைப்பொருள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கும் வகையில் 107 எனும் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கம் வடமாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகே, பொன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மன்னார் பொலிஸ் நிலைய வீதி போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி, மன்னார் பொலிஸ் நிலைய பொலிஸார் ஆகியோர் பங்குபற்றி ஸ்டிக்கர்களை ஒட்டி வருகின்றனர்.

## அரிசி கொள்வனவில் மோசடி; காலி வர்த்தகருக்கு பிணை

யாழ். விசேட நிருபர்

பிரபல அரிசி ஆலையொன்றிலிருந்து 50 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசியை கொள்வனவு செய்துவிட்டு, அதற்குரிய பணத்தை வழங்காமல் மோசடி செய்த சம்பவம் தொடர்பாக கைதான காலி வர்த்தகர் ஒருவரை யாழ். நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (20) பிணையில் விடுவித்துள்ளது.

அத்துடன், அவ்வர்த்தகரிடமிருந்து மீட்கப்பட்ட அரிசியை மேற்படி அரிசி ஆலை உரிமையாளரிடம் மீண்டும் ஒப்படைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி அரிசி ஆலையிலிருந்து 25 Kg நிறையுடைய 1,200 அரிசி மூடைகளை காலியைச் சேர்ந்த இவ்வர்த்தகர் கொள்வனவு செய்ததுடன், கொள்வனவு செய்யப்பட்ட அரிசிக்கு பணம் வழங்காமல் இருந்துள்ளார். இது தொடர்பாக சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

# மலைச்சாரல்

## கலாபொக்க நெல்லிமலையில் உயிரிழந்த இருவருக்கு இழப்பீடு

### இ.தொ.கா. ஏற்பாடு

ஹற்றன் சுழற்சி நிருபர்

கண்டியின் கலாபொக்க நெல்லிமலை தோட்டத்தில் உயிரிழந்த இரு தொழிலாளர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த உதவிக்காக இ.தொ.கா.வுக்கும் இ.தொ.கா. உப தலைவரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத் தலைவருமான பாரத் அருள்சாமிக்கும் கலாபொக்க நெல்லிமலை தோட்ட மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

தொழில் செய்துகொண்டிருந்த போது நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட திடீர் அனர்த்தத்தில் சிக்கி சண்முகம் விஜயலட்சுமி, ஸ்ரீகந்தராஜ் புவனேஸ்வரி ஆகியோர் கடந்த 2023 ஜூலை 6ஆம் திகதி உயிரிழந்தனர்.

தொழில் செய்துகொண்டிருந்த போது, இத்தொழிலாளர்கள் இருவரும் உயிரிழந்தமையால் இழப்பீட்டை பெற்றுக்கொடுக்க இ.தொ.காவும் அதன் உபதலைவர் பாரத் அருள்சாமியும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தினகரனின் பங்களிப்பு அளப்பரியதாகும்

### மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர்



ஒன்பது தசாப்தகாலமாக தமிழ் மக்களுக்கு பெரும் சேவையாற்றி, இலங்கையின் சுதந்திரம், சமூக, பொருளாதார, கலை, கலாசார அறிவியல், இலக்கிய மேம்பாட்டுக்கு தினகரன் அளித்து வரும் பங்களிப்புகள் அளப்பரியதென, மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபையின் தலைவர் விக்நேஷ்வர சர்வானந்தா தெரிவித்தார்.

தினகரன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு அதன் 92ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்த போது, "இலங்கையின் வரலாற்றிலும் பத்திரிகை உலகிலும் அழியாத்தடத்தை தினகரன் பதிப்பதுடன், தமிழ் பேசும் மக்களின் அறிவை திரட்டுகின்ற சான்றிதழ்களாக திகழும் தினகரனின் ஒன்பது தசாப்த முயற்சியை எம் மனமாற வாழ்த்துகிறோம்.

மென்மேலும் முதன்மை செய்தி பத்திரிகையாக திகழ அப்பத்திரிகையில் தொழில் புரியும் அனைவருக்கும் நல்வாழ்த்து தெரிவிக்கிறோம்.

எமது ஆலயத்தில் வருடம் தோறும் நடைபெறும் மாசிமக தேர் திருவிழாவுக்கு தினகரன் பூரண ஊடக அனுசரணை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது" என்றார்.

## மலையக பாடகி அசானிக்கு மடிக்கணினி அன்பளிப்பு



மலையக பாடகி அசானிக்கு கனடிய தமிழர் பேரவை மடிக்கணினியொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இந்நிலையில் அசானியிடம் மடிக்கணினியை இப்பேரவை சார்பாக தமிழ் முற்போக்குகூட்டணித்தலைவர் மனோ கணேசன் வழங்கி வைத்தார்.

கொழும்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் முருகேசு ஆகியோர் கலந்துகொண்டனர்.

மலையகத் தமிழர் உட்பட ஒட்டுமொத்த தமிழ் மக்களின் சமூக, பொருளாதார வாழ்வாதாரம் தொடர்பான தனது அக்கறையை கனடிய தமிழர் பேரவை வெளிப்படுத்தியுள்ளதாக, தமிழ் முற்போக்குகூட்டணித்தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## பஸ் வண்டியில் பாலியல் சேஷ்டை புரிந்தவர் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரியின் இங்கிரிய பிரதேசத்தில் தனியார் பஸ் வண்டியொன்றில் பயணித்த இளம் பெண் ஒருவர் மீது பாலியல் சேஷ்டை புரிந்த ஆண் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இப்பெண் அமர்ந்திருந்த ஆசனத்துக்கு அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்த இச்சந்தேகநபர், அடிக்கடி அப்பெண்ணை தொந்தரவு செய்ததுடன், இந்தச் சம்பவத்தை அப்பஸ் வண்டியில் சிவில் உடையில் பயணித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அவதானித்துள்ளார்.

இந்நிலையில் அப்பஸ்ஸில் பயணித்த ஏனைய பயணிகளின் உதவியுட ன் பஸ் வண்டியை நிறுத்தி, சந்தேகநபரை இங்கிரிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண், பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இவர் கைது செய்யப்பட்டார்.

## சிவனொளிபாத மலையில் நல்லிணக்க வேலைத்திட்டம்

கினிகத்தேனை தினகரன், ஹட்டன் விசேட நிருபர்கள்



இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சிவனொளிபாத மலையில் விசேட வேலைத்திட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில் நல்லதண்ணீர் சிவனொளிபாத மலையின் அடிவாரத்திலிருந்து சிவனொளிபாத மலை உச்சிவரை சமாதான விழுமியப் பண்புகள் அடங்கிய சுமார் 30 பெயர்ப்பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

சிவனொளிபாத மலை பருவ காலத்தின் போது பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் தரிசனம் செய்வதற்காக சிவனொளிபாத மலைக்கு வந்து செல்கின்றனர். சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், சகவாழ்வு, சமத்துவத்தை யாத்திரிகர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கான நிகழ்வின் போது நல்லதண்ணீர் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக சர்வமத வழிபாடு நடைபெற்றது. இதன்போது சாந்தி, சமாதானம், சகவாழ்வு, விழுமியப்பண்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய நூல்கள் மற்றும் கையேடுகள் யாத்திரிகர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சிவனொளிபாத மலைவரை சர்வமத குழுவினர் பாத யாத்திரை சென்றனர்.

தேசிய சமாதான பேரவையின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் ஈரேசாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட தேசிய சமாதான பேரவைத் தலைவர் பிரம்மஸ்ரீ கலாநிதி நந்தகுமார் குருக்கள், ரத்தின தேரர், போதகர் ஜெரி ஆனந்தராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## ஹட்டனில் 100 பேரை கௌரவிக்கும் நிகழ்வு

ஹட்டன் விசேட நிருபர்

'நாளைய மலையகத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளின் கீழ் 100 பேரை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி ஹட்டனிலுள்ள அஜந்தா விடுதியில் நடைபெறவுள்ளது.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இதனை நினைவுகூர்ந்து கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

கண்டியில்

## இந்திய உதவி தூதுவராலயம் அமைக்கப்பட்டு 100 வருடங்கள்



அக்குறணை குறூப் நிருபர்

கண்டியில் இந்திய உதவித் தூதுவராலயம் அமைக்கப்பட்டு 100 வருடங்களாவதையிட்டு இந்த வருடம் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருவதுடன், இதன் ஓரம்சமாக இமயமலை சிகரத்துக்கு மலை ஏறுவதற்கு பேராதனை பல்கலைக்கழகக் குழுவினர் தயாராகியுள்ளனர்.

இதற்கான நிதி உதவியை கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதுவராலயம் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) வழங்கியுள்ளது.

இது தொடர்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் இந்திய உதவித் தூதுவர் எஸ்.ஆதிரா, இரண்டாம் செயலாளர் பி.சோமராஜ், பேராதனை பல்கலைக்கழக வெளிக்கள ஆய்வு அதிகாரி கலாநிதி பிரியதர்ஷனி பிரேமரத்ன, இமயமலை ஏறத் தயாராகவுள்ள குழுவினரும் கலந்துகொண்டனர்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்


**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. கீழே தரப்பட்டுள்ள பிராணிகளை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம். அவ்வாறு சரியாகப் பிரிக்கப்பட்ட கூட்டங்களைத் தெரிவு செய்க.




i. AB யும் CD யும்     ii. AC யும் BD யும்     iii. AD யும் BA யும்


02. பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை எத்தனை கூட்டங்களாகப் பிரிக்கலாம்?



i. 3     ii. 2     iii. 4

03. மரக்கறி, பழங்கள், கொய்யா ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை பின்வரும் படம் காட்டுகிறது. இதில் C இனால் குறிப்பிடப்படுவது

i. மரக்கறி
ii. பழம்
iii. கொய்யா




04. கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யுங்கள். பகற்கனவு காணுதல், ஆகாயத்தில் கோட்டை கட்டுதல், கல்லில் நாருரித்தல்

i. இலகுவான காரியம்     ii. உண்மையான காரியம்
iii. செய்ய முடியாத காரியம்

| | | |
|---|---|---|
| **A** - உலக | **D** – வேண்டும் | **G** - கொரோனா |
| **B** - இல்லாதொழிய | **E** – கொடிய | **H** - நாடுகளில் |
| **C** - இருந்து | **F** – நோய் | |

05. கருத்துள்ள வாக்கியத்தை குறிக்கும் எழுத்துக் கூட்டத்தைத் தெரிவு செய்க.

i. A H C E G F B D     ii. H C E G A F B D     iii. D B F A G E C H

06. நாம் செய்யக்கூடிய பிரார்த்தனை

i. EFBD     ii. FEBD     iii. EDBF

- **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் பிழையான கூற்று எது?**

07. i. வெளவால் இரவில் நடமாடும். அது முலையூட்டியாகும்.
ii. தவளை நீரிலும் நிலத்திலும் வாழும். அது நீர்வாழ் உயிரினமாகும்.
iii. செண்பகம் ஒரு பறவையாகும். அது ஒரு ஊனுண்ணி ஆகும்.

08. i. எமது நாட்டின் பிரதான உணவு சோறு ஆகும். அது நெல்லிலிருந்து பெறப்படும்.
ii. அப்பிள் ஒரு பழமாகும். அது எமது நாட்டில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது.
iii. மனிதன் ஒரு விலங்கு. அவன் முலையூட்டி இனத்தைச் சேர்ந்தவன்.

09. ஒரு புகையிரதம் 100 m நீளமுள்ள மேடையை 2 நிமிடத்தில் கடக்கும் எனில் அது 75m நீளமான மேடையைக் கடக்க எடுக்கும் நேரம் யாது?

i. 90 செக்கன்கள்     ii. 120 செக்கன்கள்     iii. 100 செக்கன்கள்

10. வீதியில் இரு மின்கம்பங்களுக்கு இடையே 3 கொடிகள் வீதம் தொங்கவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனவே 30 கொடிகளை எத்தனை மின்கம்பங்களுக்கு இடையே தொங்கவிடலாம்.

i. 13     ii. 12     iii. 10

11. 21 மீற்றர் உயரமான தூண் ஒன்றின் வழியே மேல் நோக்கி ஏறும் நத்தை ஒன்று, மணித்தியாலத்திற்கு 3 மீற்றர் தூரம் ஏறி 30 நிமிடங்கள் ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் மேலே ஏறிச் செல்லும். அது உச்சியை அடைவதற்கு எடுக்கும் நேரம் யாது?

i. 9 மணித்தியாலம் 30 நிமிடம்     ii. 10 மணித்தியாலம்
iii. 10 மணித்தியாலம் 30 நிமிடம்

12. வயரொன்றில் சிவப்பு, நீலம், மஞ்சள் நிற மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு உள்ளன. சிவப்பு நிற மின்குமிழ் 3 தடவைகள் ஒளிரும் போது நீல நில மின்குமிழ் ஒரு தடவையும் நீல நிற மின் குமிழ் 2 தடவைகள் ஒளிரும் போது மஞ்சள் நிற மின்குமிழ் 4 தடவைகளும் ஒளிரும் வகையில் பொருத்தப்பட்டுள்ளன. 10 நிமிடத்துள் மஞ்சள் நிற மின்குழிழ் 16 தடவைகள் ஒளிருமாயின் மூன்று மின்குமிழ்களும் எத்தனை தடவைகள் ஒளிரும்.

i. 48     ii. 36     iii. 24

13. பானை ஒன்றுக்குள் 3 சிவப்பு நிறப் பந்துகளும், 2 நீல நிறப் பந்துகளும் 3 கபில நிறப் பந்துகளும் இருந்தன. கண்களை மூடிக்கொண்டு ஒரு பந்தை எடுக்கும் போது அது கட்டாயம் நீலப் பந்தாக இருப்பதற்கு எத்தனையாவது தடவை எடுக்க வேண்டும்?

i. 5     ii. 7     iii. 3

14. ஒரு அணிவகுப்பில் குமரனுக்கு முன்னால் 7 பேரும், கபிலனுக்குப் பின்னால் 2 பேரும், இருவருக்கும் இடையில் 3 பேரும் நின்றனர். எனவே அணிவகுப்பில் மொத்தமாக நின்றவர்களின் எண்ணிக்கை யாது?


i. 15 பேர்     ii. 12 பேர்     iii. 14 பேர்

15. லதாவிற்கு 50m தூரத்தில் வடக்குத் திசையில் சீதா இருந்தாள். சீதாவிற்கு 50m தூரத்தில் கிழக்குத் திசையில் சுதா இருந்தாள். சுதாவிற்கு 50m தொலைவில் வடக்குத் திசையில் கீதா இருந்தாள். அதன்படி லதா இருப்பது கீதாவுக்கு,

i. வடகிழக்குத் திசையில்     ii. தெற்குத் திசையில்
iii. தென்மேற்குத் திசையில்

16. கடை ஒன்றிலிருந்த கொய்யாப் பழங்களில் 1/3 பங்கு விற்கப்பட்டது. கடையில் மிகுதியாக 36 கொய்யாப்பழங்கள் எஞ்சி இருந்தன எனின் கடையில் இருந்த கொய்யாப்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

i. 72     ii. 54     iii. 18

17. 

உருவில் அவதானிக்கக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

i. 10
ii. 4
iii. 9

18. 20m அகலமான குளத்தைக் கடக்க எத்தனிக்கும் முதலை ஒன்று நிமிடத்திற்கு 5m நீந்த காற்றின் தாக்கத்தால் 2m பின் தள்ளப்பட்டது. எனவே முதலை எத்தனையாவது நிமிடத்தில் மறுகரையை அடையும்.

i. 7     ii. 5     iii. 6




19. ஒரு கட்டடம் ஒன்றைக் கட்டி முடிக்க 20 நபர்களுக்கு 10 நாட்கள் தேவையெனக் கணிக்கப்பட்டது. எனவே அக்கட்டிடத்தை 25 நபர்களைக் கொண்டு கட்டுவித்தால் எத்தனை நாட்களில் கட்டி முடிக்கலாம்?

i. 8     ii. 10     iii. 12

20. கீழ்வரும் ஆண்டுகளில் லீப் ஆண்டாக அமையக்கூடியது?

i. 1998     ii. 1900     iii. 1986

21. ¾ பகுதி நிழற்றப்பட்ட உரு பின்வருவனவற்றில் எது?

i.      ii.      iii. 

22. ஒரு கழகத்தில் 15 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மாதம் ஒருவரின் வீட்டில் கூடுவது வழக்கம். சகீசன் வீட்டில் 2016 பெப்ரவரி மாதம் கூடினர் எனின் அடுத்து எப்போது சகீசன் வீட்டில் கூடுவர்?

i. 2017 ஏப்ரல்     ii. 2017 யூன்     iii. 2016 மே

23. இலங்கை அணி கிறிக்கட் விளையாட்டில் பல வருடங்களாக வெற்றி பெறுகின்றது. அதற்குக் காரணம்,


i. சிறந்த வீரர்கள் அணியில் உள்ளமை.
ii. அணி வீரர்கள் ஒற்றுமையாக விளையாடுகின்றமை.
iii. கிரிக்கெட் விளையாட்டில் இலகுவாக வெற்றியைப் பெறலாம்.

24. மரங்களை வெட்டி வீதிகளை அகலமாக்குவதனால் எதிர்காலத்தில் நிகழக்கூடியதில் ஒன்று,


i. மழை இல்லாது வரட்சி ஏற்படும்.
ii. மழைவீழ்ச்சி கூடி வெள்ளப்பெருக்கு ஏற்படும்.
iii. வீதிகள் அகலமாகும்.

25. கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணை தெரிவு செய்க.

i. 134
ii. 102
iii. 51




26. மூன்று பென்சில்களினதும் மொத்த நீளம் யாது?




i. 10cm     ii. 13cm     iii. 14cm

27. தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது என்ற எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்

i. 100000     ii. 99910     iii. 99900

28. ஒரு மைதானத்திலுள்ள கம்பங்களுக்கு இடையில் 3 கொடிகள் தொங்கவிடப்பட்டு மைதானத்தை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. மைதானத்தில் 11 கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கு இடையில் தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

i. 33     ii. 30     ii. 36

29. ரதி ஒவ்வொரு நாளும் பணம் சேகரிப்பது வழக்கமாகும். அவள் ஐந்து நாட்கள் சேகரித்த பணத்தின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| 1ம் திகதி | 2ம் திகதி | 3ம் திகதி | 4ம் திகதி | 5ம் திகதி |
|---|---|---|---|---|
| ரூபா 45.00 | ரூபா 58.00 | ரூபா 71.00 | ரூபா. 84.00 | ரூபா. 97.00 |

i. 6ஆம் திகதி அவள் சேகரித்த பணம் எவ்வளவு?

i. ரூபா. 110.00     ii. ரூபா 100.00     iii. ரூபா. 120.00

30. நான்கிலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய, மிகச் சிறிய எண்கள் எவை?

| | |
|---|---|
| 9 | 0 |
| 6 | 4 |

i. 9064, 0964     ii. 9640, 6049
iii. 9640, 4069

(10ஆம் பக்கம் பார்க்க)


(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

31. 2 லீற்றர் 58 மில்லி லீற்றரை மில்லி லீற்றரில் எழுதினால்,
i. 2058 மில்லி லீற்றர் ii. 258 மில்லி லீற்றர் iii. 2050 மில்லி மீற்றர்

32. 31 நாட்களைக் கொண்ட அடுத்து வரும் மாதங்கள் எவை?
i. ஏப்ரல், மே ii. ஜூன், ஜூலை iii. ஜூலை, ஆகஸ்ட்

33. 
இக்கோணம் செங்கோணத்தை விட
i. பெரியது
ii. அதே அளவானது
iii. சிறியது

34. 13 : 45 மணித்தியாலம் இதனைக் கடிகாரத்தில் குறித்தால்,

i.  ii.  iii. 

35. வளைந்த விளிம்புகளை உடைய திண்மம் ஒன்றின் பெயர் என்ன?
i. கோளம் ii. உருளை iii. சதுரமுகி

36. ………….. XVIII …………… இந்த எண்ணுக்கு முந்திய, பிந்திய எண்களை உரோமன் எண் குறியில் எழுதினால்
i. XX, XVII ii. XVII, XIX iii. XIX, XIIV

37.
```
 □ 5 8
 □ 2 4
 -----
 5 8 2
```
வெற்று அடைப்பில் வர வேண்டிய பொருத்தமான இலக்கங்கள்
i. 3, 3 ii. 4, 2 iii. 3, 2

38. எண்ணாயிரத்து எண்பத்தொன்று என்பதன் எண்குறி
i. 8001 ii. 881 iii. 8081

39. பொறியொன்றில் 5 நிமிடங்களில் உற்பத்தி செய்யும் சீனியின் அளவு 4100 kg ஆகும். அது 1 நிமிடத்தில் உற்பத்தி செய்யும் சீனியின் அளவு யாது?
i. 4100 kg ii. 820 kg iii. 250 kg

40. ஜப்பானின் நேரம் இலங்கை நேரத்தைவிட 3 மணி 30 நிமிடங்கள் அதிகமாகும். எனது வீட்டு சுவர்க்கடிகாரம் 15 நிமிடங்கள் அதிகமாக ஓடும் எனில் அக்கடிகாரம் மு.ப 7.35 ஐ காட்டும் போது ஜப்பானின் நேரம் யாது?
i. மு.ப. 10.50 ii. மு.ப. 10.45 iii. மு.ப. 11.05

# கடந்த வார (15.03.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

I.
01. i. சிறுவர்கள் ii. பெற்றோர்கள்
02. i. மெல்ல மெல்ல ii. கூட்டங் கூட்டமாக
03. i. சமுத்திரம் ii. பட்சி
04. நீலக்கடல்
05. பட்டாம் பூச்சிகளைப் போல
06. அமைதியாக
07. i. சென்றோம் ii. எழுதப்பட்டது iii. தொடங்கியது
08. பெரியவரே! கதிரையில் அமர்ந்து ஓய்வெடுங்கள்.
09. i. கத்தும் ii. கன்று
10. சகபாடி ii. பொன்விழா
11. i. பிழை ii. பிழை
12. i. அறிவித்தல் ii. அறிவுறுத்தல்
13. i. வாயால் ii. பச்சை
14. i. அழைத்துச், ஓரிடம் ii. நரியும், எல்லாம் நின்றன

II.
15. i. பிளிறும்
16. i. நாற்று ii. பிள்ளை
17. i. தலை ii. நூலகம்
18. i. This is my Father
19. i. முயல் ii. வீடு
20. 28
21. 252
22. B
23. i. ரூ. 880 ii. ரூ. 120
24. 125
25. 62kg 250g
26. i. ஆறு ii. ஆறு
27. 6.30
28. ii. 48
29. i. 3143 ii. 1203

III.

| | | |
|---|---|---|
| 30. 2 | 39. 1 | 49. 1 |
| 31. 2 | 40. 2 | 50. 2 |
| 32. 3 | 41. 1 | 51. 1 |
| 33. 2 | 42. 3 | 52. 1 |
| 34. 3 | 43. 2 | 53. 1 |
| 35. 1 | 44. 2 | 54. 1 |
| 36. 2 | 45. 3 | 55. 1 |
| 37. 1 | 46. 3 | 56. 2 |
| 38. 2 | 47. 1 | 57. 2 |
| | 48. 3 | 58. 3 |
| | | 59. 2 |

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை

# வைத்தியர்களை இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள்

**காரைதீவு குறூப் நிருபர்**

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையிலுள்ள அனைத்து வைத்திய அதிகாரிகளையும் அவர்கள் பாதுகாப்பு கருதி வேறிடத்துக்கு தற்காலிகமாக இடமாற்றுமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளரை கேட்டுக்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சரின் செயலாளர் டொக்டர் அசேல குணவர்தனவுக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே இதுதொடர்பில் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

அங்குள்ள எட்டு மருத்துவ அதிகாரிகளையும் அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை மற்றும் அம்பாந்தோட்டை, பிலியந்தல, பியகம ஆகிய இடங்களுக்கு தற்காலிகமாக இடமாற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் அங்கு ஏற்பட்ட அசாதாரண சம்பவம் காரணமாக வைத்திய அதிகாரிகள் கடந்த 12 நாட்களாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வைத்திய சாலை நடவடிக்கைகள் முற்றாக செயலிழந்துள்ளது. அதன்காரணமாக பொதுமக்கள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த இரு நாட்களாக பல்வேறு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும் வைத்தியசாலை இன்னும் திறக்கப்படவில்லை.

# வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர்களால் மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் திடீர் பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் சில வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்ந்து விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தல் போன்றவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கிராமப் புறங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இப்பிரதேசங்களிலும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# அரசியலமைப்பு சட்டத்துக்கமைய ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும்

## ஐ.தே.க பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார



எமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கமைவாக இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான நிதியை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற விசேட வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு பட்டிருப்பு மற்றும் கல்குடா ஆகிய தேர்தல் தொகுதிகளிலுள்ள பிரதேச அமைப்பாளர்களுக்கு நியமனக்கடிதங்கள் கையளிக்கவென இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 43 பிரதேச அமைப்பாளர்கள் இந்நிகழ்வில் நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அமைப்பாளர்கள் எதிர்காலத்தில் செயற்படவேண்டிய முறைகள் குறித்து இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார இங்கு தொடர்ந்து பேசுகையில், எதிர்வரும் செப்டெம்பர் பிற்பகுதியில் அல்லது ஒக்டோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்


## உயிர்த்தியாகம் செய்த பொலிஸார் நினைவுதினம்



160 ஆவது உயிர்த்தியாகம் செய்த பொலிஸார் நினைவுதினத்தை முன்னிட்டு திருகோணமலை பிரதிப்பொலிஸ் மா அதிபர் சமன் சிகேரா தலைமையில் நினைவு தினம் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. *(ரொட்டவெவ குறூப் நிருபர்)*

# தாமரைக்குளம் ஷீரடி சாய் நாதரின் மூன்றாம் ஆண்டு பெருவிழா

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



அம்பாறை திருக்கோவில் தாமரைக்குளம் ஷீரடி சாய் கருணாலயத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகின்றது . இதன் இறுதிநாள் விசேட பூசை வழிபாடுகள் ஏப்ரல் 02ஆம் திகதி நடைபெறவுள்ளது. 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாய் நாதருக்கு பக்தர்களால் பால் அபிஷேகம் பண்ணப்பட்டு ஆரம்பமாகும் பெருவிழா தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

சாய் கருணாலயத்தின் விழாக் காலங்களில் தினமும் சிறப்பு பூசையும், ஆராத்தியும், அபிஷேகமும் அதிகாலை 5 மணி, மதியம் 12 மணி, மாலை 4 மணி இரவு 7 மணி ஆகிய நேரங்களில் இடம்பெறவுள்ளன. அத்துடன் தினமும் மகேஸ்வர பூசை அன்னதானம் நடைபெறவுள்ளதாகவும் ஆலய தர்மகர்த்தா சீதா விவேக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முதன் முதலில் ஷீரடி சாய்பாபவிற்கென பிரமாண்டமான கருணாலயம் திருக்கோவில் பிரதேசத்தின் தாமரைக்குளம் எனும் பகுதியில் அமையப்பெற்றுள்ளது. இவ்வாலயத்தின் ஊடாக வடக்கு, கிழக்கில் வசிக்கும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களின் கல்வி, வாழ்வாதாரம் போன்ற மேம்பாட்டுக்கான உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. இதை நோர்வேயில் வசிக்கும் பெரிய கல்லாற்றைச் சேர்ந்த கருணாலயத்தின் தர்மகர்த்தா சீதா விவேக் குடும்பத்தினர் சிறப்பாக செய்து வருகின்றனர்.

திருக்கோயிலில் அமையப்பெற்றுள்ள சீரடி சாய் கருணாலயமானது கடந்த 2021 இல் சீரடி சாய் நாதரின் பிரதிஷ்டை மற்றும் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு செய்யப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் பிரம்மாண்டமான முறையில் அமையப்பெற்றுள்ள கருணாலயத்தின் அற்புதமும், மகிமையும் மெய் சிலிர்க்க வைக்கிறது.

# நாவிதன்வெளி கலாசார அதிகார சபைக்கு புதிய நிர்வாகத்தினர் தெரிவு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் புதிய நிர்வாகத் தெரிவு கலாசார மத்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக ஆர்.ராகுலநாயகி (நாவிதன்வெளி பிரதேச செயலக செயலாளர்), உப தலைவராக எம்.என்.பௌசர், செயலாளராக பா.ஜனுராஜ், உப செயலாளராக எம் . சகாயமலர், பொருளாளராக என்.பிருந்தா, ஒருங்கிணைப்பாளராக ஏ.எல்.எம்.ஷினாஸ் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆலோசனையாளர்களாக எஸ்.செல்வசிகாமணி, ஏ.எம் .அபூபக்கர் மற்றும் உத்தியோகபூர்வ அங்கத்துவம் கே.பி . மனோஜ் இந்திரஜித் (கிராம நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



# உலக நீர் தினம் 2024

## - சமாதானத்துக்காக நீர்

## மார்ச் 22







தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் வருடாந்தம் கொண்டாடப்படும் உலக நீர் தினத்தை "சமாதானத்துக்காக நீர்" என்ற தொனிப்பொருளை அர்த்தமுள்ளதாக்கக்கூடிய வகையில் 2024 மார்ச் மாதம் 22ஆம் திகதி இரத்மலானையில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நீர் மற்றும் சுகாதாரத்துக்கான சிறப்பு மையத்தில் (CEWAS) நடாத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை இலங்கை நாட்டில் வாழும் மக்களில் 50%க்கு கிட்டிய சதவீதத்திற்கு அதாவது, 30 இலட்சத்திற்கு மேற்பட்ட பாவனையாளர்களாகிய மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் ஒரேயொரு தேசிய நிறுவனமாகும். 34 ஆய்வகங்களின் ஊடாக 24 மணி நேரமும் உலக அங்கீகாரம் பெற்ற தரங்களுக்கேற்ப சுகாதாரத்துடன் கூடிய நீரை விநியோகிக்கின்றது. இந்நடவடிக்கையை மேற்கொள்ளும்போது ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் சார்ந்த தாக்கங்கள் மற்றும் உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியில் முகம்கொடுக்க வேண்டியேற்படும் மிகச் சிக்கலான தடைகளை எதிர்கொண்டு இந்த தேசிய பணியானது தொடர்ச்சியாகவும் மிகச்சிறந்த முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறே நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதியினை நாட்டினுள் மேலும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறானதொரு பாரிய சேவையை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பணியாளர்களை பாராட்டுவதே இம்முறை உலக நீர் தினத்தின் நோக்கமாகும்.

அத்துடன் நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளிலிருந்து மாணவர்களை உலக நீர் தின விழாவில் பங்குபற்றச் செய்வதன் ஊடாக அவர்களுக்கு நீர் மற்றும் துப்புரவேற்பாடு சம்பந்தமான அறிவினை வழங்க முடியும். பல்வேறு தொழில்கள் மற்றும் சேவைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அவற்றை உயர்ந்த தரத்துடன் பேணிக்கொள்வதற்காக ஊக்கமளித்தல் மற்றும் பாராட்டும் நடவடிக்கைகள் இந்த உலக நீர் தின விழாவின்போது மேற்கொள்ளப்படும்.



### கௌரவ ரனில் விக்கிரமசிங்க

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி**

சுத்தமான குடிநீர் கிடைக்காமல் உலகில் பெரும்பாலான மக்கள் இன்னும் அவதிப்படுகின்றனர். அதனால் உலகெங்கிலும் நீர் தொடர்பான மோதல்கள் இருப்பதில் ஆச்சரியமில்லை. இதனால் நீர் பாதுகாப்பு மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆகியவற்றில் சர்வதேச சமூகம் தீவிரமாக தலையிட வேண்டிய தேவையுள்ளது.

எனவே, ஐக்கிய நாடுகள் சபை 2024ஆம் ஆண்டு உலக நீர் தினத்தை "சமாதானத்துக்காக நீர்" என்ற தொனிப் பொருளில் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

பொருளாதார மீட்சியை அடைவதில் இலங்கை நீண்டகால நிலைத்தன்மைக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. அத்துடன் அனைத்து குடிமக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்து ஏனைய நாடுகளுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்து விவசாயம், உணவு உற்பத்தி, நீர் முகாமைத்துவம் ஆகியவற்றில் புரட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடும் போது, எதிர்கால சந்ததியினருக்காக நீர்மூலங்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகியவை பாதுகாக்கப்பட்ட ஓர் பூமியாக இலங்கை உள்ளது. நாட்டு மக்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ளும் உரிமையைப் பாதுகாக்க அரசாங்கம் கடுமையாக உழைத்து வருவதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியன அர்த்தமுள்ள உலக நீர் தினத்துக்கான நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. அதற்காக உழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### கௌரவ தினேஷ் குணவர்தன

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர்**

ஆகாயத்திலிருந்து விழும் ஒரு துளி நீர் கூட பயனின்றி கடலைச் சென்றடையக்கூடாது என்பதில் மிகுந்த கரிசனை கொண்டிருந்த எமது முன்னோர்கள் உலகையே வியப்பில் ஆழ்த்திய நீர் விநியோக முறைகளை ஏற்படுத்தினார்கள். நீர் மூலங்களையும் நீர்நிலைகளையும் அவர்கள் தெய்வீக உணர்வுடன் பாதுகாத்து நிர்வகித்து அடுத்த தலைமுறைக்கு கையளித்தனர்.

இன்றைய உலகமயமாக்கல் மற்றும் துரித நகரமயமாக்கலின் மத்தியில் நீர் மூலங்களைப் பாதுகாத்து பராமரித்துப் பேணுவது ஒரு பாரிய சவாலாக மாறியுள்ளது. இன்று உலகம் குடிநீர் நெருக்கடியின் விளிம்பில் உள்ளது. நீர் மூலங்களையும் நீர்நிலைகளையும் பெரும் பொருட்செலவில் உற்பத்தி செய்யப்படும் குடிநீரையும் பாதுகாக்கத் தவறினால் அடுத்த உலகப் போர் நீருக்கானதாகவே இருக்கும்.

எனவே, நவீன அறிவையும் தொழில்நுட்பத்தையும் விரைவாகப் பயன்படுத்தி, சிறந்ததோர் தொலைநோக்குப் பார்வையுடன் செயற்படுவதன் மூலம் எமது அடுத்த தலைமுறைக்கு நீரைப் பாதுகாத்து வழங்கும் சவால் எம் முன்னே உள்ளது.

நான் நீர் விநியோக அமைச்சராக இருந்தபோது, நகரங்கள் முதல் தொலைதூர கிராமங்கள் வரை முன்னெடுத்த பாரிய, நடுத்தர மற்றும் சிறியளவிலான குடிநீர்த் திட்டங்களுக்கு மேலதிகமாக, கிராமிய சமூக குடிநீர்த் திட்டங்களை ஒருங்கிணைத்து சமூக நீர் விநியோகத் திணைக்களம் நிறுவப்பட்டதானது, "இது என்னுடையது, எம்முடையது" என்ற உணர்வின் அடிப்படையில் அமைந்த முன்னுதாரணமான சமூக பங்களிப்பிலான குடிநீர் திட்டங்களையும் அவற்றின் தொடர்ச்சியான வெற்றியையும் எதிர்பார்த்ததாகும்.

நீர் வழங்கல் அமைச்சு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை என்பன பாராட்டத்தக்க அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால இலக்குகளை வெற்றிகொள்ளும் வகையில் செயற்படுவது மிகவும் முக்கியமானதாக கருதுகின்றேன்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை இந்த ஆண்டுக்கான உலக நீர் தின கருப்பொருளான "சமாதானத்துக்காக நீர்" என்ற புத்தாக்க எண்ணக்கருவின் அடிப்படையில் செயலாற்றுவது மிகவும் முக்கியமானதாகும்.



### கௌரவ ஜீவன் தொண்டமான்

**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்**

"சமாதானத்துக்காக நீர்" என்பது இம்முறைக்குரிய உலக நீர் தின தொனிப்பொருளாகும். எம்மை பிரிக்க கூடிய பல்வேறுபட்ட பிரிவுகளை ஒதுக்கி வைக்கக்கூடிய உலகளாவிய வளமாக "நீர்" வரையறை செய்யப்படுகின்றது.

உலகத்தில் மனிதர்களை வெவ்வேறாக பிரிக்க கூடிய செயற்கையான எல்லைகளுக்கு முன் அனைவரையும் ஒன்றாக இணைக்கக்கூடிய இயற்கையான வளம் நீராகும். பல தனித்துவமான சமூகங்களாக மற்றும் பல்வேறுபட்ட இனங்களாக உலகத்தில் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு காணப்படுவதாயினும் அவர்களது ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பிற்கான அடிப்படையாக நீர் காணப்படுகின்றது. அதற்கிணங்க எம்மை துன்பத்துக்குள்ளாக்கக்கூடிய பன்முக உலகளாவிய அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்கு மத்தியில் எமது நீர்ப்பிடிப்பு பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் சுத்தமான குடிநீருக்கான வாய்ப்பினை உறுதிப்படுத்தும் சவால் சம்பந்தமாக முன்னெப்போதும் இல்லாதவாறு சிந்திப்பதோடு அவ்விடயம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக முக்கியமானதொரு அங்கமாக மாறியுள்ளது.

இலங்கை நாட்டினுள் நீர் வளத்தின் நிலையான எதிர்காலத்தின் நிமித்தம் பல விரிவான மறுசீரமைப்பு மற்றும் கொள்கை சார்ந்த அடிப்படை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான முன்னோடியாக நாம் செயற்படுவோம். இந்த மறுசீரமைப்பின் ஊடாக கழிவுநீரை முகாமைத்துவம் செய்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் பாதுகாக்கும் முறையில் சிறந்ததொரு மாற்றம் நிகழ்கின்றது. நீர் மனிதனின் அடிப்படையானதொரு தேவை மாத்திரமன்றி அனைவருக்கும் பொதுவான முறையில் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமையாகும் என்ற நெறிமுறையானது அதன் ஊடாக பிரதிபலிக்கப்படுகின்றது.

எமது மறுசீரமைப்புக்களில் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீரின் நிமித்தம் நிலவுகின்ற போட்டிரீதியான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நீர் வளத்தை முகாமைத்துவம் செய்யும் புதியதொரு திட்டமொன்றும் உள்ளடங்குகின்றது. எதிர்காலத்தில் நீர் துறை சார்ந்த அனுகூலங்களை வழங்குவதற்காக வெளிப்படைத் தன்மையுள்ள புதிய மூலோபாய கட்டமைப்புகளை காலநிலை மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிப்பதற்கு அடித்தளமிடப்பட்டுள்ளது.

நீர் விநியோக தொகுதியை செயற்திறன் மிக்கதாக்கி மக்களுக்கு குடிநீர் வசதியை கிடைக்கப்பெற வேண்டிய உயர் தரத்தில் வழங்குவதற்கு நிலையான நீர் வள முகாமைத்துவத்தின் ஊடாக திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் இந்த மாற்றத்தை இலங்கை நாட்டின் நீர் துறையினுள் உருவாக்குவதில் முதலிடம் வகிக்கின்றது. நாடளாவியரீதியில் ஒவ்வொரு குடிமகனுக்கும் சுத்தமான குடிநீர் மற்றும் பாதுகாப்பான துப்புரவேற்பாட்டு வசதியினை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் இத்துறையின் நிலைபேற்றிற்காகவும் நீர் வழங்கல் சபையும் சமூக நீர் வழங்கல் திணைக்களமும் மிக அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

2024 ஆம் ஆண்டில் உலக நீர் தின விழாவை கொண்டாடுவதன் நிமித்தம் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் எனது அலுவலக பதவியினருக்கும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கும், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கும் அவர்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் உன்னத சேவைக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இம்முயற்சிகள் எமது கூட்டு அர்ப்பணிப்பின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளதுடன், நீரானது உலகத்தில் சமாதானத்தை கட்டியெழுப்பக்கூடிய பாலமாக செயற்படும்.

இம்முறை உலக நீர் தினத்தின் போது எமது நீர் வளத்தை பாதுகாப்பதற்காகவும் பாதுகாத்துக்கொள்வதாகவும் உறுதிமொழியை புதுப்பித்துக் கொண்டு நீர் சமாதனத்தின் மற்றும் சௌபாக்கியத்தின் ஊற்றாக மாறக்கூடிய ஒரு நாட்டினை மற்றும் உலகினை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.



### கௌரவ சசீந்திர ராஜபக்ஷ

**நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்**

'வானத்திலிருந்து விழும் ஒரு நீர் துளியேனும் விரயமாவதற்கு இடமளிக்கக் கூடாது' என்ற நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் உலகத்திலேயே மிக பலம்வாய்ந்த நீர்ப்பாசன கலாசாரமொன்று இலங்கை நாட்டினுள் நிறுவப்பட்டதுடன், அதனூடாக நீரை அடிப்படையாகக் கொண்டு அரசினால் இந்நாடு தன்னிறைவுடைய நாடாக கட்டியெழுப்பப்பட்டது.

ஆயினும், சம்பிரதாய வாழ்க்கை முறையானது வேகமாக மாற்றமடைந்துள்ளது. தொழில்நுட்ப புரட்சி மற்றும் உலகமயமாதலின் காரணமாக விவசாயம் மாத்திரமன்றி நீர் பாவனைக்காகவும் சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக அதிக பணம் செலவிட வேண்டியுள்ளதுடன் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் காரணமாக நீர் முகாமைத்துவமானது விவசாய ரீதியான உற்பத்திகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் அடிப்படை மனித உரிமையாக கருதி மனிதனின் நீர் பாவனைக்காக நீர் மூலங்கள் மற்றும் நீர்ப்பிடிப்பு பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

சனத்தொகை அதிகரிப்பு மற்றும் உலகளாவிய நெருக்கடிகளுக்கு முன் நீர் எனப்படும் இயற்கை வளத்தினை அவ்வாறே பேணிக்கொள்ளும் நடவடிக்கையை கட்டுப்படுத்தி வைக்க முடியாத இயற்கையான நிகழ்வாக மாற்றமடைந்துள்ளது. இவ்வாறானதொரு சூழலில் சுகாதாரத்துடன்கூடிய குடிநீரை மக்களுக்கு தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கான செலவு மற்றும் முயற்சிகளை பாராட்டுதல் வேண்டும். நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதியாக நீர் வழங்கல் நடவடிக்கையை சிறந்த வகையில் மேற்கொள்வதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அர்ப்பணிப்பினை இங்கு பாராட்டுதல் வேண்டும்.

அத்துடன், நீர் சம்பந்தமாக எதிர்காலத்தில் முகம்கொடுக்க வேண்டியேற்படும் சிக்கல்கள் குறித்து திறந்த சொற்பொழிவு ஒன்றுக்கான வாய்ப்பினை வழங்கி "சமாதானத்துக்காக நீர்" என்ற தொனிப்பொருளுடன் உலக நீர் தினத்தை கொண்டாடுவதற்கும் அதனை அர்த்த முள்ளதாக்குவதற்கும் வெளிக்காட்டுகின்ற ஆர்வம் சம்பந்தமாக குறித்த ஏற்பாட்டுக் குழுவிற்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**CHATBOT SHPPORT**
- WhatsApp - 011 20 44 800
- Facebook Messanger m.me/NWSDB

**CUSTOMER CARE HOTLINE**
Toll Free Number (24 X 7)
**1939**

மேலதிக விபரங்களுக்கு உட்பிரவேசியுங்கள்

www.waterboard.lk

facebook.com/NWSDB
twitter.com/NwsdbOfficial
instagram.com/nwsdb_official
youtube.com/@NWSDBOfficial
threads.net/@nwsdb_official






# உலக நீர் தினம்

## சமாதானத்துக்காக நீர்

22 மார்ச் 2024

## கௌரவ நீர்ப்பாசன அமைச்சர் அவர்களின் உலக நீர் தின செய்தி



மனித நாகரீகத்தின் அடித்தளம் மற்றும் மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களின் உயிர்நாடியான நீர் பூமியின் ஓர் அற்புதமான வளமாகும். பூமியின் மேற்பரப்பில் எழுபது சதவீதத்திற்கும் அதிகமான பரப்பளவு சமுத்திரம் மற்றும் கடல் என்றாலும், மனிதர்களால் பயன்படுத்தக்கூடிய நீர் மிகக் குறைவு. வருடத்தில் இரண்டு பருவமழை கிடைத்தாலும், பருவநிலை மாற்றம், வேகமான சனத்தொகை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், நம் நாட்டின் உலர் வலயத்தின் சில பகுதிகள் தற்போதும் நீர் பற்றாக்குறையை சந்தித்து வருகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட வளமான நிரின் தேவையை பூர்த்தி செய்வது, அதை மிகவும் சிக்கனமாகவும் திறமையாகவும் பயன்படுத்துவது இன்று முழு உலகமும் எதிர்கொள்ளும் சவாலாக உள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்ற நாடுகளின் கருத்துப்படி, உலக சமூகம் நீர் வளங்களைப் பாதுகாப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை அங்கீகரித்து, 1993 முதல் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி 22ம் திகதி உலக நீர் தினமாக கொண்டாடப்படுகிறது. அன்றிலிருந்து, உலக நீர் தினம் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு கருப்பொருள்கள் மூலம் ஒரு சர்வதேச தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு உலக நீர் தினத்தின் கருப்பொருள் ”சமாதானத்திற்காக நீர்” என்பதாகும்.

விவசாயத்தை பிரதான வாழ்வாதாரமாக கொண்டுள்ள இலங்கை மக்களின் வாழ்க்கை, பௌத்த நற்பண்புகளின் உத்வேகத்தாலும் பல்வேறு நீர் ஆதாரங்களாலும் தொடர்ந்தும் வளப்படுத்தப்படுகிறது. நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்படாத வகையில், நீர் ஆதாரங்களை மையமாக வைத்து குடியேற்றங்களை அமைத்து, நீர் வளத்தை பகிர்ந்து கூட்டுறவு முறையில் வாழ பழகினர். இவ்வாறானவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக, விவசாயத்தை மேம்படுத்துவதற்காக நீர்ப்பாசன அமைச்சு பல பாரிய நீர்பாசன திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் நிலையில் உலக நீர் தினமானது மிகவும் முக்கியமானதாகும் ஆனால் அது ஒரு நாளுக்கு மட்டுப்படுத்தப்படாமல், ஆண்டு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாக இருக்க வேண்டும்.

தற்போது, இலங்கையில் பல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் நீரை கையாள்கின்றன. அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு பொதுவான இலக்கை நோக்கிச் செயல்பட வேண்டும். இந்த ஆண்டு உலக நீர் தினக் கொண்டாட்டம் நீர்ப் பிரச்சனைகள் மட்டுமின்றி அனைத்து விதமான பிரச்சனையான சூழ்நிலைகளையும் ஒரு கொள்கை கட்டமைப்பிற்குள் நல்ல நிர்வாகத்தின் மூலம் மோதல் சூழ்நிலைகள் ஏற்படாதவாறு தீர்க்க ஒரு ஆரம்பமாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பவித்ரா வன்னியாராச்சி**
**கௌரவ நீர்ப்பாசன அமைச்சர்,**
**நீர்ப்பாசன அமைச்சு**

## கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி



”வானிலிருந்து விழும் ஒரு துளி நீரும் வீணாகக் கூடாது” என்ற தொலைநோக்குப் பார்வையுடனான உலகின் சிறந்த நீர்ப்பாசனப் பாரம்பரியம் இலங்கையில் நிறுவப்பட்டது. அதன்படி, நீரின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட திட்டம் நாட்டை தன்னிறைவு அடையச் செய்தது. ஆனால் தற்போதுள்ள வாழ்க்கை முறை வேகமாக மாறிவிட்டது. தொழில்துறைப் புரட்சி மற்றும் உலகமயமாக்கலை எதிர்கொண்டு, விவசாயத்திற்கு மட்டுமின்றி, நீர் நுகர்வு மற்றும் சுத்தமான குடிநீருக்கும், கூடுதலான செலவையும் முயற்சியையும் செய்ய வேண்டியுள்ளது. எனவே, நீர் முகாமைத்துவத்தை விவசாயத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், மனிதனின் அடிப்படை உரிமையாகவும் மேலும் நீர் ஆதாரங்களையும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளையும் மனித நீர் நுகர்வுக்காக பாதுகாக்க வேண்டும். உலகளாவிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது சனத்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்த முடியாத இயற்கை நிகழ்வாக மாறியுள்ளது.

இப்படிப்பட்ட சூழலில் விவசாயத்துக்குத் தேவையான நீரை வழங்க நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முயற்சி வெகுவாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இடையூறு விளைவிக்காமல் அடிப்படைக் கட்டமைப்பிற்கு வசதியாக நீர்ப்பாசன நீர் முகாமைத்துவத்தை சிறந்த முறையில் பேணுவதற்கு நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அர்ப்பணிப்பை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

**ஷஷீந்திர ராஜபக்ஷ**
**கௌரவ இராஜாங்க அமைச்சர்**
**நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல் அமைச்சு**

## செயலாளரின் செய்தி



மார்ச் 22ஆம் திகதி உலக நீர் தினத்தை முன்னிட்டு, ஒவ்வொரு ஆண்டும் உலக நீர் தினத்தை கொண்டாடும் நீர்ப்பாசனத் துறையைப் பாராட்டுகிறேன். இலங்கையின் நீர் வளங்களைப் பாதுகாப்பதில் முன்னோடியாகத் திகழும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முயற்சியில் இலங்கை மக்களுக்கு நீரின் பெறுமதியை உணர்த்தும் முயற்சியில் ஒரு செய்தியை வெளியிட முடிந்ததில் மகிழ்ச்சி.

மனிதர்கள் மற்றும் விலங்குகள் உட்பட ஒட்டுமொத்த இயற்கை சூழலின் உயிர்வாழ்விற்கான நீரை பாதுகாக்க வேண்டிய அவசிய தேவையின் மீது முழு உலகத்தின் கவனமும் உள்ளது. இந்த ஆண்டு உலக நீர் தினம் “அமைதிக்காக நீர்” என்ற தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது, மேலும் மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் இந்த வளத்தை ஒற்றுமையுடன் பயன்படுத்த வேண்டும் என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22 அன்று, இந்த விலைமதிப்பற்ற வளத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உலகம் நினைவு கூருகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கை, குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு நீர் வழங்குவதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. மனிதனின் முறையற்ற செயற்பாடுகளால் நீர் மாசுபாடு அதிகரித்துள்ளதோடு, அரசு நிறுவனங்களாகிய நாம் முன்னெப்போதையும் விட இதில் அதிக கவனம் செலுத்தி நீர் ஆதாரங்களை பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும்.

காலநிலை தாக்கங்களினால் ஏற்படும் பல்வேறு மாற்றங்களினால் இயல்பு வாழ்க்கை பல சவால்களை எதிர்நோக்கும் இவ்வாறான வேளையில், நீர்ப்பாசன அமைச்சு நீர் நெருக்கடிகளுக்கு நிலையான தீர்வுகளை காண நீர் வளங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்க்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை குளங்கள் கிராமங்களின் மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கின்றன.

**சமன் தர்ஷன பண்டிகோரள**
**செயலாளர்**
**நீர்ப்பாசன அமைச்சு**

## நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



2024 உலக நீர் தினத்தை நாம் கொண்டாடும் போது, இந்த விலைமதிப்பற்ற வளத்தை தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினருக்காக பாதுகாக்க நாம் உறுதியளிக்க வேண்டும். நீர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது மட்டுமல்ல, நிலையான வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார செழுமை ஆகியவற்றிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இன்றைய இலங்கையில், முக்கியமாக காலநிலை மாற்றம், அதிகரித்து வரும் சனத்தொகை மற்றும் தொழில்துறை வளர்ச்சி காரணமாக நீரத் தேவை அதிகரித்து வருகின்றது. கடந்த காலங்களில், பல நீர்த்தேக்கங்கள் முக்கியமாக நீர்ப்பாசன நோக்கங்களுக்காக மாத்திரமே கட்டப்பட்டன, ஆனால் சில தசாப்தங்களாக புதிய நீர்த்தேக்கங்கள் குடிநீர், நீர் மின்சாரம் மற்றும் கைத்தொழில், பிற தேசிய நீர்த் தேவைகள் உட்பட பல நோக்கங்களுக்காக கட்டப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசனத் திணைக்களம் நீர் பாதுகாப்பு மற்றும் நீர் முகாமைத்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றது மேலும் நீர் பற்றாக்குறை, நீர் மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய சவால்களை எதிர்கொள்ள அனைத்து பிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுகிறோம். எல்லா நேரங்களிலும் நீர் கிடைப்பதை உறுதி செய்வது நீர் தொடர்பான பங்குதாரர்களின் தேசிய நலனாக உள்ளது.

உலக நீர் தினத்தில், நம் வாழ்வில் நீரின் முக்கியத்துவத்தை நான் தெளிவுபடுத்துகிறேன்.

**எந்திரி அஜித் குணசேகர**
**பணிப்பாளர் நாயகம்**
**நீர்ப்பாசன திணைக்களம்**

## நீர்ப்பாசனத் திணைக்களம்

அனுசரணையாளர்கள்

CResMPA Climate Resilience Multi Programmatic Approach

IWWRMP




# மூலம் "முன்னோடி நீர் முகாமைத்துவத் தீர்வு"

உலகம் இருக்கும் வரை நீர் எமக்கு அத்தியாவசியமானதாகும். விலங்குகளுக்கு நீர் இன்றி வாழ முடியாது. அதனாலேயே அன்று தொடக்கம் இன்று வரை நீருக்காக மனிதர்கள் இடையில் ஏற்பட்ட மோதல்கள் எண்ணிலடங்காதவை. 2600 ஆண்டுகளுக்கு முன் புத்த பெருமானின் காலத்தில் நதி ஒன்றில் இருந்து நீரை பகிர்வதற்கு போர் ஒன்று ஏற்பட்டதாக வராலற்றில் கூறப்பட்டுள்ளது. இன்றும் கூட உலகில் பல பகுதிகளில் நீருக்காக மோதல்கள் ஏற்படுகின்றன.

மனிதப் பயன்பாட்டுக்குப் பொருத்தமான நீர் மூலங்களில் இருக்கின்ற பற்றாக்குறை இந்த மோதல் ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது. நீர் மூலங்கள் அசுத்தமாதல் மற்றும் வனங்கள் குறைதல் பிரதான காரணிகளாகும். அதனால் இந்த ஆண்டின் உலக நீர் தினத்தின் தொனிப்பொருள் "அமைதிக்கான நீர்" என்று அமைந்துள்ளது.

உலகில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்களும் சமமாக நீரை பயன்படுத்துவதற்கு உள்ள உரிமையை உறுதி செய்யும் பொருட்டு இந்தத் தொனிப்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மார்ச் மாதம் 23ஆம் திகதி நீர் தினத்தை கொண்டாடுவது நீரை பாதுகாக்கு முக்கியத்துவம் தொடர்பில் உலக மக்களை அறிவூட்டுவதற்காகவாகும்.

இலங்கையிலும் ஆண்டின் அதிக காலம் நீர் இல்லாத பகுதிகள் இருப்பதனால் நீர் சமமாக பகிரப்படுவது அவசியமாக உள்ளது. இதற்காக நீரை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்டுவதோடு அதற்காக உதவுகின்ற நிறுவனம் ஒன்றாக Central Industries PLCஇனை அடையாள காண முடியும். இதனால் தேசிய அளவில் நீரை பாதுகாக்க வேண்டியது எவ்வாறு என்பது பற்றி இந்நாட்டு மக்களுக்கு அறிவூட்டி தமது கடமை மற்றும் பொறுப்பை நிறைவேற்றி இலங்கையின் மிகவும் சுகாதாரமான நீர்க் குழாய் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் விருது வென்ற uPVC வர்த்தக நாமமான National PVC நிறுவனம் முன்னிலையில் உள்ளது.

National PVC குழாய் மற்றும் உபகரணங்கள், Krypton மின் ஸ்விட்ச், உபகரணங்களை உற்பத்தி செய்வதில் பிரபலம் பெற்ற சென்ட்ரல் இன்டஸ்ட்ரீஸ் பிஎல்சி உலக நீர் தினத்தை கொண்டாடுவதற்கு இணைவது கௌரவத்துடனாகும். இலங்கையில் முதன்மையான நிதி நிறுவனம் ஒன்றான சென்ட்ரல் பினான்ஸ் குழுமத்தின் அங்கத்தவராக 1984 இல் ஆரம்பிக்கப்பட்ட சென்ட்ரல் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள புகழ்பெற்ற நிறுவனமாகும்.

இன்றைக்கு இடம்பெறும் உலக நீர் தினத்தை கொண்டாடும் வகையில் நெஷனல் பீ.வி.சி. நிறுவனத்தினால் நீரை பாதுகாக்கும் முக்கியத்துவம் மற்றும் அதற்காக பயன்படுத்த வேண்டிய முறையான நடைமுறைகள் மற்றும் நீடித்து உழைக்கக் கூடிய உபகரணங்கள் தொடர்பில் தமது வாடிக்கையாளர்களை அறிவூட்டி எதிர்கால சந்ததிக்காக இன்றைய தினத்தில் நீரை பாதுகாப்பதற்கு உள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகிறது.

இந்த தினத்தை கொண்டாடுவதற்காக Central Industries PLC இன் பணிப்பாளர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, பொறியியலாளர் மயுர ரூபதுங்க அவர்கள் எம்மிடம் இவ்வாறு கருத்துக் கூறினார்.

"உண்மையிலேயே, நீர்க் குழாய் துறையில் நீர் குழாய் உபகரணங்கள் தொடர்பில் அடிப்படை தரங்களை ஏற்படுத்திய நிறுவனமாக எமது நிறுவனம் உள்ளது. அதற்கு முன்னர் அவை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும் நடைமுறையில் அந்தத் தரங்கள் இல்லாதிருந்ததால் நாம் அந்த அடிப்படை தரங்களை முறையான வகையில் எமது உபகரணங்களுக்கு பயன்படுத்தினோம். இறுதி பயனாளர் வரை நீர் குழாய் வழியாக பயணிக்கும் தரமான நீரை பெற்றுக் கொடுப்பது எமது இலக்காகும்.

தற்போது புதிய போக்காக HDPE உபகரணங்களை பயன்படுத்தி உள்ளது. எமது பிரதான நீர் வசதிகளின் வழங்குனரான வடிகாலமைப்பு சபை தமது வாடிக்கையாளர்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதற்காக மேற்கொள்கின்ற பணிகளுக்கு முக்கிய பங்களிப்பை நெஷனல் பீ.வி.சி. மூலம் வழங்கப்படுகிறது. 2019 இல் அரசாங்கத்தினால் "அனைவருக்கும் நீர்" என கொண்டுவரப்பட்ட சிந்தனைக்கு அமைய பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுக்கும் பங்களிப்புச் செய்தோம்.

இந்தத் திட்டத்திற்கு அமைய நீர் மூலங்கள் தொடக்கம் வடிகாலமைப்பு சபையின் நீர் தொட்டி வரை எடுத்துச் செல்லப்படும் நீர் அது தொடக்கம் வீடு வரை விநியோகிக்கும் கட்டமைப்பை தயாரிப்பது தான் இந்தத் திட்டத்தில் எமது பணியாகும். எமது ஒத்துழைப்பு சேவைகளாக வேறு திட்டங்கள் உள்ளன. அவைகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்படும். அதில் ஒன்று பாரிய திட்டங்கள், இதன் கீழ் வடிகாலமைப்பு சபை மற்றும் நிதியங்களுடனான திட்டங்களுக்காகவும் சேவை வழங்குகிறோம். உமா ஓயா திட்டமும் இதன் கீழ் வருகின்ற திட்டம் ஒன்றாகும்.

எமது அனைத்து உற்பத்திகளும் உயர் தரத்திலான உற்பத்தி உபகரணங்களாக இருப்பதால் இலங்கையில் முதல் முறையாக SLS சான்றிதழ் பெற்ற நிறுவனமாக எமது நிறுவனம் உள்ளது. அதன்படி National PVC 1987 இல் PVC குழாய் மற்றும் உபகரணங்களுக்காக முறையே SLS 147 மற்றும் PVC உபகரணங்களுக்கு SLS 659 தரமும் HDPE குழாய் மற்றும் உபகரணங்கள் உட்பட நீர் முகாமைத்துவ உற்பத்திகளுக்காக SLS மற்றும் WRAS UK போன்ற சர்வேதச தரச் சான்றிதழையும் பெற்று அதனை மேலும் உறுதி செய்துள்ளது.

ISO சான்றிதழை பெற்ற Central Industries PLC என்பது முழுமையாக இலங்கை நிறுவனம் ஒன்றாக அறிமுகப்படுத்த முடியும். Central Industries PLC இன் நோக்காக "நிர்மாண தொழில்துறையில் மிகவும் விருப்புக்குரிய வழங்குனராக" இருப்பதாகும். எமது நிறுவனம் பிரதானமாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது அரசு மற்றும் தனியார் தொழில் ஒப்பந்த நிர்மாண சந்தையுடனாகும். சந்தைக்கு நீர் முகாமைத்துவ தயாரிப்புகளின் வழங்குநராக எமது பெறுமதி மிக்க சேவையை வழங்கி வடிக்கையாளர் ஒருவருக்கு சுகாதாரமான குடிநீரை வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. இந்த செயற்பாடு சுற்றுச்சூழலுக்கு சாதகமான மற்றும் பேண்தகு முறையில் மேற்கொள்வது எமது பிரதான நோக்கமாகும்.

எமது நிறுனத்தில் உற்பத்தியாகின்ற PVC குழாய் மற்றும் உபகரணங்கள், நீர் தொட்டி, தோட்ட நீர் குழாய், கேபிள் ட்ரன்கின், HDPE குழாய் மற்றும் உபகரணங்கள், KRYPTON மின் ஸ்விட்ச், மற்றும் உபகரண்ஙகள் மற்றும் ஏனைய உற்பத்திகளை நாடு முழுவதும் விநியோகிக்கிறோம். National PVC நிறுவனத்தின் பிரதான கிளை நாவலையில் அமைந்திருந்தாலும் கெரவலப்பிட்டி மற்றும் யக்கல ஆகிய பகுதிகளில் உற்பத்தித் தொழிற்சாலைகள் நடத்தப்படுகின்றன.

அதன்படி நாம் நீர் பாதுகாப்பை ஏற்படுத்தும் தேசிய பணிக்காக உற்பத்தி கொள்ளளவில் அரசுக்கு மற்றும் சர்வதேச அளவில் பங்களிப்பை வழங்க எப்போது தயாராக உள்ளோம்.

நீர் குழாய்களை சந்தையில் வாங்கும்போது National PVC இனை தேர்வு செய்வதற்கான தேவையாக, அவற்றில் உள்ள சுகாதார அம்சம், சுற்றுச்சூழலுக்கு சாதகமான நிலை, நீடித்த தன்மை, கசிவின்றி எந்த ஒரு சூழலிலும் பயன்படுத்துவதற்கு முடியுமான விசேடமான பண்புகளைக் கொண்டுள்ளது என்பதை காரணமாக குறிப்பிடலாம்.

சென்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி உடன் இணைந்த Central Industries நிறுவனம், கடந்த கால கொவிட் பெருந்தொற்று நிலை மற்றும் தற்போது நீடிக்கும் உலகளாவிய பொருளாதார மாற்றங்களுக்கு முன் தமது பொறுப்பை முறையான வகையில் நிறைவேற்றி தமது பணியை மேற்கொள்கிறது. Central Industries PLC இன் வருடா வருடம் கிடைக்கும் வெற்றிக்கு காரணமாக இருப்பது சிறந்த நிர்வாகம் மற்றும் அனைத்து தரத்திலும் உள்ள ஊழியர்களின் ஆர்வம், அர்ப்பணிப்பு, அறிவுபூர்வமான செயற்பாடுகள் என்பது இரகசியமல்ல."


**பொறியியலாளர் மயுர ரூபதுங்க**
Central Industries PLC இன் பணிப்பாளர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி

**ஆக்கம் - அயன்தி உடுகம்பல**




எதிர்கால சந்ததியினருக்கு தண்ணீரை சேமிக்க வேண்டும்

உலக நீர் தினம்
22 மார்ச் 2024

National PVC PIPES & FITTINGS
The First Choice for Quality and Reliability

National PE PIPES & FITTINGS
Extreme Quality and Performance

Central Industries PLC
No.312, Nawala Road, Nawala, Rajagiriya, Sri Lanka.
Tel : 011 7421421, 011 7421480
Fax: 011 7421431
Email: info@nationalpvc.com
Website: www.nationalpvc.com

SLS 147 PVC PIPES | SLS 659 PVC FITTINGS | SLS 935 SOLVENT CEMENT | SLS 1498 PE PIPES | SLS 1499 PE FITTINGS

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

WRAS WATER REGULATIONS APPROVAL SCHEME

Rs.47/- onwards




# சுரங்கக் கால்வாய் வழியாக உலர் வலயங்களுக்கு நீர் வசதி

எமது நாட்டில் நிர்ப்பாசனத் துறை அரசர்கள் இருந்த காலம் தொடக்கம் மிகவும் சுபீட்சமானதாக இருந்து வந்தது. குளங்கள் கட்டும் இராசதானிகள் என்று பெயரிடப்பட்ட நகரங்கள் கூட இருந்தன. இந்த நாட்டில் அந்தக் காலத்தில் கட்டப்பட்ட குளங்கள், அணைகள், கால்வாய் வழிகள் வெளிநட்டினர்களை கூட வியப்பில் ஆழ்த்துவதாக இருந்தது. பருவத்திற்கு மழை பெய்யும் அழகான நாடான எமது நாடு தற்போது காலநிலை மாற்றத்திற்கு முகம்கொடுத்து அக்காலத்தில் இருந்த செழிப்பான காலநிலை மறைந்து வருகிறது. காலம் தப்பி மழை பொழிவதோடு மற்றொரு காலத்தில் கடும் சூரிய வெப்பத்துக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. சூரிய வெப்பம் அதிகமாக உள்ள காலங்களில் நீர் மூலங்களில் நீர் குறைவது மற்றும் மக்களின் நீரப் பயன்பாடு அதிகரிப்பதன் காரணமாக நீரப் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இதனால் முறையான நிர் முகாமைத்துவம் ஒன்று அன்றை விடவும் இன்றைக்கு எமது நாட்டுக்கு தேவையாக உள்ளது. அந்தத் தேவையை பூர்த்தி செய்து இலங்கை நீர்ப்பாசன திணைக்களம் தமது பொறுப்புகளை நிறைவேற்றி முக்கியமான பங்களிப்பை நாடு மற்றும் நாட்டு மக்களுக்காக மேற்கொள்கிறது. நீர் தினத்தை ஒட்டி நீர்ப்பாசனத் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் (விசாரணை, திட்டமிடல் மற்றும் வடிவமைப்புகள்) கலாநிதி கித்சிறி வெலிகேபொலகே அவர்களுடனான நேர்காணல் வருமாறு,


கலாநிதி கித்சிறி வெலிகேபொலகே நீர்ப்பாசனத் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம்

### • உலக நீர் தினத்திற்காக உங்களது திணைக்களம் மேற்கொள்கின்ற விசேட பணிகள் பற்றி கூறுவதென்றால்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22ஆம் திகதி நாம் உலக நீர் தினத்தை கொண்டாடுகிறோம். இம்முறை நீர் மற்றும் அது சார்ந்த நிறுவனங்களை தொடர்புபடுத்தி நிறுவன வளவில் நீர் தின கொண்டாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. அன்றைய தினம் காலையில் நடைபெறுகின்ற நீர் தின கொண்டாட்டத்திற்காக நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் செயலாளர் உட்பட நீர் சம்பந்தமாக எம்முடன் செயற்படும் வேறு நிறுவனங்களின் தலைவர்கள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு ஆரம்ப கூட்ட நிகழ்வு ஒன்று நடத்தப்படுகிறது. நாம் விரிவுரை ஒன்றுக்காக சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுப்பதோடு

நிறுவனத் தலைவர்கள் மூலம் மற்றும் அமைச்சர்கள் மூலம் நடத்தப்படுகின்ற சிறு உரைகள் சிலவும் இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் இடம்பெறவுள்ளன.

அதன் பின் தொழில்நுட்ப கூட்டம் ஒன்றும் நடைபெறும். இதில் எமது நிறுவனத்தின் அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும். அவர்கள் எழுதிய கட்டுரைகளை சேர்த்து நாம் e-magazine ஒன்றாக வெளியிடுவோம். தாம் செய்கின்ற பணிகளை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வகைசெய்தல் மற்றும் அறிவை பரிமாறிக்கொள்வது இதன் நோக்கமாக குறிப்பிட முடியும். இம்முறை நீர் தினத்தின் தொனிப்பொருளான “அமைதிக்கான நீர்” (Water for Peace) என்பதுடன் தொடர்புபட்ட பணிகளுக்காக இங்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் இருக்கின்ற நீர்ப்பாசன திணைக்களத்தின் அனைத்து அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளிலும் நீர் தின நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவர்கள் பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களுக்கு நீரை பாதுகாப்பது தொடர்பில் விரிவுரைகள் நடத்துகின்றனர். மாணவர்கள் இடையே நீரைப் பாதுகாப்பது என்ற தொனிப்பொருளில் சித்திர போட்டிகள் நடத்தப்படுகின்றன. நீரை பாதுகாப்பது தொடர்பிலான விடயங்கள் உள்ளடங்கிய சுவரெட்டி, பதாகை மூலம் மக்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

### • நீர்ப்பான திணைக்களத்தில் உங்களது பணிகள் எவ்வாறானவை?

நீர்ப்பாசன திணைக்களம் நான்கு பிரிவுகளாக பிரித்து சேவைகளை மேற்கொள்கிறது. ஏனென்றால் எமது திணைக்களத்திற்கு மிக அதிக பணிகள் உள்ளன. நான் இருக்கின்ற பிரிவு விசாரணை, திட்டமிடல் மற்றும் வடிவமைப்புகள் (Investigation, Planning and Designs). இந்தப் பிரிவின் கீழ் தான் புதிய திட்டமிடல்கள், அவை சார்ந்த சாத்தியத்தை ஆய்வு செய்தல், அந்த செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன் குறித்த நிலத்தை ஆய்வு செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் 10 கிளைகள் வரை உள்ளன. செயற்திட்டம் ஒன்றை திட்டமிட்ட பின் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தியின் (Construction & Development) கீழ் நிறுவப்பட்டிருக்கும் பிரிவு மூலம் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. அதனை நிர்மாணிக்கும்போது வருகின்ற ஏதேனும் பிரச்சினையில் நாம் அதற்காக தலையிட்டு அவற்றைத் தீர்த்து இவ்வாறான பணியை மேற்கொள்கிறோம். அதேபோன்று இந்தப் பணியின் தரத்தை பார்க்கும் வேலைகளையும் மேற்கொள்வது எமது பிரிவாகும்.

ஏதேனும் செயற்திட்டம் ஒன்றை கட்டியெழுப்பிய பின் முகாமைத்துவம் செய்யும் பணிக்காக முறைமை முகாமைத்து பிரிவு (system management) அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தான் நீரை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்துவது எவ்வாறு, எந்தக் காலத்தில் பணிகளை மேற்கொள்வது, வருடத்தின் ஒவ்வொரு காலத்திலும் நீரை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை தயாரிப்பதை செயற்படுத்துவதும் அந்தப் பிரிவு மேற்கொள்கிறது. அதேபோன்று நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதும் அந்தப் பிரிவினால் பிராந்திய அலுவலகம் மூலம் அவர்கள் செய்கின்றனர்.

அது தவிர நான்காவது பிரிவாக ஆற்று முகாமைத்து பிரிவை குறிப்பிட முடியும். இந்தப் பிரிவு நீர் மூலங்களை பாதுகாத்தல், ஆறு சார்ந்து இருக்கின்ற கரை உடைப்பெடுத்தல், ஆறுகளில் மணல் தோண்டல் போன்ற சிக்கல்களை தீர்ப்பதற்கான ஒழுங்குபடுத்தல் பணிகளை மேற்கொள்கிறது. இந்த நான்கு பிரிவுகளும் தான் அடிப்படையான தொழில்நுட்ப பிரிவுகளாக நீர்ப்பாசன திணைக்களத்தினால் நிறுவப்பட்டுள்ளது. இது தவிர நிர்வாகப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு செயற்படுகின்றன.

### • திட்டத்தை செயற்படுத்தும்போது எந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன?

நீண்ட கால திட்டம் மற்றும் குறுகிய கால திட்டம் என இந்தத் திட்டங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. 5 ஆண்டுகள் வரையான காலத்திற்கு ஒன்றை திட்டமிடுவதாக இருந்தால் அது குறுகிய கால திட்டம் என அடையாளப்படுத்தப்படுகிறது. நீண்ட கால திட்டமாக கருதப்படுவது 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் இருக்கும் திட்டங்களாகும். பெரும்பாலும் இந்தத் துறையில் எமக்கு கோரிக்கைகள் கிடைக்கின்றன. பிராந்திய அரசியல் நிர்வாகத்தினால், விவசாயிகள் போன்றவர்களின் கோரிக்கையின் பேரில் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினாலேயே நீண்ட திட்டங்களை செயற்படுத்துவதற்கான உத்தரவுகள் விடுக்கப்படும். இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் திட்டமிட்டு செயற்பாட்டுக்கு கொண்டுவரப்படாத திட்டங்களை புதுப்பிக்க வேண்டிய நிலையும் எமக்கு ஏற்படுகிறது.

அதுபோன்று இற்றைக்கு சில காலத்திற்கு முன் இருந்ததை விடவும் தற்போது இருக்கின்ற காலநிலை சூழல் மாறுபட்டது. மழை கிடைக்கின்ற காலம் கூட மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. சுற்றுச்சூழல் வெப்பம் மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. 1960-1970 போன்ற காலத்தில் இருந்ததை விடவும் மாறுபட்ட பிரச்சினைகளுக்கு நாம் முகம்கொடுக்க வேண்டி இருப்பதால் இந்த மாற்றமடைந்த சிக்கல்களுக்கு தீர்வு தேட வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் பல ஆண்டுகளுக்கு முன் திட்டமிடப்பட்ட திட்டங்கள் மீண்டும் புதுப்பிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நீர் திட்டங்கள் பலதும் எம்மிடம் உள்ளன. மொனராகலை குபுக்கன் ஓயா நீர் திட்டம், மட்டக்களப்பு பிரதேசத்தின முன்தெனியாறு நதிப் படுகை மேம்பாடு, கிழக்கு மாகாண பான்குளம், வட மாகாணத்தின் யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு நீர் வழங்கலுக்கு முன்மொழியப்பட்ட திட்டம் ஒன்று, தென் மாகாண கிங்-நில்வலா திட்டம் போன்ற நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் திட்டங்கள் மற்றும் திட்டமிடல்களை நாம் செயற்படுத்த வேண்டி உள்ளது.

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் தொழில் வலயம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதால் அதற்காக நீர் வழங்கும்படி எம்மிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் போதுமான அளவு நீர் இல்லாததால் எமக்கு அதற்காக வேறு இடங்களில் இருந்து நீரை பெற்று அதற்காக பயன்படுத்துவதற்கு வேண்டி உள்ளது. ஈர வலயங்களில் மழை அதிகரிப்பது காலநிலை மாறுவதால் ஆறுகள் பெருக்கெடுத்து, வெள்ளநிலைமை ஏற்படுகிறது. நாம் அதற்காக மழைக் காலத்தில் ஈர வலயத்தின் நீரை சேகரித்து அவற்றை உலர் வலயங்களுக்கு பயன்படுத்துவதற்கு செயற்படுகிறோம். ஈர வலயத்தில் குடி நீரை வழங்கும் சிக்கல் ஒன்று உள்ளது. இதனால் ஈர வலயத்திலானாலும் சிறு குளங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம்.

அத்தனகலு ஓயா மேல் பிரதேசங்களில் பஸ்னாகொட நீர்த்தேக்கமாக ஓரளவுக்கு பாரிய நீர்த்தேக்கம் ஒன்றின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஈர வலயத்தின் குளங்கள் போன்ற திட்டங்களுக்காக காணிகளை பெறுவதில் பெறும் பிரச்சினை ஒன்று உள்ளது. அவை பொருளாதார ரீதியில் அதிக பெறுமதி உள்ள மேம்படுத்தப்பட்ட காணிகளாக இருப்பது அதற்குக் காரணமாகும். ஆனால் ஆற்றுநீரில் மீது மாத்திரம் தங்கி இருக்க முடியாததால் இந்தத் திட்டங்களை மேற்கொள்வது அவசியமாகும். வெயில் காலத்தில் ஆறுகளில் கடல் நீர் கலப்பதால் குடிநீர் வழங்குவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஆறுகளில் சற்று உயரமாக இருக்க உப்பு தடுப்பு நிர்மாணிக்கப்படுகிறது. இந்த உப்புத் தடுப்பு நிர்மாணிக்கப்பட்டபோதும் அதனை சிறந்த ஆய்வு ஒன்றுக்குப் பின்னரே மேற்கொள்ள வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் மழைக் காலத்தில் உப்புத் தடுப்பு காரணமாகவே வெள்ளம் ஏற்படக் கூடும். பள்ளத்தாக்கு இடையிலான கால்வாய்கள் மூலம் ஒரு ஆற்றுப் படுகையில் இருந்து மற்றொரு ஆற்றுப்படுகைக்கு நீர் வழங்கல் மேற்கொள்ளப்படுகிறது.

### • கடந்த காலத்தில் கால்வாய் வழியாக நீர் சென்றபோதும் இன்று வளர்ச்சியடைந்த தொழில்நுட்பத்தின் கீழ் ஈர வலயத்தில் இருந்து உலர் வலயத்திற்கு நீரை எடுத்துச் செல்வது எவ்வாறு?

கடந்த காலத்தைப் போன்று இல்லை, தற்போது காணிகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் காணிகளை மிச்சப்படுத்தி இவ்வாறான திட்டங்களை செய்ய வேண்டி உள்ளது. தற்போது முன்னரை விடவும் உயர் தொழில்நுட்பம் ஒன்று உள்ளது. அதனால் நாம் சுரங்கப்பதை ஒன்றில் அமைக்கப்பட்ட கால்வாய் ஊடாக இந்த நீரை எடுத்துச் செல்லும் நடவடிக்கையை மேற்கொள்கிறோம். இங்கு முன்னரை விடவும் அதிக பொருளாதார பலம் ஒன்று இதற்கு தேவையாகிறது. நில்வள திட்டத்தின் 30 கிலோமீற்றர் சுரங்கப்பாதை ஒன்றை தயாரிக்க வேண்டி ஏற்படுகிறது. இது சற்றி சிக்கலான செயற்பாடு. இவ்வாறாக அண்மையில் பூர்த்தி செய்யப்பட்ட திட்டம் ஒன்றாக உமா ஓயா திட்டம் உள்ளது.

உமா ஓயாவில் இருந்து சுரங்கப்பாதை ஊடாக நீரை எடுத்துச் சென்று கிரிந்தி ஓயாவுக்கு கிடைக்கிறது.

நேர்காணல்:- அயந்தி உடுகம்பல

# இலங்கையின் கிராமப் புறம் முதல் நகர்ப்புறம் வரை பல்வேறு நீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அபிவிருத்தியின் பங்காளி JICA


ஆரம்ப விழாவில் JICA தலைவர்

### JICA உதவித் திட்டம் பற்றிய கண்ணோட்டம்

கடலால் சூழப்பட்ட ஜப்பான், மழை, சூறாவளி, பனிப்பொழிவு மற்றும் நாட்டின் நிலப்பரப்பில் சுமார் 70 சதவீதத்தை உள்ளடக்கிய காடுகளுடன் கூடிய புவியியல் நிலைமைகளின் அடிப்படையில், நீர் வளங்களின் பயன்பாட்டிற்கு சாதகமற்ற சூழ்நிலையில் உள்ளது. அத்துடன் பல செங்குத்தான மற்றும் குறுகிய ஆறுகள் பலவும் அங்குள்ளன.

இத்தகைய கடுமையான சூழ்நிலைகள் இருந்தபோதிலும், ஜப்பான் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அமைப்புகள் விரைவாக விரிவாக்கமடைந்துள்ளன. உலகின் அதிநவீன அறிவு மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஜப்பான் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக, 120 பில்லியன் யென் மற்றும் அதற்கும் அதிகமான மொத்தத் தொகையுடன், சமமான அழகான தீவு நாடான இலங்கைக்கு நீர்வள அபிவிருத்தித் துறையில் உதவும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. ODA (அதிகாரபூர்வ அபிவிருத்தி உதவி) கடன்கள், ODA மானியங்கள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பனவாக சுமார் 30 திட்டங்கள் மூலம், இலங்கையின் சனத்தொகையில் சுமார் 15 வீதமான 3.5 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு JICA பங்களிப்புச் செய்துள்ளது.

### நாட்பட்ட சிறுநீரகநோய் நிலவும் பகுதியில் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் ஆரம்பம்

இலங்கையில் அவசரகால நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான JICAவின் சமீபத்திய அபிவிருத்திகளில் ஒன்று, 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் 1ஆம் கட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்ததாகும்.

தொடக்க விழாவில், நாட்பட்ட சிறுநீரக நோய் (CKDu) அதிகளவில் நிலவும் பகுதிகளில் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். அனுராதபுரம் வடக்கில், மக்கள் அதிக புளோரைடு மற்றும் கடினத்தன்மை கொண்ட பாதுகாப்பற்ற நிலத்தடி நீரை நம்பியிருந்தனர், இதன் விளைவாக பல் மற்றும் எலும்பு புளோரோசினை உருவாக்குகின்றது. இது பாதுகாப்பற்ற நிலத்தடி நீரைக் குடிப்பதால் ஏற்படும் சீர்கேடுகளில் ஒன்றெனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த ODA கடன் திட்டம் 25,000 குடும்பங்கள் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீரைப் பெற உதவுகிறது. ஜப்பானிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்பார்வைக் கட்டுப்பாடுகளின் கீழ் இந்த மேம்பட்ட செயல்முறையானது பயனாளி சுவை மற்றும் வாசனை கலவைகள் நீக்கப்பட்ட சுத்தமான தண்ணீரை தொடர்ந்து பெற உதவுகிறது.

JICA இன் தலைவர் கலாநிதி தனகா அகிஹிகோ விழாவில் உரையாற்றுகையில், COVID-19 மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை வரலாற்றில் மிகவும் கடினமான நேரத்தில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்தகைய சவால்கள் இருந்தபோதிலும், இந்தத் திட்டத்தை நனவாக்க தங்கள் நேரத்தையும் நிபுணத்துவத்தையும் பங்களித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களை அர்ப்பணித்துள்ள சமூக உறுப்பினர்களுடன் இந்த வரலாற்றுத் தருணத்தைப் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நாடு தழுவிய கசிவு கட்டுப்பாட்டு பயிற்சி திட்டங்கள் JICAவால் தொடங்கப்பட்டு அறிவு மையத்தால் விரிவுபடுத்தப்பட்டது

1950களின் நடுப்பகுதியில் இருந்து ஜப்பானில் தண்ணீர் மற்றும் சுகாதாரத் துறையில் உள்ள தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகள்


தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பயிற்சி நிலையங்களைப் பார்வையிட்ட நேபாள நாட்டவர்கள்.


திறன் விருத்தி செயற்பாடுகளில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பயிற்சியாளர்கள்

பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்களுடன் மனித வளங்களை மேம்படுத்துவதற்கு பயிற்சி பெற்றுள்ளனர். இலங்கைக்குள் இந்தப் பயிற்சிகள் மூலம் பெறப்பட்ட திறன்கள் மற்றும் அறிவைப் பரப்புவதற்காக, NWSDB (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை) திறனை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டம், கசிவு கட்டுப்பாடு மற்றும் குழாய் பதிக்கும் பயிற்சித் திட்டங்களை 2018 ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்தது. தெலவாலவில் அதிநவீன உபகரணங்களுடன் கூடிய பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

கசிவு கட்டுப்பாடு என்பது இலங்கையின் முக்கியமான சவால்களில் ஒன்றாகும், குறிப்பாக நாட்பட்ட குழாய் வலையமைப்புகள் பாரிய நீர் இழப்பை ஏற்படுத்தும் நகர்ப்புறங்களில், இது NWSDBயின் வணிக செயல்திறனை பாதிக்கிறது. நிலத்தடி நீர்க் குழாய்கள் அமைப்பதில் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்துவதும் பிரச்சினைகள் இல்லாமல் நீர் விநியோக வலையமைப்புகளை விரிவுபடுத்துவதும் அவசியம். ஆரம்பத்தில் JICA உடன் தொடங்கப்பட்ட இந்த முயற்சிகள் NWSDB அறிவு நிலையச் செயற்பாடுகளால் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

2022 டிசம்பரில் மனித வள மேம்பாடு பற்றி அறிந்து கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தந்த நேபாள அதிகாரிகளுக்கும் தனியார் தொழில் நிறுவனங்களுக்கும் பயிற்சி வாய்ப்புகளை இந்த நிலையம் வழங்கியுள்ளது. மே 2023இல், மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) இந்த நிலையம் பிளம்பிங் பயிற்சிகளை நடத்துவதற்கு அங்கீகாரம் பெற்றது. மதிப்பீடுகள் மற்றும் பயிற்சி பங்கேற்பாளர்களுக்கு தேசிய தொழில் தகுதிகளை (NVQ) வழங்குதல். இந்த சர்வதேச அங்கீகாரம் பெற்ற தகுதி, அல்லது NVQ, பிளம்பர்களின் திறமையான திறன்களை நிரூபிக்கிறது மற்றும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளுக்கும் வழிவகுக்கும்.

### அக்வாமேக் - கழிப்பறைக் கசிவுகளைத் தடுக்கும் ஜப்பானிய நிறுவனத்தின் தொழில்நுட்பம்

இலங்கையின் அபிவிருத்திக்காக ஜப்பானிய தனியார் துறையின் தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் JICA இன் ஒரு முக்கிய முயற்சியாக பொது-தனியார் பங்காளித்துவம் உள்ளது. JICA இலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமொன்றில் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ”Aquamake” என்ற சுய-சிகிச்சை வகை உயிரியல் கழிப்பறை பற்றிய ஆய்வை ஆரம்பித்தது. இந்த தனித்துவமான தொழில்நுட்பமானது சிப்பி ஓடுகள் மற்றும் செயல்படுத்தப்பட்ட கார்பனை பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்ட நீரை மீண்டும் கழிப்பறை நீராக பயன்படுத்துகிறது, இது கழிப்பறையிலிருந்து வெளியேறும் கழிவுநீரை பூஜ்ஜியமாக்குகிறது. கோலி∴பார்ம் பாக்டீரியா இல்லாத நிறமற்ற மற்றும் மணமற்ற சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை இது உறுதி செய்கிறது. ∴ப்ளஷ் கழிவறைகளை நிறுவுவதற்கு தண்ணீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் கூட அக்வாமேக்கை நிறுவலாம்.

### ஜப்பான் மற்றும் இலங்கையில் உள்ள புகழ்பெற்ற உலக பாரம்பரிய தளங்களில் சுற்றுச்சூழலை பாதுகாக்க சிறந்த தீர்வு

கழிவுநீரை வெளியேற்ற பரிந்துரைக்கப்படாத பாரம்பரிய தளங்களிலும் இந்த சுற்றுச்சூழல் நட்பு கழிவறையை நிறுவ முடியும், ஆனால் பாதாள குழாய் வலையமைப்புடன் கூடிய கழிவுநீர் அமைப்பை உருவாக்க முடியாது. ஜப்பானிய நிறுவனங்களான Eiwa Land Environment Co. Ltd. Yasugi Co. Ltd. மற்றும் Oriental Consultants Global Co. Ltd ஆகியவற்றால் JICA இன் நிதியுதவியின் கீழ், பொலன்னறுவை உலக பாரம்பரிய தளத்தில் ”Aquamake” அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த தீர்வு வழங்கப்படுவதற்கு முன்பு, பாரம்பரிய தளம் வரையறுக்கப்பட்ட கழிவுநீர் உட்கட்டமைப்புக்கு சொந்தமானது. தற்போதுள்ள வசதிகள் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை வெளியேற்றி, பொலன்னறுவை கலாச்சார தளத்திற்குள் கண்டுபிடிக்கப்படாத மற்றும் நிலத்தடி இடிபாடுகளுக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த முக்கியமான பிரச்சினைக்கு தீர்வுகாணும் விதமாக, ஜப்பானிய நிறுவனங்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் JICA சரியான நேரத்தில் ஆதரவை வழங்கியது.

ஜப்பானில் உள்ள மிகவும் பிரபலமான உலக பாரம்பரிய தளங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு அக்வா மேக் பங்களித்துள்ளது. உதாரணமாக, மவுண்ட் புஜி மற்றும் குமனோ கோடோ யாத்திரை வழி ஆகியவை பார்வையாளர்களுக்கு சுத்தமான மற்றும் சுகாதாரமான ∴ப்ளஷ் கழிப்பறை வசதிகளை வழங்குகின்றன. இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளிலும் உள்ள உலக பாரம்பரிய தலங்களில் பயன்படுத்தப்படும் கழிவறைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை அடையாளப்படுத்துவதாக JICA கருதுகிறது, மேலும் இந்த ஜப்பானிய தொழில்நுட்பம் முக்கியமான பாரம்பரிய தலங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வசதியான சுற்றுலாவை மேலும் மேம்படுத்த உதவும் என்று JICA நம்புகிறது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான அபிவிருத்தி பங்காளித்துவம் ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்களாகின்றன. இலங்கையில் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கும் நீர்ச் சூழலை மேம்படுத்துவதற்கும் JICA பங்களித்து வருகின்றது, மேலும் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீட்சிக்கு அது தொடர்ந்தும் பங்களிக்கும். புதிய மதிப்புகளை உருவாக்க பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து பயணிக்கும்.







ஜப்பானிய உலக பாரம்பரிய இடங்களில் அக்குவா மேக் (மௌன்ட் புஜி, குமானோ கொடோ)

# நாட்டின் நீர் முகாமைத்துவத்திற்காக தோள்கொடுக்கும் நீர்ப்பாசன திணைக்களம்

நீர் என்பது உலகில் உள்ள பெறுமதி மிக்க இயற்கை வளங்களில் முதன்மையான வளமாகும். நீர் இல்லாவிட்டால் உயிரினங்களுக்கு தமது உயிரைக் கூட இழக்க வேண்டி ஏற்படும். உலகில் அதிக அளவான பகுதி நீரில் மூழ்கி இருந்தபோதும் பயன்பாட்டுக்கு பெறமுடியுமான நீர் இருப்பது குறைந்த அளவாகும். அதனால் உலகம் முழுவதும் நீருக்காக ஏற்படுகின்ற மோதல்கள் மற்றும் பிரச்சினைகள் இருக்கும் வளமான பகுதிகள், நீர் மூலங்கள் உள்ள பகுதிகளை பகிர்வதற்காக போர்களும் நடைபெற்றுள்ளன. இதனால் இம்முறை உலக நீர் தினம் “அமைதிக்கான நீர்” என்ற தொனிப்பொருளைக் கொண்டுள்ளது.

தற்போது எமது நாட்டில் பயன்படுத்த முடியுமான நீர் அளவு குறைந்து வருகிறது. அந்த நீரை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து நீருக்காக செயற்படுகின்ற நீர்ப்பாசன திணைக்களமும் நீர் தினத்தை கொண்டாடுகிறது. நீர் தினத்தையொட்டி நீர்ப்பாசன திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (முறைமை முகாமைத்துவம்) பொறியியலாளர் S.M.B. மொஹமட் அஸார் அவர்களுடனான நேர்காணல் பின்வருமாறு,



**பொறியியலாளர் S.M.B. மொஹமட் அஸார்**
**நீர்ப்பாசன திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (முறைமை முகாமைத்துவம்)**

### இலங்கை நீர் முகாமைத்துவம் தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களம் தொடர்புபடுவது எவ்வாறு?

1900ஆம் ஆண்டுக்கு முன்னர் அரச வேலை திணைக்களத்தின் கீழ் அளவை செயற்பாடு, நீர்ப்பாசன செயற்பாடு, வீதி அபிவிருத்தி மற்றும் கட்டிட நிர்மாணங்கள் போன்ற பொறியியல் பணிகளை செய்தது. 1900 மே 15 ஆம் திகதி நீர்ப்பாசன திணைக்களம் அரச வேலை திணைக்களத்தில் இருந்து வேறாக திருகோணமலையில் அமைக்கப்பட்டது. இதன் பின் 1932ஆம் ஆண்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமை அலுவலகம் கொழும்பு ஜாவத்த வளவில் அமைக்கப்பட்டு இன்றுவரை முன்னெடுக்கப்பட்டு வருகிறது...

பாரிய மற்றும் நடுத்தர அளவான நீர்த்தேக்கங்களில் நிர்வாக செயற்பாடுகள் நீர்ப்பாசன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறான மாகாணத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் நீரோட்டங்கள் இருக்கின்ற பகுதியில் உள்ள நடுத்தர அளவான குளங்கள், மாகாண சபையின் கீழ் கிராமிய குள விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. விரைவான மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட மகாவலி பிராந்தியங்களுக்கு சொந்தமான நீர்த்தேக்கங்களின் நிர்வாகச் செயற்பாடு மகாவலி அதிகாரசபையின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது.

நீர்ப்பாசன திணைக்களத்தில் 7000 வரையான அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழு ஒன்று உள்ளது. அதில் 383 பேர் பொறியியலாளர்களாவர். இந்தப் பணிக் குழு நாடு முழுவதும் பரந்த 14 நீர்ப்பாசன வலயங்களின் கீழ் உள்ளது. ஆனால் நாட்டில் நிலவும் நிலைக்கு அமைய 150 பொறியியலாளர்கள் வரையே தற்போது பணியாற்றுகின்றனர்.

இதன்படி இந்த 14 நீர்ப்பாசன வலயங்களுக்குள் 53 பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுகள், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர்களின் கீழ் நீர்ப்பாசன கட்டமைப்பு செயற்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர பல்வேறு வலயங்களுக்கு நீர்ப்பாசன திட்டமிடல் செயற்பாடுகள் மேற்கொள்வதற்காக 3 வலய திட்டமிடல் அலுவலகங்கள் ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டங்களுக்காகவும் 253 பிரிவு அலுவலகங்களும் இயந்திர பொறியியல் செயற்பாடுகளுக்கு 3 இயந்திர பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் 14 இயந்திய பொறியியல் அலுவலகங்களின் கீழ் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் நீர்ப்பாசன திட்டங்களின் கீழ் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவை பற்றி குறிப்பிடுவதென்றால், பாரிய நீர்த்தேக்கங்களின் கீழ் இருக்கின்ற பாரிய அளவான 80 திட்டங்கள், அணைகளின் கீழ் இருக்கின்ற பாரிய அளவான 28 திட்டங்கள், நடுத்தர அளவான நீர்த்தேக்கங்களின் கீழ் இருக்கின்ற 161 நடுத்தர அளவான திட்டங்கள், அணைகளின் கீழ் இருக்கின்ற நடுத்தர அளவாக 85 திட்டங்கள், 25 நீர் இறக்கும் திட்டங்கள், 25 உஸ்ஸான நீர்ப்பாச திட்டங்கள் என இந்த முழுமையான நீர்ப்பாசன திட்டங்களின் அளவு 387 ஆகும். இந்த நீர்ப்பாச திட்டங்களின் கீழ் 800,200 ஏக்கர் காணி அளவு பயிர்ச்செய்கைக்காக நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்படுகின்றன.

### நீர் முகாமைத்துவத்தில் நீர்ப்பாசன திணைக்களம் நாட்டின் பொருளாதாரத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பு என்ன?

முன்னர் குறிப்பிட்டவாறு 800,200 ஏக்கர் காணி நீர்ப்பாசன வழங்கல் மூலம் நீர்ப்பாசன திணைக்களத்தினால் நாட்டின் உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன்மூலம் வருடத்திற்கு 350 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட உணவு உற்பத்திகள் மேற்கொள்வதற்கு நீர்ப்பாசன நீர் வசதிகள் வழங்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்புக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு நீர்ப்பாசன நீர்த்தேக்கம் மற்றும் நீர்ப்பாசன நீரை பயன்படுத்துவதும் எமது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

இதனை மேலும் விரிவாகக் குறிப்பிடுவதென்றால், குடி நீர் மற்றும் தொழில்துறைக்கு தேவையான நீர் வழங்கல், நன்னீர் மீன்பிடி தொழில்துறைக்கு நீரை வழங்கல், சுற்றுலா மேம்பாட்டு செயற்பாட்டுக்கு, சுற்றுச்சூழல் சமநிலையை பேணுவதற்கு (நிலத்தடி நீர் மட்டத்தை கட்டுப்படுத்தல்), நீர் மின் உற்பத்திக்கு பங்களிப்பை வழங்குவது வரை பரந்ததாக உள்ளது. இது தவிர காலநிலை மாற்றத்தின் முன் நாட்டில் ஏற்படும் வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற அனர்த்த நிலைகளிலும் நீர் முகாமைத்துவத்தின் மூலம் நீர்த்தேக்கங்களில் சேமித்து வைத்திருக்கும் நீரில் உச்ச பயனை பெறுவதும் விசேட பங்களிப்பாகும்.

### இவ்வாறான பாரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய் கட்டமைப்பு ஒன்றை சிறந்த முறையில் நடத்திச் செல்வதற்கு நீர்ப்பாசன திணைக்களம் செயற்படும் முறையை தெளிவுபடுத்த முடியுமா?

விவசாயிகளுக்கு அவர்களின் பயிர் நிலங்களுக்கு தேவையான காலத்தில் போதுமான நீரை வழங்குவதற்கு இந்த முழுமையான நீர்ப்பாசன கட்டமைப்பு முறையான வகையில் பேணுவதையும் முறையான வகையில் கையாள்வதையும் மேற்கொள்ளல் வேண்டும். இதற்காக குளம் ஒன்றில் இருந்து நீரை வெளியிடும் சந்தர்ப்பம் தொடக்கம் பயிர் நிலத்திற்கு நீர் கிடைக்கும் வரை சிறந்த முகாமைத்துவத்துடன் செயற்பட்டு நீரை நிர்வகிப்பதற்கும், நீர்ப்பாசனத்தை செயற்படுத்துவதற்கும், அனுபவம், பயிற்சி பெற்ற பணிக் குழு ஒன்று நீர்ப்பாசன பொறியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகிறது.

அனைத்து போகங்களுக்கு முன்னரும் இந்த அனைத்து நீர்ப்பாசன அமைப்புகளும் முறையாக செயற்படுகிறதா எனச் சோதித்து, தேவையான பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதோடு கால்வாய் புனரமைத்தல், அணை மற்றும் அவற்றின் வாயில்கள் புனரமைத்து நடத்திச் செல்வதும் நீர்ப்பாசன பொறியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ் பயிற்சி பெற்ற பணிக்குழு ஒன்றினால் மேற்கொள்ளப்படுகிறது.

விசேட அவதானம் செலுத்தப்பட்டு நீர்த்தேக்கங்களில் வேலியை பலப்படுத்தி நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதோடு எப்போதும் பரீசோதித்து மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நீர்ப்பாசன திணைக்களத்தின் சிறப்பு பிரிவுகளில் பொறியியலாளர்களின் உதவியை பெற்று தேவையான பழுதுபார்த்தல்களை மேற்கொள்வதன் மூலம் நீர்த்தேக்க சுவர் உடைப்பெடுப்பதால் ஏற்படக்கூடிய பாரிய உடைமை மற்றும் உயிர்ச் சேதங்களை தவிர்க்கிறோம். அந்த நீர்த்தேக்கங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற விவசாய செயற்பாடுகளுக்கு தாக்கம் ஏற்படாத வகையில் நடத்திச் செல்வதற்கும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது.

அதேபோன்று நீர்ப்பாசன கட்டமைப்பு மூலம் நீரை வழங்குவது, பராமரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல், வேலை பாதுகாப்புக்கு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள், ஆய்வு அறிக்கை தொடர்பில் விபரங்களை முறையாக பேணுவதற்கு முறைகள் தயாரிக்கப்படுவதோடு, அதன் மூலம் எதிர்காலத்தில் நீர்ப்பாசன அபிருத்தி திட்டங்களை தயாரித்தல் மற்றும் நீர் முகாமைத்துவ திட்டங்களை மேற்கொள்ளும்போது முன்னுரிமை வழங்க வேண்டிய இடங்களை அடயாளம் காண்பதற்கு முடியுமாகிறது.

நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் பிரதான மற்றும் பாரிய அளவான நீர்த்தேக்கங்களின் பரா்ரிப்பு தவிர நீர்ப்பாசன பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் பிரதான கால்வாய், கிளை கால்வாய், பிரிப்பு கால்வாய், துறை கால்வாய், வழங்கல் கால்வாய் ஆகிய அனைத்தினதும் பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இந்த கால்வாய்கள் அனைத்தினதும் மொத்த அளவு 17,400 கிலோமீற்றர் ஆகும். அது பாரிய அளவாக உள்ளது. அதேபோன்று நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் 12,657 விவசாய பாதைகளின் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2024ஆம் ஆண்டின் உலக நீர் தின கொண்டாட்டத்துடன் நீர்ப்பாசன திணைக்களத்தின் பங்களிப்புகள் மற்றும் மக்களுக்கு வழங்கும் செய்தி என்ன?

இலங்கையில் பண்டைய காலம் தொடக்கம் நீர்த்தேக்கங்கள் உருவானது நெற்பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்டாகும். ஆனால் இன்றாகும்போது நீர்ப்பாசன நீர்த் தேக்கங்களில் இருந்து வழங்கும் நீர் வளத்தின் தேவைகள் மிகவும் சிக்கலான அளவுக்கு வந்துள்ளது. இன்றாகும்போது நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் நெற்பயிர்ச்செய்கைக்கு நீரை பெற்றுக்கொடுப்பது மாத்திரமன்றி, குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கு தேவையான நீரை வழங்கல், பல்வேறு தொழில்துறைக்கு தேவையான நீரை வழங்கல், நன்னீர் மீன்பிடி தொழில்துறைக்கு தேவையானவெசதிகளை வழங்கல், அபிவிருத்தி மேம்பாட்டு பணிகளுக்காக நீர்த்தேக்க பயன்பாடு, நீர் மின் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தேவைகளுக்காக நீர் வழங்கல் போன்ற துறைகள் ஊடாக நீர் வசதிகளை நிர்வகிக்க வேண்டி உள்ளது.

உண்மையிலேயே இந்த ஆண்டில் உலக நீர் தினத்தின் தொனிப்பொருள் அமைதிக்காக நீரை கையாளுதல் என்பதாகும். எனவே நீர்ப்பாசன திணைக்களத்தின் இன்றைய முதன்மையான பணியாக பல்வேறு தேவைகளுக்காக இருக்கின்ற நீர் வளத்தை சமூகத்தில் மோதல் ஏற்படாத வகையில் சிறந்த முகாமைத்துவத்துடன் மனிதன் மற்றும் சுற்றுச்சூழலின் நன்மைக்காக பெற்றுக்கொடுப்பதாகும். அதற்குத் தேவையான ஒத்துழைப்பை நீரை பயன்படுத்துகின்ற அனைத்து தரப்பினரிடம் இருந்தும் நீர்ப்பாசன திணைக்களம் எதிர்ப்பார்க்கிறது.

**ஆக்கம் அயன்தி உடுகம்பல**


**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**விலைக்கோரல் இல. 026/T/2024**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச வீமான நிலையத்தில் பாதுகாப்பு கெமரா (CCTV) முறைமை மேம்படுத்தலை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் ஒப்படைத்தலுக்கான வீலைமனு கோரல்**

**(BID INVITATION FOR THE SUPPLY, INSTALLATION, TESTING & COMMISSIONING OF CCTV SYSTEM UPGRADE AT BIA, KATUNAYAKE)**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்திற்கு பாதுகாப்பு கெமரா முறைமை மேம்படுத்தலை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் ஒப்படைப்பதற்காக அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத நாற்பத்தையாயிரம் ரூபா (45,000.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள் வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்கள் 2024-03-25ஆம் திகதி முதல் 2024-04-15ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

விலைமனுக்களை 2024 ஏப்ரல் 16ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவருக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் அதன்பின் கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்குக் கோபுரம், 30ஆம் தளம், துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் பெறுகைப் பிரிவில் உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்கு செலுத்தும் வகையில் கோரும் போது செலுத்தப்படும் நாற்பது இலட்சம் ரூபாவுக்கான (4,000,000.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-04-05ஆம் திகதி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், 4ஆம் மாடி, புதிய நிர்வாகக் கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் இடம்பெறும்.

ஏதேனும் மேலதிக விபரங்களை இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவின் 011-2264103 / 011-2264106 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**நிலை 30, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு-01, இலங்கை.**



softlogic Finance

**சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி மாபெரும் ஏலவிற்பனை**

**98 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்**
**2024 மார்ச் 25 திங்கட்கிழமை**
**இல. 463, கண்டி வீதி, களனி என்ற முகவரியில்**
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

கார்கள்:

| | | |
|---|---|---|
| CBD-5xxx | AUDI A1 | 2017 |
| CAP-9XXX | சுசுகி அல்டோ LXI 800 | 2016 |
| CAY-8XXX | டொயோட்டா DBA-NZT260 பிரிமியோ | 2016 |
| CAK-7XXX | சுசுகி DAA-MH44S வெகன் R | 2014 |
| CAG-9XXX | டொயோட்டா DAA-ZVW30-பிரியஸ் | 2013 |
| KW-9XXX | ஹொண்டா DAA-GP3 பிட் | 2012 |
| KT-3XXX | மாருதி அல்டோ-K10 | 2012 |
| KT-7XXX | மைக்ரோ பண்டா LC 1.3 | 2012 |
| KU-0XXX | மைக்ரோ டிரெண்ட் | 2012 |
| KR-8XXX | டாட்டா நனோ | 2011 |
| KQ-9XXX | டாட்டா நனோ | 2011 |
| KR-4XXX | டாட்டா நனோ | 2011 |
| KH-8XXX | நிஸான் CBA-VY11 | 2005 |
| KA-3XXX | டாட்டா இண்டிகோ மரினா | 2005 |
| JJ-3XXX | மாருதி அல்டோ LXI | 2004 |
| HW-8XXX | மாருதி 800 | 2004 |
| JS-8XXX | டொயோட்டா கேம்ரி | 2004 |
| GO-3XXX | நிஸான் சனி | 2002 |
| KB-6XXX | நிஸான் UA-K12 | 2002 |
| JQ-8XXX | ஹையுண்டாய் அசென்ட் | 2001 |
| HK-7XXX | நிஸான் புளு பேர்ட் | 1997 |
| 18-6XXX | பெஜோ 406 SR | 1993 |
| 17-2XXX | ஹொண்டா E-DA2 இன்டெக்ரா | 1987 |
| 15 SRI XXX | டொயோட்டா AE80 | 1985 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| PF-9XXX | டைஹட்சு EBD-S321V | 2011 |
| PE-5XXX | நிஸான் ADF-VWME25 | 2008 |
| PG-6XXX | சுசுகி EBD-DA64V எவ்ரி | 2008 |
| PC-1XXX | மஸ்டா KR-SKF2M | 2006 |
| NA-3XXX | நிஸான் கரவேன் TA-QGE25 | 2004 |
| PB-1XXX | ஹொண்டா அக்ரி | 2002 |
| JG-3XXX | ஹையுண்டாய் கிரேஸ் | 2000 |
| PA-3XXX | ஹையுண்டாய் கிரேஸ் H100M | 2000 |
| PB-0XXX | மஸ்டா | 1997 |
| 252-2XXX | மஸ்டா SSF8W | 1994 |
| 59-1XXX | நிஸான் | 1992 |
| 52-4XXX | நிஸான் | 1988 |
| 51-6XXX | இசுசு பார்கோ | 1985 |

டபிள் கெப்

| | | |
|---|---|---|
| PD-0XXX | டொயோட்டா ஹிலக்ஸ் | 2008 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| ABM-8XXX | TVS கிங் | 2016 |
| ABF-3XXX | பஜாஜ் RE 205 | 2015 |
| ABA-5XXX | பஜாஜ் RE | 2015 |
| AAP-1XXX | பஜாஜ் RE | 2014 |
| AAH-4XXX | பஜாஜ் RE 205 | 2013 |
| YZ-1XXX | பஜாஜ் RE 205 | 2012 |
| YM-1XXX | பஜாஜ் RE 205 | 2011 |
| YV-7XXX | TVS கிங் | 2011 |
| YN-0XXX | TVS கிங் | 2011 |
| YD-8XXX | பஜாஜ் AR4S-UG | 2010 |
| QZ-0XXX | பஜாஜ் AR4S-UG | 2010 |
| QT-2XXX | பஜாஜ் 4S | 2009 |
| QK-2XXX | பஜாஜ் ஒட்டோ AR 4S | 2007 |

ஜீப் வண்டிகள்:

| | | |
|---|---|---|
| KW-4XXX | BMW X3D | 2012 |
| KS-4XXX | கியா சொரென்டோ 4X4 | 2011 |
| KF-4XXX | கியா ஸ்போர்டேஜ் | 2007 |
| HV-8XXX | மிட்சுபிஷி பஜேரோ | 2000 |

லொறிகள் / டிப்பர்கள்

| | | |
|---|---|---|
| LP-0XXX | இசுசு TPG-NPS85AN | 2016 |
| DAF-2XXX | சுசுகி சுப்பர் கெரி | 2016 |
| DAE-1XXX | டாட்டா ஏஸ் எக்ஸ்பிரஸ் | 2016 |
| DAA-9XXX | மஹிந்த்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2015 |
| DAC-1XXX | டாட்டா சுப்பர் ஏஸ் | 2015 |
| DAB-5XXX | டாட்டா 207 RX பிக்கப் | 2015 |
| DAB-1XXX | மஹிந்த்ரா மெக்ஸிமோ பிளஸ்-VX | 2015 |
| PX-5XXX | போட்டோன் BJ1010V0JA3-2 | 2014 |
| PW-0XXX | மஹிந்த்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2013 |
| PV-2XXX | டாட்டா ஏஸ் EX | 2013 |
| PV-9XXX | டாட்டா சுப்பர் ஏஸ் | 2013 |
| PU-0XXX | டாட்டா ஏஸ் EX | 2012 |
| PR-7XXX | டாட்டா சுப்பர் ஏஸ் | 2011 |
| PT-4XXX | டாட்டா சுப்பர் ஏஸ் | 2011 |
| LI-0XXX | லேலண்ட் டிப்பர் | 2011 |
| LJ-0XXX | லேலண்ட் டிப்பர் | 2011 |
| LH-0XXX | டாட்டா 207DI | 2010 |
| LH-6XXX | டாட்டா LPK 1615 | 2010 |
| LH-8XXX | லங்கா அசோக் லேலண்ட் கொமெட் டிப்பர் 1613 | 2010 |
| DAE-7XXX | மஹிந்த்ரா பொலேரோ மெக்ஸி டிரக் | 2016 |
| LC-7XXX | டாட்டா ஏஸ் | 2006 |
| LB-9XXX | டாட்டா SK1613 | 2006 |
| 226-6XXX | மஸ்டா-WGLAT | 1993 |
| 226-2XXX | இசுசு எல்ப் | 1992 |

பிரைம் மூவர் / டெயிலர்கள்:

| | | |
|---|---|---|
| LX-4XXX | தத்ரி TF840 பிளட்போர்ம் | 2021 |
| LY-2XXX | டப் FTGXF 105 | 2016 |

பஸ் வண்டி:

| | | |
|---|---|---|
| NB-0XXX | லங்கா அசோக் லேலண்ட் வைக்கிங் | 2011 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BIU-9XXX | ஹாஜூ GN 125 H | 2020 |
| BIF-8XXX | ஹீரோ டிலக்ஸ் | 2019 |
| BIX-5XXX | ஹீரோ டெஸ்டினி | 2019 |
| BIF-5XXX | ஹீரோ மேஸ்ட்ரோ எட்ஜ் | 2019 |
| BHR-5XXX | பஜாஜ் பல்சர் 200 NS | 2019 |
| BHP-3XXX | TVS என்டோர்க் | 2019 |
| BIH-5XXX | TVS அபாச்சி | 2019 |
| BIS-1XXX | யமஹா FZ S V-3 | 2019 |
| BHV 1XXX | ஹீரோ H F டிலக்ஸ் | 2018 |
| BHV-0XXX | பஜாஜ் பல்சர் 150 DTSI நியன் | 2018 |
| BHF-5XXX | சுசுகி அக்சஸ்-125 | 2018 |
| BHG-7XXX | TVS வேகோ | 2018 |
| BHZ-7XXX | யமஹா ரே-ZR | 2018 |
| BHX-3XXX | யமஹா R15 | 2018 |
| BHG-7XXX | யமஹா பேஸ் | 2018 |
| XV-3XXX | TVS ஸ்கூட்டி பெப் | 2012 |

**பார்வையிடல் - ஏலவிற்பனை நிலையத்தில் 2024 மார்ச் 23 சனி மற்றும் 24 ஞாயிறு தினங்களில்**
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- நுழைவு : ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன் மீள செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- கொடுப்பனவுகள் : விற்பனை முடிவின் போது மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐ 2024 மார்ச் 28ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விலத்திக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- முகாமை / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®**
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

011 2671468
www.sandslanka.com



OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your Ad For Better Offers

# ஐ.பி.எல். இன்று ஆரம்பம்

உலகின் மிகப்பெரிய டி20 லீக் கிரிக்கெட் தொடரான 17 ஆவது இந்திய பிரீமியர் லீக் தொடர் இன்று (22) ஆரம்பமாகிறது.

நடப்புச் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கு இடையே சென்னையில் இரவு 8.00 மணிக்கு நடைபெறும் போட்டியுடனேயே இந்த ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 19 மற்றும் ஜூன் முதலாம் திகதிக்கு இடையே இந்திய பொதுத் தேர்தல் நடைபெறவிருப்பதால் தொடரின் முழு போட்டி அட்டவணையும் இன்னும் வெளியிடப்படவில்லை.

முதல் இரு வாரங்களுக்கான போட்டி அட்டவணையை வெளியிட்டிருக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, எதிர்காலத்தில் எஞ்சிய அட்டவணையை வெளியிடுவதாக குறிப்பிட்டுள்ளது.

இதில் ஆடும் பத்து அணிகளும் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அணியும் 14 குழுநிலை போட்டிகளில் ஆடும். இதன்போது ஓர் அணி தனது குழுவில் உள்ள அணியுடன் ஒரு முறையும் மற்றக் குழுவுடன் இரண்டு முறையும் மோதும். ஒற்றை புள்ளிப்பட்டியல் அடிப்படையிலேயே முடிவுகள் சேர்க்கப்படும்.

தொடர்ந்து குழுநிலையில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை பெறும் அணிகள் இறுதிப் போட்டிக்காக மோதும் ஆட்டத்துடன் பிளேஓப் போட்டிகள் ஆரம்பிக்கும். பின்னர் மூன்று மற்றும் நான்காவது இடங்களை பிடிக்கும் அணிகள் மோதும் அதில் தோல்வியுறும் அணி வெளியேறுவதோடு வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற முதல் பிளேஓபில் தோற்ற அணியை எதிர்கொள்ளும்.



# இராணுவ தடகள போட்டி இன்று



இலங்கை இராணுவ படையணிகளுக்கு இடையிலான 59ஆவது தடகள விளையாட்டுப் போட்டி இன்று (22) தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டியின் ஆரம்ப விழா இராணுவ பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் ஹரேந்திர பீரிஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

59 ஆவது இலங்கை இராணுவ படையணிகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் 21 படையணிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 575 வீர, வீராங்கனைகள் 26 போட்டி நிகழ்வுகளில் பங்கேற்கின்றனர். கடந்த முறை இந்த விளையாட்டுப் போட்டியில் ஐந்து புதிய தேசிய சாதனைகள் படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை–பங்களாதேஷ் மோதும் டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி சில்ஹட்டில் இன்று (22) ஆரம்பமாகவுள்ளது.

அனுபவம் மிக்க அணியுடன் பங்களாதேஷுக்கு எதிராக கடந்த காலங்களில் தொடந்து ஆதிக்கம் செலுத்தி வந்த சூழலிலேயே இலங்கை அணி இந்த டெஸ்ட் தொடரை எதிர்கொள்ளவுள்ளது.

பங்களாதேஷுக்கு எதிராக இதுவரை டெஸ்ட் தொடர் ஒன்றை தோற்காத இலங்கை அணி அந்த அணியுடன் ஆடிய 24 டெஸ்ட் போட்டிகளில் 18இல் வென்று ஒன்றில் மாத்திரம் தோல்வியை சந்தித்துள்ளது. அணித் தலைவர் தனஞ்சய டி சில்வாவுடன் அனுபவ வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ், திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமால் என பலமான துடுப்பாட்ட வரிசையுடன் பிரபாத் ஜனசூரிய, லஹிரு குமார ஆகியோர் பந்துவீச்சில் பலம்சேர்க்கின்றனர்.



கடைசி நேரத்தில் இலங்கை டெஸ்ட் குழாத்தில் வனிந்து ஹசரங்க சேர்க்கப்பட்டபோதும் ஐ.சி.சி. தடையால் அவரால் ஆட முடியாதது அணிக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது.

பங்களாதேஷ் அணியில் அனுபவ வீரர் முஷ்பீகுர் ரஹீம் காயத்தால் இந்தத் தொடரில் இருந்து விலகியது பெரும் பின்னடைவாகும். எனினும் சொந்த மண்ணில் ஆடுவதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள பங்களாதேஷ் முயலும்.

# மைலோ கால்பந்து சம்பியன்சிப்பில் கிளிநொச்சியிலிருந்து 11 அணிகள்

வட மாகாணத்தின் மைலோ கால்பந்து சம்பியன்சிப் தொடரின் இறுதிச் சுற்றில் ஆடுவதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 10 மற்றும் 12 வயதுக்கு உட்பட்ட 11 ஆடவர் மற்றும் மகளிர் பாடசாலை அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திற்காக கடந்த மார்ச் 16 ஆம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டியில் மொத்தம் 22 அணிகள் பங்கேற்றன. இதில் 12 மற்றும் 10 வயதுக்கு உட்பட்ட ஆடவர் பிரிவுகளில் இரணைதீவு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணிகள் வெற்றியீட்டின.

12 வயதுக்கு உட்பட்ட மகளிர் பிரிவில் விவேகானந்தா மகா வித்தியால அணி வெற்றிபெற்ற நிலையில் 10 வயது பெண்கள் பிரிவில் திருவையாறு மகா வித்தியாலயம் அணி வெற்றிபெற்றது.



மைலோ கால்பந்தாட்ட சம்பியன்சிப் இறுதிச் சுற்றுப்போட்டி நாளை (23) யாழ்ப்பாணம் துரையப்பா அரங்கில் நடைபெறவுள்ளது.

# ஹசரங்கவின் டெஸ்ட் தேர்வு குறித்து இலங்கை கிரிக்கெட் சபை விளக்கம்

வனிந்து ஹசரங்க ஓய்வில் இருந்து இலங்கை டெஸ்ட் குழாத்திற்கு அழைக்கப்பட்டது அவர் டி20 உலகக் கிண்ணத்தில் போட்டித் தடை ஒன்றை தவிர்ப்பதற்கான சூழ்ச்சியல்லவென்று இலங்கை கிரிக்கெட் சபை விளக்கம் அளித்துள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு ஹசரங்கள் அழைக்கப்பட்டு சில மணி நேரத்தின் பின் அவருக்கு ஐ.சி.சி. போட்டித் தடை விதித்தது. அது முதல் வரும் டெஸ்ட் போட்டியா




யின் இரண்டு போட்டிகளுக்கு பொருந்துவதாக இருந்தது.

பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் நடுவருடன் மோதலில் ஈடுபட்டதற்காகவே ஹசரங்கவுக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டது. இதில் அவர் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் ஆடாத பட்சத்தில் எதிர்வரும் டி20 உலகக் கிண்ணத்தில் நான்கு போட்டித் தடைகளை எதிர்கொள்ள நேர்ந்திருக்கும்.

எனினும் ஹசரங்க கடந்த மார்ச் 16 ஆம் திகதி அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றில் டெஸ்ட் போட்டிகளில் ஆட தனது விருப்பத்தை வெளியிட்டிருந்ததாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை தேர்வுக் குழு உறுப்பினரான அஜந்த மெண்டிஸும், இந்த சம்பவத்திற்கு முன்னதாக ஹசரங்க டெஸ்ட் ஆடுவதற்கு விருப்பத்தை வெளியிட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

'கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு முன்னரே மீண்டும் டெஸ்ட் போட்டியில் ஆட விரும்புவதாக அவர் எம்மிடத்தில் குறிப்பிட்டிருந்தார்' என்று மெண்டிஸ் கிரிக்கின்போ இணையதளத்திற்கு தெரிவித்துள்ளார்.

'இது எப்படி பார்க்கப்படும் என்பது எமக்குத் தெரியும், ஆனால் கடைசி ஒருநாள் போட்டிக்கு முன்னதாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலின் உக்கிர தாக்குதலுக்கு மத்தியில் காசாவில் அவசர போர் நிறுத்தத்திற்கு அமெரிக்கா புதிய தீர்மானம்

## கட்டார் பேச்சில் முன்னேற்றமில்லை: மேற்குக்கரையில் 8 பலஸ்தீனர் பலி

காசாவில் இஸ்ரேலின் உக்கிரத் தாக்குதல்கள் நேற்று (21) 167 ஆவது நாளாகவும் தொடர்ந்ததோடு போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் இன்றி நீடிக்கும் சூழலில், அவசர போர் நிறுத்தத்தை கோரும் நகல் தீர்மானம் ஒன்றை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது.

பணயக்கைதிகளின் விடுதலையைப் பெறும் வகையிலும் தீர்மானத்தை அமைத்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் கூறியுள்ளார். உலக நாடுகள் அதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

சவூதி அரேபியாவுக்குச் சென்ற அவர் போர் நிறுத்தத்தை எட்டுவதற்கான இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். காசாவில் போர் ஆரம்பித்ததில் இருந்து ஆறாவது முறையாக அவர் மத்திய கிழக்கு வட்டாரத்துக்கு சென்றுள்ளார்.

இஸ்ரேலின் முக்கிய கூட்டாளியாக இருக்கும் அமெரிக்கா காசா விவகாரத்தில் முன்னர் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் மீது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியது. எனினும் அண்மைய வாரங்களில் அது போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இஸ்ரேலுக்கு அழுத்தங்களை அதிகரித்துள்ளது.

முன்னதாக கடந்த பெப்ரவரியில் அல்ஜீரிய கொண்டுவந்த அவசர போர் நிறுத்தத்திற்கான தீர்மானத்தின் மீது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்திய அமெரிக்கா மாற்று நகல் தீர்மானம் ஒன்றை கொண்டுவர முயற்சித்து வந்தது.

இந்த மாற்றுத் தீர்மானத்தில் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு பகரமாக ஆறு வார போர் நிறுத்தம் ஒன்று பற்றி வலியுறுத்தப்பட்டிருக்கும் நிலையில் பாதுகாப்புச் சபையின் ஆதரவு கிடைப்பதற்கு குறைவான வாய்ப்பே இருப்பதாக இராஜ



தந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இது வாக்கெடுப்புக்கு விடப்படும் திகதி பற்றிய விபரம் வெளியாகவில்லை.

இந்நிலையில் ஆரம்பத்தில் சவூதி அரேபியா சென்று அந்நாட்டு முடிக்குரிய இளவரசரை சந்தித்த பிளிங்கன் தொடர்ந்து எகிப்து சென்று அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து விட்டு இஸ்ரேல் செல்லவுள்ளார்.

கட்டாரில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ள போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்று வரும் நிலையிலேயே அமெரிக்காவின் இந்த நகல் தீர்மானம் வெளியாகியுள்ளது.

எனினும் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு ஹமாஸ் அமைப்பு சமர்ப்பித்த முன்மொழிவுக்கு இஸ்ரேல் பாதகமாக பதில் அளித்திருப்பதாக மூத்த ஹமாஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

'முன்மொழிவு தொடர்பில் ஆக்கிரமிப்பாளர்களின் நிலைப்பாடு பற்றி எமது சகோதரர்களுக்கு மத்தியஸ்தர்கள் செவ்வாய்க்கிழமை மாலை தகவல் அளித்திருந்தனர்… பொதுவாக பாதகமான பதிலே கிடைக்கப்பெற்றிருப்பதோடு கோரிக்கைகள் தொடர்பில் பதிலளிக்கப்படவில்லை… உண்மையில், இது மத்தியஸ்தர்கள் முன்னர் வழங்கிய ஒப்புதலை திரும்பப் பெறுவதாக உள்ளது' என்று பெய்ரூட்டில் புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஒசாமா ஹம்தான் தெரிவித்துள்ளார்.

32,000 தாண்டிய உயிரிழப்பு

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் 100க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்மூலம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 32 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

'நாம் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தபோது குண்டு வெடிப்புகள் கேட்க ஆரம்பித்தன' என்று காசா குடியிருப்பாளரான மஹ்மூத் அபூ அரார் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். தெற்கு நகரான ரபா மீது புதன்கிழமை இரவு இஸ்ரேல் சரமாரித் தாக்குதலை நடத்தியதை அடுத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெடிப்புகள் பூகம்பம் போன்று இருந்ததோடு இடிபாடுகளில் இருந்து சடலங்களை தோண்டி எடுக்க வேண்டி இருந்தது என்றும் அவர் விபரித்தார்.

தற்போதைய மோதலின் மையப்புள்ளியாக காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனை மாறியுள்ளது. இங்கு பலஸ்தீன போராளிகள் மறைந்திருப்பதாக குற்றம்சாட்டும் இஸ்ரேல் நான்கு நாட்களுக்கு மேலாக கடும் தாக்குதலை நடத்தி வருகிறது. நேற்று 140க்கும் அதிகமான போராளிகளை கொன்றதாக இஸ்ரேல் கூறியது.

எனினும் இஸ்ரேலிய போர் விமானங்கள் இந்த மருத்துவமனையை சூழவிருக்கும் குடியிருப்பு பகுதிகள் மீதே கடுமையான தாக்குதல்களை நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மருத்துவமனையில் நோயாளிகள் மத்திரமன்றி ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். இங்குள்ள மக்களை தெற்கை நோக்கி வெளியேறும்படி இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாமில் வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. காசாவில் சிவில் கட்டமைப்பு பெரும்பாலும் வீழ்ச்சி கண்டிருப்பதோடு 2.4 மில்லியன் மக்கள் தொகை கொண்ட அந்தப் பகுதி பஞ்சம் ஒன்றை நெருங்கி இருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

காசா மோதலுக்கு மத்தியில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றம் அதிகரித்துள்ளது. அங்குள்ள நூர் ஷம்ஸ் அகதி முகாமில் இஸ்ரேல் நேற்று நடத்திய சுற்றிவளைப்பில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நூர் ஷம்ஸ் முகாமில் இஸ்ரேலினால் கொல்லப்பட்ட 18 வயது இளைஞர் ஒருவரின் உடலை பலஸ்தீன செம்பிறைச் சங்கம் எடுத்துச் சென்றது' என்று அந்த அமைப்பு எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதில் வான் தாக்குதல்களால் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் இருவர் துப்பாக்கிச் சூட்டில் பலியாகி இருப்பதாக செம்பிறை சங்கம் கூறியது.

இதன்படி ஆக்கரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் கடந்த 24 மணி நேரத்திற்குள் எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஜெனின் நகரில் கார் ஒன்றின் மீது கடந்த புதன்கிழமை இரவு நடத்தப்பட்ட வான் தாக்குதலில் இரு இஸ்லாமிய ஜிஹாத் போராட்டக் குழுவின் தளபதிகள் உட்பட மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ரமல்லாவில் அல் அமரி அகதி முகாமில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மேலும் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் ஏழாம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக்கரையில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் குடியேற்றவாசிகளின் தாக்குதலில் 430க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

சபாநாயகருக்கு எதிரான பிரேரணை

# அரசை நெருக்கடிக்குள்ளாக்கும் எதிர்க்கட்சியின் மற்றுமொரு சதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாரிய வீழ்ச்சிக்குப் பின்னர் நாடு பொருளாதாரத்தில் தலை தூக்கும் நிலையில், மீண்டும் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க வே,சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ளதாக வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க அண்மைக்காலமாக எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதனால்தான்,சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் செயற்படுவதாகவும் அவர் சபையில் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு பேரவையில் வாக்கெடுப்பு கோரப்படும் போது, முன்மொழிவுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் அல்லது எதிராக வாக்களிக்க வேண்டும். ஆனால், வாக்களிப்பை தவிர்க்க முடியாது என்பதை சுட்டிக்காட்டி அமைச்சர்,பேரவையின் இரு உறுப்பினர்கள் அரசியலமைப்பை மீறி செயற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

இறந்து மீண்டும் பிறந்ததைப் போன்றே எதிர்க்கட்சியினர் செயற்படுகின்றார்கள். 2017 ஆம் ஆண்டு அவர்களது அரசாங்க காலத்தில் மாகாண சபைத் தேர்தல் திருத்தத்தை நெருக்கடிக்குள்ளாக்கி,மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறித்தனர்.

அவர்களின் முறையற்ற செயற்பாடுகளால் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டது. இவர்களே, இன்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் மக்களின் ஜனநாயக உரிமை பற்றி பேசுகிறார்கள்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் இயற்றப்பட்ட விதம்,பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் சபாநாயகர் வாக்களித்த விதம் என்பனவற்றை பிரதான குற்றச்சாட்டுக்களாக எதிர்க்கட்சியினர் உள்ளடக்கியுள்ளனர்.

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே சபாநாயகர் செயற்பட்டார். சட்டமா அதிபரின் ஆலோசனைகள் தவறு என்று குறிப்பிட்டு பிறிதொரு நபரிடம் சட்ட ஆலோசனையை சபாநாயகரால் கேட்க முடியாது. சட்டமா அதிபருக்கு அப்பாற்பட்டு ஆலோசனை கோருவதாக இருந்தால் பிரதம நீதியரசரிடமே ஆலோசனை கோர வேண்டும் அது நடைமுறைச் சாத்தியமற்றது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய திருத்தங்கள் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் அறிவுறுத்தியதன் பின்னரே சபாநாயகர் சட்டத்தை சான்றுப்படுத்தினார். அரசியலமைப்பின் பிரகாரமே சட்டம் இயற்றப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் சான்றளித்ததன் பின்னர் சட்டத்தில் கைச்சாத்திடாமல் சபாநாயகரால் இருக்க முடியாது.நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் ஒருசில விடயங்களை திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வெகுவிரைவில் திருத்தச் சட்ட வரைவு சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் பற்றி பேசப்படுகிறது.அரசியலமைப்பு பேரவையில் ஒரு நியமனம் தொடர்பில் வாக்கெடுப்புக் கோரப்படும் போது அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் அல்லது எதிராக வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பை தவிர்க்கும் உரிமை அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களுக்கு கிடையாது.

அரசியலமைப்பு பேரவையின் சட்ட வழிமுறைகளை நன்கு அறிந்த அதன் உறுப்பினர்கள் சட்டங்களை மீறியுள்ளார்கள்.

# கோப் குழுவிலிருந்து டிலான் பெரேராவும் இராஜினாமா

சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கோப் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து தாம் இராஜினாமா செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா சபாநாயகருக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோபா குழுவின் தலைவராக ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.அவரும் குழுவின் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுக்கிறார்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப்) எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தார்கள். எனினும் சாதகமான தீர்மானம் அதற்காக வழங்கப்படவில்லை.

இவ்வாறான பின்னணியில் கோப் குழுவின் தலைவராக ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.இந்த நியமனத்துக்கு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவரின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் சிறந்த நிலைப்பாடு கிடையாது. எனவே முரண்பாடான செயற்பாடுகளை கருத்திற் கொண்டு கோப் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து தாம் விலகிக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

கோப் குழுவின் தலைவராக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து,அக்குழுவின் உறுப்பினர்களான அனுர குமார குமார திஸாநாயக்க,டிலான் பெரேரா, துமிந்த திஸாநாயக்க,தயாசிறி ஜயசேகர,எரான் விக்கிரமரத்ன,எஸ்.எம்.மரிக்கார்,ஹேஷா விதானகே,சாணக்கியன் இராசமாணிக்கம்,சரித ஹேரத் ,காமினி வலேகொட ஆகியோர் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விற்பனைக்கிருந்த காரை கொள்ளையிட்ட சந்தேகநபர்

ஹொரணயில் உள்ள மென்பொருள் பொறியியலாளர் ஒருவர் இணையத்தில் வெளியிட்ட விளம்பரத்துக்கமைய, 33 இலட்சம் ரூபா பெறுமதியான கார் ஒன்றை கொள்வனவு செய்ய வந்த ஒருவர் அதனை பரீட்சார்த்த ஓட்டம் செய்வதாக கூறி கொள்ளையடித்துச் சென்றுள்ளார். காரை கொள்ளையடித்த நபர் 04 நாட்களுக்கு பின்னர் வாத்துவ வெரகமவில் கைது செய்யப்பட்டதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிசிடிவி கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆராய்ந்த பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கடந்த 17ஆம் திகதி காரை வாங்குவதாகக் கூறியதுடன் அதனை பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்று காரின் உரிமையாளரிடம் தெரிவித்துள்ளார். காரை ஓட்டிச்சென்ற அவர் ஹொரண கனன்வில வீதியில் மயானத்துக்கு அருகில் காரின் இயந்திரத்தில் கோளாறு என தெரிவித்து கரை நிறுத்தியுள்ளார்.

சாரதி ஆசனத்திலிருந்த சந்தேகநபர் முன்பக்க போனட்டைத் திறப்பதற்கான காரின் உட்பக்க பொத்தானை அழுத்தியுள்ளார். உரிமையாளர் இடது புறக் கதவைத் திறந்து காரில் இருந்து இறங்கி இன்ஜின் பக்கம் நோக்கிச் சென்றபோது, சாரதி இருக்கையிருந்த சந்தேக நபர் காரை அதிவேகமாக ஓட்டிச் சென்றுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக ஹொரண பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக, ஹொரண கனன்வில தொடக்கம் வாதுவ வரையான சுமார் 20 சிசிடிவி காட்சிகள் ஆராயப்பட்டு சந்தேக நபர் காரில் சென்ற பாதை அடையாளம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து சந்தேகநபர் காருடன் அவரது வீட்டில் வைத்து பொலிஸார் கைது செய்யத்துள்ளனர்.

## ரவி கருணாநாயக்க யாழ். விஜயம்



முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது யாழ். ஆயர் இல்லத்துக்குச் சென்ற அவர், யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினார். இச் சந்திப்பின் போது பிடிக்கப்பட்ட படம்

நம்பிக்கையில்லா பிரேரணை மீதான

# மூன்று நாள் விவாதத்துக்கு 4.5 கோடி ரூபா செலவு

சபாநாயகர் சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்ற மூன்று நாட்களுக்கு 4.5 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். நாடு தற்போதுள்ள நிலையில் இது தாங்கிக்கொள்ள முடியாத செலவு எனத் தெரிவித்த சபாநாயகர், 40 வருடங்களாக கொள்கையின் அடிப்படையில் மட்டுமே செயற்பட்டதாகவும் எவரது அடியாளாகவும் செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகருக்கு எதிராக எதிர்கட்சிகளினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையிலாப் பிரேரணை பாராளுமன்றத்தில் கடந்த 3 தினங்களாக விவாதத்திற்கு எடுக்கப்பட்டு நேற்று வாக்கெடுப்பிற்குவிடப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து விடுத்த விசேட அறிவிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபாநாயகர் மேலும் தெவிக்கையில்,

2022ல் சபாநாயகராக நான் எப்படி பல சிக்கலான சவால்களை எதிர்கொண்டேன் என்பதை நீங்கள் அனைவரும், குறிப்பாக நமது இளம் தலைமுறையினர் மறக்கவில்லை என்று நினைக்கிறேன். நாடு அராஜகமாக இருந்த நேரத்தில், இலங்கையின் அரசியலமைப்பைப் பின்பற்றி சபாநாயகர் என்ற முறையில் எங்கள் பாராளுமன்றத்தைப் பாதுகாக்க எனது உயிரைப் பணயம் வைத்தேன்

சிலர் பாராளுமன்றத்தை அழிக்கும் நோக்கில் மிக அருகில் வந்ததால் , கட்சித் தலைவர்கள் விரைவாக அப்பகுதியை விட்டு வெளியேறினர், ஆனால் நான் மட்டும் இதில் தங்கியிருந்தேன். அதிர்ஷ்டவசமாக, அதைத் தடுக்கவும், பெரும் அழிவை நிறுத்தவும் முடிந்தது. அரசை செயலிழக்கச் செய்யும் திட்டம் முறியடிக்கப்பட்டது இல்லை என்றால் இன்று உங்களால் நம்பிக்கை வாக்கெடுப்பை கொண்டு வந்திருக்கவும் முடியாது, என்னால் அதை எதிர்கொண்டிருக்கவும் முடியாது, இந்த பாராளுமன்றம் இருந்திருக்கவும் முடியாது.

நீங்கள் என்னை சபாநாயகர் பதவிக்கு ஏகமனதாக நியமித்த நாள் முதல், பாராளுமன்ற ஜனநாயகத்திற்காகவும், இலங்கைக் குடியரசின் உயிர்வாழ்விற்காகவும் நான் எனது முழு ஆற்றலுடன் பணியாற்றி வருகிறேன்.

ஜனாதிபதியின் அழுத்தத்தால் சில முடிவுகளை நான் எடுத்ததாக சிலர் தொடர்ந்து குற்றம் சாட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். ஜனாதிபதி எனது நீண்டகால நண்பர் என்பது உண்மையே. எவ்வாறாயினும், 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில், நாங்கள் இருவரும் முற்றிலும் மாறுபட்ட இரண்டு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தோம். ரணில் விக்கிரமசிங்க எனது நண்பர், நாங்கள் இணைந்து நாட்டுக்காக சில பணிகளை செய்திருந்தாலும், அவர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் பெற்ற பிறகு சட்டமன்றத் தலைவர் என்ற முறையில் எனக்கு எந்த அழுத்தத்தையும் கொடுக்கவில்லை. கடந்த 40 வருடங்களாக மகிந்த யாப்பா அபேவர்தன வாக்கிய நான் கொள்கைகளை தவிர வேறு யாருடைய அரசியல் கைக்கூலியாக இருக்கவில்லை என்பதை ஜனாதிபதி உட்பட அனைவரும் நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள்

எனது ஒரே கவலை என்னவென்றால், நம்பிக்கையில்லாத் பிரேரணையால் பாராளுமன்ற அமர்வுகளின் இந்த மூன்று நாட்களுக்கு கிட்டத்தட்ட 4.5 கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளது அது நம்மைப் போன்ற ஒரு நாட்டுக்குக் கட்டுப்படியாகாது.

பாராளுமன்றத்திலுள்ள 225 பெரும் திருடர்கள், ஊழல்வாதிகள் என குற்றச்ச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் நிலையில் பாராளுமன்றத்தில் அரசு மற்றும் எதிர்க்கட்சியில் இருந்து நீங்கள் யாரும் என்மீது ஊழல் குற்றச்சாட்டை முன்வைக்காததை 4 தசாப்தங்களுக்கும் மேலாக எனது அரசியல் வாழ்க்கையில் நான் பெற்ற மிகப்பெரிய கெள ரவமாக கருதுகிறேன் என்று கூறியதுடன் மேலும் பல விடயங்களையும் அவர் சபையில் தெரிவித்தார்.

# மத்திய மாகாணத்தில் இன்று 160 பேருக்கு ஆசிரிய நியமனம்

ஆளுநர், கல்வியமைச்சருக்கு நன்றிகள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மத்திய மாகாணத்தில் 160 பேருக்கு இன்று ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் நேற்று சபையில் தெரிவித்தார்.

இதற்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்கிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் மத்திய மாகாண ஆளுநருக்கு நன்றி தெரிவிப் பதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

கல்வியியற் கல்லூரியில் மூன்று மொழிகளை யும் சேர்ந்த ஆசிரிய பயிற்சியாளர்களுக்கு பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. தற்போது விடைத்தாள் திருத்தப் பணிகள் இடம் பெற்று வருவதாகவும் இராதாகிருஷ்ணன் எம்பி சபையில் தெரிவித்த போது, அவர்களுக்கான நியமனத்தை அடுத்த வாரத்தில் வழங்க முடியும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கல்விக் குழுவின் தலைவர் என்ற வகையில் அது தொடர்பான விடயங்களை நேற்று சபையில் சமர்ப்பிக்கும் போதே இராதாகிருஷ்ணன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.


## கேள்வி அழைப்பு

**தெரனியகல பிரதேச சபை**

தெரனியகல பிரதேச சபையின் வாகனங்களை நிறுத்தி வைத்தலை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான இடைக்கால யாப்பின் பிரகாரம் பொது நிறுத்துமிடத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக கட்டணத் தொகை அறவிடுதல்

**கேள்வி கோரல்**

| தொடர் இல. | வேலை விடயம் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு (ரூ.) | குறைந்த பட்ச கேள்வித் தொகை (ஒரு மாதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 01. | தெரனியகல பிரதேச சபையின் வாகனங்களை நிறுத்தி வைத்தலை கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான இடைக்கால யாப்பின் பிரகாரம் பொது நிறுத்துமிடத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டளைத் தொகையை அறவிடல் | ரூ. 2000,00 | ரூ. 8,000.00 | ரூ. 25,000.00 |

I. கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித்திகதி :2024.04.04 பி.ப. 2.30 வரை
II. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் :2024.04.05 மு.ப. 10.00 வரை
III. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் :2024.04.05 மு.ப. 10.30 இற்கு

1. தெரனியகல பிரதேச சபையின் வாகனங்களை நிறுத்தி வைத்தலை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான இடைக்கால யாப்பின் பிரகாரம் பொது நிறுத்துமிடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்காக கட்டணத் தொகையை அறவிடல் 2024.04.08 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.
2. இவ் அலுவலகத்தில் கூடும் பெறுகைக் குழுவின் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்வி விண்ணப்பதாரிகளுக்கு அல்லது அவர்களது எழுத்து மூல அனுமதியுடைய பிரதிநிதிகளுக்கு சமுகமளிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.
3. இதுபற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் தெரனியகல பிரதேச சபை அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது தொ.பே. இல. 036-2249275ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆர். டீ. நவீன் புஷ்பகுமார**
**செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி,**
**தெரனியகல பிரதேச சபை.**

2024.03.20
**தரனியகல பிரதேச சபை.**



**எனது இல: BD/LG/LND/2/9/4**
**காணி அமைச்சின்**
**இல.: 4-3/8/2016/PC/205**
**லுணுகலை பிரதேச செயலகத்தில்**
**2024.03.20**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி சுவீகரித்தல் 7வது பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

இங்கு கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியினை அரசு பொறுப்பேற்க உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2024ஆம் ஆண்டு சனவரி மாதம் 24ஆம் திகதி இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் 2368/23ஆம் இலக்க IIIஆம் பிரிவைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : ஊவா |
| மாவட்டம் | : பதுளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : லுணுகலை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 90ஏ மில்லபெத்த |
| கிராமம் | : மில்லபெத்த |
| இடத்தின் பெயர் | : ஹொப்டன் (0.4535 ஹெக்டெயார்) |
| கடத்திரல் வரைபட இல. | : 710177 |
| தொகுதி இல. | : 01 |
| தாள் இல. | : 01 |
| துண்டு இல. | : 1 |

**எஸ். புவனேந்திரன்**
**பிரதேச செயலாளர்,**
**லுணுகலை.**



## கைத்தொழில் அமைச்சு

**தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (NEDA)**
**(National Enterprise Development Authority)**

**பிராந்திய தொழில்முயற்சியாளர்களுக்கான விருது வழங்கும் விழா – 2024**

நாட்டின் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரிவிற்கான விஷேட முக்கியத்துவத்துடன் இலங்கையில் ஊக்கப்படுத்தும், ஆதரவு வழங்கும் , உற்சாகப்படுத்தும் மற்றும் வசதிகளை வழங்கும் தொழில்முயற்சி அபிவிருத்தியானதும் கைத்தொழில் அமைச்சின் ஆதிக்க வரம்பின் கீழ் செயற்படும் முக்கியமான அரசாங்க அமைப்பே தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையாகும். பின்வருவன அடங்கலாக ஆனால் வரையறுக்கப்படாத, தொழில்முனைவு அபிவிருத்தி, நிதியிடல் வசதி சந்தைப்படுத்தல் தொடர்புகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றை தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குநர்களுக்கும் நாங்கள் சேவைகளை வழங்குகின்றோம்.

மேலேயுள்ள இலக்குகளின் ஒரு பகுதியாக NEDA ஆனது அவர்களை தேசிய மட்டத்திற்கு உயர்த்துவதற்காகவும் அதற்கு அப்பாலும் உயர்த்துவதற்கான உத்தேசத்துடன் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அதியுயர்ந்த பங்களிப்பை வழங்கியவர்களுக்காக அங்கீகரிப்பதற்கும், விருது வழங்கவும் மற்றும் தொழில்முயற்சியாளர்களை உற்சாகப்படுத்தியவர்களுக்காக பிராந்திய தொழில்முயற்சியாளர்கள் விருது வழங்கும் விழாவொன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கமைவாக ஐந்து (5) விருது வழங்கும் விழாக்கள் (சப்ரகமுவ, வட மத்திய, மத்தி, வட மேல் மற்றும் மேல் மாகாணங்கள்) 2024 ஆம் ஆண்டில் பின்வருவனவற்றிற்காக நடைபெறவுள்ளது.

- மாகாண மட்டத்தில் முதன்மையான தொழில்முயற்சியாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு விருது வழங்கல் .
- மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக அவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல் அத்துடன் அவர்களுக்கு தேவையான ஆதரவை வழங்குவதன் மூலம் அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துதல்.
- அவர்களின் உரித்தான வியாபார துறைகளில் இவ்வகையான சாதனைகளை அடைவதற்காக அவர்களை தூண்டுதல்.

இந்த முயற்சியானது வெற்றியை தருவதற்காக மாவட்ட வர்த்தக சம்மேளனங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுள்ள தனியார் துறை அமைப்புக்களிடமிருந்து இவ்வாறான விழாக்களை ஒழுங்குபடுத்தவும் தேவையான ஆதரவை நாடுவதுடன் முன்மொழிவுகள் தகுதியானவர்களிடமிருந்து அழைக்கப்படுகின்றன.

முன்மொழிவுகள் பதிவுத் தபாலில் 2024.04.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Regional Entrepreneur Awards – 2024”** என குறிப்பிடப்படல் வேண்டும்.

‘திட்ட விளக்கம்’ மற்றும் மேலதிக தகவலுக்காகவும் 0777 202214 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக Ms. Champika Bandara உடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர் / பணிப்பாளர் நாயகம்**
**தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**
**இல.: 561/3, எல்விட்டிகல வீதி**
**கொழும்பு-05.**
**தொலைபேசி : 0112 370091,**
**மின்னஞ்சல் : navanakanthi.c@neda.gov.lk, neda.champika@gmail.com**
**இணையம் : httpd://neda.gov.lk /**

## விலைக் கோரலுக்கான அழைப்பு (IFB)

# மேல் மாகாண சபை – பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் / பணிப்பாளர் (கட்டிடங்கள்) பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
   II. 03/2020ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை இந்தப் பெறுகைக்கு ஏற்புடையது.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/PU/ CON/24/109 | மேமா/கம்/கிரிந்திவிட்ட கெமுனு க. வி. - 110'×20' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 2,760,673.25 | இல்லை | C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 17>000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 34,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515 |
| 2 | WP/PU/ CON/24/110 | மேமா/நீர்/அல் ஹிலால் ம.வி. - 90'×25' மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் | 8,007,044.17 | ஆம் | C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | நீர்கொழும்பு பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 75, லூவிஸ் பிளேஸ், நீர்கொழும்பு, தொலைபேசி-: 0312232357 |
| 3 | WP/PU/ CON/24/111 | மேமா/மினு/தனோவிட்ட சித்தார்த்த ம.வி. - தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் | 5,509,475.60 | ஆம் | C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 34,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 68,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட. வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட. தொலைபேசி இல. 0112-296418 |
| 4 | WP/PU/ CON/24/112 | ஹன்சபொலயில் உள்ள ஆயுர்வேத மத்திய மருந்தகக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 5,201,514.65 | ஆம் | C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 33,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 66,000.00 | |
| 5 | WP/PU/ CON/24/113 | மேமா/மினு/பட்டலீய க.வி. - 80′×40′ "U" வடிவிலான கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 4,871,708.59 | இல்லை | C7 மற்றும் C6 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 60,000.00 | |
| 6 | WP/PU/ CON/24/114 | திவுலப்பிட்டிய பிரதேச வைத்தியசாலையில் உள்ள பழைய சிறுவர் வார்டின் புதுப்பித்தல் வேலைகள், சிகிச்சை கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் மற்றும் நிறப்பூச்சு பூசுதல் | 15,949,542.50 | ஆம் | C6 மற்றும் C5 | 5,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 100,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 200,000.00 | |
| 7 | WP/PU/ CON/24/115 | மேமா/கள/பட்டபொல ம.வி. - 70'×25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் | 7,314,314.00 | ஆம் | C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 45,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 90,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுபில வீதி, மாகொல, பியகம. தொலைபேசி: 011-2962091 |
